# உ.வே.சாமிநாதையர் உரைநடை நூல்கள் உணர்த்தும் புலப்பாட்டு நெறி

முனைவர் நா. உசாதேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113

# உ.வே.சாமிநாதையர் உரைநடை நூல்கள் உணர்த்தும் புலப்பாட்டு நெறி

முனைவர் நா. உசாதேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113

உ.வே.சா. அறக்கட்டளைச் சொற்பொழிவு

(அறக்கட்டளை நிறுவியவர்: பலர்)

வரிசை எண் : 11 நாள் : 29-09-2008

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | U.Vē. Sāminātaiyar urainaṭai nūlkaḷ uṇarttum pulappāṭṭu neṟi |
| Author | : | Dr. N. Ushadevi, M.A.(Tamil), M.A.(Gandhian Thought), Ph.D., Dip.(IT)<br>Head of Tamil Department<br>M.D.T. Hindu College, Tirunelveli. |
| General Editor | : | Dr. T. Mahalakshmi<br>Senior Research Fellow<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 603 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2008 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | viii + 112 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 35/- (Rupees Thirty five only) |
| Printed by | : | Abna Traders<br>13, II Cross Street, Ranganathapuram<br>Tambaram West, Chennai - 600 045<br>Ph. 044-22410735 |
| Subject | : | Art of Diction |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு.அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

> பல வருஷங்களாக முயன்று படித்துப் பலருடைய உதவியைப் பெற்று ஆராய்ந்து சுவைத்துப் பார்த்த இந்நூல் இப்பொழுது இந்த உருவத்தில் வெளி வருவதைப் பார்க்கையில் எனக்கு உண்டாகும் இன்பம் எழுதி உணர்த்துதற்கு அரியது (ப. 12)

என உத்தமதானபுரம் வேங்கட சாமிநாதையர் அவர்கள் எழுதியிருப்பதை எடுத்துக்காட்டி அப்போது அவருக்கு அகவை 82 என்றும் களப்பணி, பதிப்புப்பணி, தமிழாசிரியர் பணி என வாழ்நாட்களெல்லாம் தமிழ்ப்பணி ஆற்றியவர் உ.வே.சா. என்றும் பலப்பல அரிய தகவல்களைச் சான்றுகள் காட்டி, பக்கங்கள் தோறும் விளக்கிச் செல்கிறது இந்நூல்.

உ.வே.சாமிநாதையர் உரைநடை நூல்கள் உணர்த்தும் புலப்பாட்டு நெறி என்ற இந்நூல் குறித்த இவரது சொற்பொழிவு மாணவர்களும் ஆய்வாளர்களும் பயன்பெறத்தக்க தகவல்களைக் கொண்டு விளக்கமுற அமைந்துள்ளது.

அறிஞர்களைச் சந்தித்த அனுபவங்கள், பல மடங்களுக்குச் சென்று அங்கிருந்த சுவடிகள், நூல்கள் ஆகியவற்றை அறிந்த முறைகள், ஊர் ஊராகச் சென்று தமிழ் ஆர்வலர்கள் முதல் சாதாரண மக்கள் வரை கண்டு பேசிப்பெற்ற தகவல்கள் மற்றும் தரவுகள் போன்றவற்றை உ.வே.சா. எவ்வாறு தமிழ் உலகுக்குக் கொடையாகத் தந்துள்ளார் என்பன போன்ற தகவல்களைச் சுவைபட இன்றைய தலைமுறைக்குத் தக்கவாறு எளிய நடையில் நூலாசிரியர் தந்துள்ளார்.

உ.வே.சா. அவர்கள் ஏடுகளில் பெற்ற செய்யுளுக்கு விளக்கமாகப் புனைவுக் கட்டுரை (பக். 96-97) தந்துள்ளார். மேலும் அக்கால மருதுசகோதரர்கள் வாழ்க்கை வாழ்ந்த செய்திகள் (99), திருநெல்வேலியில் பெற்ற அனுபவங்கள் (97) எனத் தனித்தனியே பகுத்தும் தொகுத்தும் இந்நூலாசிரியர் விளக்கி இந்நூலில் எழுதியுள்ளார்.

மடங்களை ஒட்டிய வாழ்க்கை வாழ்ந்தவர்கள் திருவாவடுதுறை மேட்டுக்குடி மக்களுக்கு உடுக்கையடித்துப் பாடிக் கதை நிகழ்த்திய நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சியைப் புரிந்துகொள்ள இயலவில்லை எனத் தன் கட்டுரையில் உ.வே.சா. பதிவு செய்திருப்பதை (ப. 104) இந்நூலாசிரியர் சரியாக விளக்கியுள்ளார்.

**கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோல வன்றோ** (104)

**தேளுக்குப் பயந்து பாம்பின் வளையிற்கைவிட்டது போலாயிற்றே**

**குலவிச்சை கல்லாமற் பாகம்படும்**

**புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?**

என்பன போன்ற பழமொழிகளைக் காட்டி உ.வே.சா. எவ்வாறு விளக்கியுள்ளார் என நூலாசிரியர் விளக்கியுள்ளார். விளக்க நடை, வருணிப்பு நடை, உணர்ச்சி நடை, நாடக நடை போன்றவற்றைப் பின்பற்றியுள்ளார் (ப. 106) என நூலாசிரியர் உ.வே.சா.வின் எழுத்து நடையியல் குறித்து எடுத்துக்காட்டி விளக்கியிருப்பது சிறப்புக் குரியதாக உள்ளது.

நல்ல தமிழ்ச் சொற்களை இயன்ற மட்டும் பயன்படுத்தி யுள்ளார். சிறுசிறு தொடர்களாக அமைத்துக்கொண்டார். நாடகப் போக்கில் கட்டுரைகளின் இடையே உரையாடல்களைக் கையாண்டுள்ளார். தன்னுணர்வுக் கட்டுரைகளாக அவை உள்ளன. உளப்பாட்டுப் பன்மையில் வாசகனையும் தன்னுடன் பங்கேற்கச் செய்துள்ளார். உ.வே.சா.வைப் பற்றிக் கூறும் நூலாசிரியரும் அதே முறைமையினைப் பின்பற்றியுள்ளார்.

கதை சொல்லி விளக்குதல், காரண காரியம் காட்டிக் கருத்தினை நிறுவுதல் (மேற்கோள் காட்டுதல்), பேச்சு வழக்கு ஆகிய புலப்பாட்டு உத்திகளை உ.வே.சா. பின்பற்றியுள்ளார் (ப. 109) என நூலாசிரியர் ஆங்காங்கு எடுத்துக்காட்டித் தன் கருத்துகளைச் சேர்த்து விளக்கியிருப்பது சிறப்புக்குரியது.

1878இல் தொடங்கி 1942 வரை அயராது தமிழுக்காக உழைத்த தமிழ்ச் செம்மல் உ.வே.சா. அவர்களை அறிந்துகொள்ளும் ஒவ்வொரு தமிழனுக்கும் இந்த நூல் கூடுதல் துணைசெய்யும் என்பது திண்ணம்.

இச்சொற்பொழிவை ஆற்றிய நூலாசிரியர் நா. உஷாதேவி அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் போன்று, தமிழின் சிறப்புகளைத் தரணி முழுதும் எடுத்தோதி, இந்நிறுவனச் செயல்பாட்டுக்கு மேன்மை ஏற்படுத்திவரும் தமிழக நிதியமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம், செய்தி மற்றும் விளம்பரத்துறை அரசுச் செயலர் திரு க. முத்துச்சாமி இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவின் பொறுப்பாளரும் இந்நிறுவனத்தின் முதுநிலை ஆராய்ச்சியாளருமான முனைவர் தி. மகாலட்சுமி அவர்களுக்கும், இந்நூலின் மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன், கணிப்பொறியாளர் திருமதி ந. லட்சுமி ஆகியோருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த அப்னா டிரேடர்ஸ் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

இயக்குநர்

# ஆசிரியர் குறிப்பு



முதுகலை (தமிழ்), முதுகலை (காந்தியம்), முனைவர் பட்டம் (1985) பெற்றுள்ள நா. உசாதேவி அவர்கள் தகவல் தொடர்பியலில் பட்டயமும் பெற்றுள்ளார். 1971 முதல் பணிபுரியத் தொடங்கிய இவர் தற்போது திருநெல்வேலியிலுள்ள மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றி வருகின்றார்.

இவர் 01-07-1949இல் மதுரையில் பிறந்தவர். பெற்றோர் கு. நாகசுந்தரம், சரசுவதி. மதுரை மீனாட்சி அரசு மகளிர்க் கல்லூரியில் இளங்கலை வகுப்பும், மதுரைப் பாத்திமா கல்லூரியில் முதுகலை வகுப்பும் பயின்றார். **கவியோகி சுத்தானந்த பாரதியாரின் படைப்பிலக்கியம்** என்பது இவரது முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பாகும். கலைபயில் தெளிவும், கட்டுரை வன்மையும் வாய்க்கப் பெற்றவர்; மரபு பிறழாத கவிதைகள் புனையும் திறம்பெற்றவர். வானொலி, தினமலர் ஆகிய தகவல் தொடர்பு ஊடகங்களில் இவரது கவிதைகள் இடம்பெற்று வருகின்றன.

**காந்தியச் சிந்தனைச் சான்றிதழ்ப்** படிப்பினை மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் பணியில் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறார். காந்தியச் சிந்தனைத் தேர்வுக்குழுத் தலைவராகவும் செயல்பட்டு வருகிறார்.

**அகிம்சைச்சுடர்** என்ற நூலினை எழுதி வெளியிட்டுள்ளார். ம.தி.தா. இந்துக் கல்லூரியின் தமிழியல் ஆய்வு மையம் வெளியிடும் **பொதிகை ஆய்வு மலரில்** பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வருகின்றார். அகலிகை வெண்பா, மெய்ப்பாட்டியல் உணர்த்தும் பொருள் புலப்பாட்டுத் திறன், சங்கத்தமிழின் சால்பு, குறளோவியம் காட்டும் சொல்லோவியக் காட்சி, சிவகங்கைச் சீமை சிறுகதைகள், இரும்புக் குதிரைகள், நாவல்திறன், கள்ளிக்காட்டு இதிகாசம் சொல்லிக் காட்டும் வாழ்வியல், உடுக்கடிப் பாடல்களில் உளவியல் போன்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட

கட்டுரைகளை எழுதியுள்ளார். கம்பன் கழகம், உலகத் திருக்குறள் மையம், கண்ணதாசன் இலக்கியப் பேரவை, தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை போன்ற தமிழ் அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றி வருகிறார். உலகத் திருக்குறள் பேரவையின் பொருளாளராக இருந்து வருகிறார்.

திருக்குறள் விருது பெற்றுள்ளார். பட்டிமன்றம், பாட்டு அரங்கம், கருத்தரங்கம் போன்றவற்றில் பங்கேற்றுள்ளார். பல்கலைக்கழகப் பாடத் திட்டக் குழுவிலும், தூய சவேரியர் கல்லூரிப் பாடத் திட்டக் குழுவிலும் உறுப்பினராக இருந்துவருகிறார்.

முப்பத்து மூன்றுபேர் இவரிடம் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். எட்டுப்பேர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். பலருக்கு இணை நெறியாளராகவும் இருந்துவருகிறார். எழுபதுக்கும் மேற்பட்டோர் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றுள்ளனர்.

# பொருளடக்கம்

பக்கம்


உ.வே. சாமிநாதையர் வாழ்வியல் 1

புலப்பாட்டு நெறி 14

உ.வே.சா.வின் கட்டுரைகளில் காணும் புலப்பாட்டு நெறி

1. நல்லுரைக்கோவை 21

2. நினைவு மஞ்சரி (இரண்டாம் பாகம்) 62

3. நான் கண்டதும் கேட்டதும் 94

தொகுப்புரை 108

துணைநூல்கள் 111

# உ.வே.சாமிநாதையர் வாழ்வியல்

## முன்னுரை

உத்தமதானபுரம் வேங்கட சாமிநாதையர் என்னும் உ.வே.சா.வின் பெயர், தமிழர்களால் நன்றியுணர்வுடன் நினைக்கப்பட வேண்டிய பெயராகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தொடங்கிய அவரது அறுபது ஆண்டுகாலப் பேருழைப்பு தமிழுக்குத் தகுதியைப் பெரிதும் வழங்கியது. பழந்தமிழ் இலக்கியப் பெரும் புதையலைக் கண்டெடுத்து அச்சிட்டு வெளிப்படுத்தியது அவர் தமிழ்ச் சமூகத்திற்குச் செய்த மிகப்பெரிய தொண்டாகும். உ.வே.சா. ஏடுகளைத் தேடி அலைந்து எடுத்து அவற்றை அடுக்கித் தொகுத்தது செயற்கரிய செயல். அவர் விழித்திருந்தும், பசித்திருந்தும், சிந்தனையோடு தனித்திருந்தும் செயல்பட்ட காலத்தைக் கணக்கிட்டுக் கூற இயலாது. குறுந்தொகைக்கு உ.வே.சா. உரையெழுதும் போது, அவருக்கு வயது எண்பத்திரண்டு. பழுத்த வயதிலும் பயனுள்ள பணிகளை அயராது உ.வே.சா.போல் செய்தவர்கள் உலகில் எவரும் இல்லை; இதுவெறும் புகழ்ச்சி இல்லை; உண்மைநிலை. 1878 ஆம் ஆண்டில் தொடங்கிய இலக்கியப் பணி 1942 வரை வளர்ந்தது. உ.வே.சா. பல்துறை வித்தகர். செவ்வியல் மரபுக் கவிஞர்; இசைக்கலைஞர்; உரையாசிரியர்; உரைநடை நூல்களின் ஆசிரியர்; பதிப்பாசிரியர்; பேச்சுக்கலை வல்லுநர்; அவர்தம் பன்முக ஆளுமைத் திறனை, அவரது நூல்கள் வழி அறியலாம். அவர் பதிப்பித்த இலக்கியங்கள் 74; வெளியிட்ட உரைநடை நூல்கள் 18; அவர் காலத்துக்குப்பின் பிறர் பதிப்பித்து வெளிவந்த உரைநடை நூல்கள் 3; அவரது குறிப்புரையுடன் வந்தவை 2; பல கட்டுரைகள் அக்கால இதழ்களில் வெளிவந்தவை; சுதேசமித்திரன், ஆனந்தவிகடன், கலைமகள், தினமணி, தாருல் இஸ்லாம், ஜயபாரதி, தினவணிகன், ஆடல்பாடல், ஜோதி, மணிக்கொடி, சில்பஸ்ரீ, ஆனந்தபோதினி, ஹனுமான் போன்ற இதழ்களில் வெளியானவை. இத்தகு ஆற்றல்சால் அறிஞரின் பன்முகப் பணி குறித்துப் பல்வேறு நூல்கள் வெளிவந்துள்ளன. அவர் நூல்களை ஆராய்ந்து அவர்தம் புலப்பாட்டு நெறியைப் புரிந்துகொள்ளலாம். எழுத்திலும் பேச்சிலும் அவருக்கென உருவான மொழித்திறனை உணர்வதற்கு அவர்தம் வாழ்வியலும், காலச்சூழலும் பற்றிய வரலாற்றறிவு இன்றியமையாதது.

## உ.வே.சா.வின் பிறப்பும் வளர்ப்பும்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் 19.2.1855இல் வேங்கடசுப்பையருக்கும், சரசுவதி அம்மாளுக்கும் உத்தமதானபுரம் என்னும்

சிற்றூரில் பிறந்தார். இவர்தம் தந்தையாரின் இசையறிவு, குடும்பத்தின் வறுமையைப் போக்க உதவிற்று. தந்தையார் ஆசாரம் மிக்கவர்; பழங்கால மரபுகளைப் பின்பற்றுபவர்; நல்லொழுக்கம் சான்றவர்; தம் மகனைத் தம்மைப் போலவே இசையில் தேர்ச்சி மிக்கவராக்க விழைந்தார். ஆங்கிலக் கல்வியும் தெலுங்குக் கல்வியும் புகட்ட முனைந்தார். மகனது சிந்தை, இசையை நாடினாலும் ஆங்கிலம், தெலுங்கு போன்ற மொழிகளைக் கற்க ஆர்வம் காட்டவில்லை. அரியலூர்ச் சடகோப ஐயங்கார் இசையுடன், தமிழறிவையும் முதலில் உ.வே.சா.வுக்கு ஊட்டினார். பின்னர், குன்னம் சென்று சிதம்பரம் பிள்ளையிடம் திருக்குறள் போன்ற நூல்களைப் பயின்றார். அங்கிருந்து கார்குடி சென்று கஸ்தூரி ஐயங்காரிடம் நன்னூல், வீரசோழியம் போன்ற இலக்கண நூல்களின் நுட்பங்களை அறிந்தார். அறிந்த இலக்கிய இலக்கணங்களை அக்கால முறைப்படி மனனம் செய்தார். தம் தந்தையாருக்கு உதவியாக இசைக்கதை இசைப்பதில் ஈடுபட்ட இவர், தனித்து இராமாயணம், நந்தன் சரித்திரம் போன்ற இசைக்கதைகளை நடத்தினார். சிதம்பர உடையார் என்னும் புரவலரின் பண உதவியால் 16.06.1868 இல் மதுராம்பாளைத் திருமணம் புரிந்தார்.

திருமணத்திற்குப் பின்னர், குடும்ப நலத்திற்காக, ஆங்கிலம் படித்து, இவர் அரசு வேலை பார்க்க வேண்டும் என இவர் தந்தையார் விழைந்தார். இவரோ "தியாகராச செட்டியாரிடம் படிக்க வழி கேட்டால் இவர் இங்கிலீஷ் படிக்கவல்லவோ உபதேசம் செய்கிறார்? எனக்கு இங்கிலீஷும் வேண்டாம், அதனால் வரும் உத்தியோகமும் வேண்டாம்"[1] எனத் தமிழ்க்காதல் கொண்டு தமிழ் வல்லாரை நாடித் திரிந்தார். அதன்படி, செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் யாப்பருங்கலக்காரிகையைக் கற்றார். உ.வே.சா.வின் தமிழ் ஆர்வத்தையும், அறிவையும் கண்ட அவர், 'நாங்களெல்லாம் மேட்டு நிலத்தில் மழையினால் ஊறுகின்ற கிணறுகள். என்றும் பொய்யாமல் ஓடுகின்ற காவேரி போன்றவர் அவர். அவரிடம் போய்ப் படிப்பதுதான் சிறந்தது'[2] என்று மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் இவரை ஆற்றுப்படுத்தினார்.

### தமிழ்க்கல்வி

1870இல் உ.வே.சா., மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் தமிழ்க் கற்கச் சேர்ந்தார். 1876இல் மகாவித்துவான் இறப்பது வரை, இணைபிரியாது கூடவே இருந்து, தமிழ்க் கடலில் மூழ்கி முத்தெடுத்தார். பல்வேறு அரிய நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். தமிழறிஞர் பலரோடு பழகினார். திருவாவடுதுறை ஆதீனத்தில் உள்ளவர்களோடு ஒன்றி இணைந்தார். இவர் வேங்கடராமன் என்னும் தம் இயற்பெயரைத் தம் ஆசிரியரின் ஆணைப்படி 'சாமிநாதன்' என மாற்றிக்கொண்டார்.

தம் ஆசிரியரின் அன்பும், திருவாவடுதுறை ஆதீன ஆதரவும் இவரது வாழ்வில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தின. இரவென்றும் பகலென்றும் பாராது நூற்றுக்கணக்கான நூல்களை ஆசிரியர் இவருக்குக் கற்பித்ததோடு தாம் சென்ற இடங்களுக்கு எல்லாம் அழைத்துச் சென்றார். உணவுக் கவலையும், குடும்பக் கவலையும் இன்றி இனிது வாழ ஆதீனகர்த்தர் அருள்புரிந்தார்.

1.2.1876இல் பிள்ளையவர்கள் மறைந்தபின், அப்பொழுது திருவாவடுதுறை மடத்தின் தலைவராக விளங்கிய சுப்பிரமணிய தேசிகர் நான்காண்டு காலம் இவருக்குத் தமிழ்க்கல்வி ஊட்டினார். பின்னர்த் தமிழறிஞர் சி.தியாகராச செட்டியாரின் உதவியால் 16.2.1880இல் கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணி ஏற்றார். அன்றிலிருந்து பொருட்கவலையற்ற வாழ்க்கை உருவானது. நன்றிமறவாத உ.வே.சா. தம் இல்லத்துக்குத் 'தியாகராசர் விலாசம்' எனப் பெயரிட்டார்.

## ஆய்வுத் தேடல்

21.10.1880இல் சேலம் இராமசுவாமி முதலியாரைக் கண்டு சீவகசிந்தாமணியைப் பற்றி உரையாடிய பின்னர், தமிழில் சிற்றிலக்கியங்கள் தவிர வேறிலக்கியங்களும் இருக்கின்றன என உணர்ந்தார். பழந்தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்துப் பாதுகாக்க வேண்டும் எனத் துணிந்தார். உ.வே.சா.வின் ஜைன நண்பர்கள் கொடுத்த விளக்கங்களாலும், நண்பர்கள் உதவியாலும் இடைவிடா ஆராய்ச்சியாலும் 1887இல் சீவகசிந்தாமணியைப் பதிப்பித்து வெளியிட்டார். சீவகசிந்தாமணியில் இடம்பெறும் 'சம்வசரணம்' நூலுக்குக் குணபால செட்டியார் என்பார் மனைவி மூலம் விளக்கம் பெற்றார். அவ்வம்மையாரால், 'பவ்ய ஜீவன்' என்ற பாராட்டினைப் பெற்றார்.

## பதிப்புப்பணி

சீவகசிந்தாமணியைப் பதிப்பித்த பின்னர் வேணுவனலிங்க விலாசச் சிறப்பு (1878), திருக்குடந்தைப் புராணம் (1883), மத்தியார்ச்சுன மான்மியம் (1885) ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். பத்துப்பாட்டு நூல்களை எல்லாம் அலைந்து திரிந்து கண்டெடுத்து, ஏடுகளை ஆராய்ந்து செப்பமிட்டு வெளியிட்டார். குறிஞ்சிப்பாட்டு நூலில் காணும் 99 மலர்கள் குறித்து வரும் வரிகள் ஏட்டில் காணாது உ.வே.சா. இடர்ப்பட்டார். அவ்வரிகள் இடம்பெற்ற ஏடு கிடைக்காதா என்று தேடினார். ஊர், ஊராய் வீடு வீடாய் ஏறி இறங்கினார். ஏடு தேடிய அனுபவத்தை 'உதிர்ந்த மலர்கள்' என்ற கட்டுரையில் எழுதியுள்ளார்.

சிலப்பதிகாரத்தை 1889ஆம் ஆண்டு வெளியிட்டார். புறநானூற்றை ஆராய்ந்து 1894இல் பதிப்பித்தார். அவ்வாறே மணிமேகலையை 1898இல் வெளியிட்டார்.

பணி நிறைவு

கும்பகோணத்தில் 1893 ஆம் ஆண்டுவரை இருந்த உ.வே.சா. மாநிலக் கல்லூரியில் பணிபுரியச் சென்னை சென்றார். 1919இல் அப்பணியிலிருந்து ஓய்வு பெற்றார். 1924இல் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஸ்ரீ மீனாட்சி தமிழ்க் கல்லூரியில் முதல்வராக மூன்றாண்டு பணியாற்றி 1927இல் ஓய்வுபெற்றார். இதன் பின்னர் முழுநேரம் பதிப்பாசிரியராக இருந்து பல்வேறு துறைநூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். எழுத்துப் பணியிலும் தம்மைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டார். 1930க்கும், 1940க்கும் இடையில் நாற்பது நூல்களைப் பதிப்பித்தும் பதின்மூன்று உரைநடை நூல்களை எழுதியும் வெளியிட்டுள்ளார்.

உ.வே.சா. பெற்ற பரிசுகளும் பாராட்டுகளும்

உ.வே.சா.வின் பதிப்புத் திறமையைப் பாராட்டி, 1905இல் சென்னை அரசாங்கம் ஆயிரம் ரூபாய் நன்கொடை நல்கிற்று. தமிழறியா ஆங்கில அரசு, 'மகாமகோபாத்தியாய' என்ற பட்டத்தை, ஆங்கிலம் அறியாத உ.வே.சா.வுக்கு வழங்கியது. காஞ்சிமடம், 'தாக்ஷிணாத்ய கலாநிதி' (தென்கலைவாணர்) என்ற சிறப்பினைத் தந்தது. 1932இல் சென்னைப் பல்கலைக்கழகம், மதிப்புறு டாக்டர் பட்டம் வழங்கியது. இராமநாதபுரம் அரசர் இராஜஇராஜேஸ்வர சேதுபதி 1912 இல் தோடா மரியாதை செய்தார். 'திராவிட வித்யா பூஷணம்' என்ற பட்டத்தை வேல்ஸ் இளவரசர் 1922இல் நல்கிப் பதக்கம் அணிவித்துப் பெருமைப்படுத்தினார். 1938இல் தமிழன்பர் மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து அரியதொரு உரை நிகழ்த்தினார். இவரது எண்பதாண்டு விழாவைச் சர். பி.டி. இராசன் தலைமையிலான குழு 1935இல் கொண்டாடியபோது, தமிழகத்திலும் வெளிநாட்டிலும் இருந்து வெளிவந்த இதழ்கள் பல, இச்செய்தியினைப் பெரிதும் பாராட்டி எழுதின. உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக முப்பத்திரண்டு இடங்களில் தமிழன்பர்கள் இவரது 'சதாபிஷேக' விழாவைக் கொண்டாடி மகிழ்ந்தனர். புலவர்நத்தம் என்னும் ஊர், உ.வே.சா.வின் நினைவாகச் சாமிநாதபுரம் எனப் பெயர் சூட்டப்பெற்றது. பல்வேறு இதழ்களில் பல சான்றோர்கள் இவரது பணியைப் புகழ்ந்து கட்டுரைகள் எழுதினர்.

கண்ணுஞ் சடையாமல் கையுந் தளராமல்
உண்ணப் பசியெழுவ தோராமல் - எண்ணியெண்ணிச்

செந்தமிழ்த் தாய்க்குச் செய்த திருத்தொண்டுக்கு
இந்நிலத் துண்டோ இணை[3]

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை உ.வே.சா.வின் அயரா உழைப்பையும், தொண்டுள்ளத்தையும் எண்ணிப் பாடினார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் டாக்டர் ஜான்ஸன் இலக்கிய உலகில் என்ன உயர்நிலையில் இருந்தாரோ, அதுபோலத் தமிழிலக்கிய வட்டத்தில் உ.வே.சா. உயர்ந்து விளங்கினார் என எ.ஃப்.மொறேஸ் என்பார் பாராட்டி எழுதினார்.

தாங்கள் தமிழுக்கு ஒருகண் என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை 29.11.1896இல் எழுதிய மடலில் உ.வே.சா.வைப் பாராட்டியுள்ளார். ஜுலியன் வின்ஸோன், 17.4.1895இல் எழுதிய கடிதத்தில் தம் மழலைத் தமிழில், 'நீர் பெரிய வேலைக்காரன் என்றும், மகாகனம் பொருந்திய வித்துவானாய் இருக்க வேணுமென்றும் நினைத்து வருகிறேன்' எனப் புகழ்ந்தார். மகாகவி பாரதியார்,

பொதியமலை பிறந்தமொழி வாழ்வறியும் காலமெல்லாம்
புலவோர் வாயில்
துதியறிவாய் அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்குவாயே

என வாழ்த்திப் பாடியுள்ளார்.

தமிழுக்கு ஒல்லும் வகையெல்லாம் ஓயாது உழைத்த உ.வே.சா. 28.4.1942 இல் திருக்கழுக்குன்றத்தில் இவ்வுலக வாழ்வினின்றும் ஓய்வு பெற்றார். மூத்த தமிழறிஞர் நினைவு தமிழர் நெஞ்சங்களில் என்றும் நீங்காது நிற்க வேண்டும் என்று எண்ணிச் சென்னை மாநிலக் கல்லூரியின் முன்னால் அவரது முழு உருவச் சிலையை 1948இல் அரசினர் நிறுவினர். இவரது உடலுருவைத் தாங்கி நிற்கும் சிலை சென்னைக் கடற்கரையில் இருப்பது போன்று இவரது நினைவலைகளைப் பரப்பும், 'மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்' திருவான்மியூர்க் கடற்கரையின் அண்மையில் நின்று பொலிவூட்டுகிறது.

## ஓயாத உழைப்பும் ஒழியாத படிப்பும்

உ.வே.சா பதிப்பித்த நூல்கள் செம்மையும் செறிவும் பெறக் காரணம் அவரது ஆழமான கல்வியாகும். அவர்தம் நூல்கள் வழி அவர் கற்றறிந்த சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கையை அறிந்து வியக்கலாம். அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், அழகரந்தாதி, அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ், இராமாயண வெண்பா, கம்பரந்தாதி, காஞ்சிப்புராணம், குடந்தையந்தாதி,

சீர்காழிக்கோவை, செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ், தஞ்சைவாணன் கோவை, திருக்குறள், திருக்கோவையார், திருப்புகலூர் திரிபு அந்தாதி, திருத்தில்லை யமக அந்தாதி, திருவரங்கவந்தாதி, திருவாவடுதுறை யமகவந்தாதி, திருவிளையாடற் புராணம், துறைசை அந்தாதி, நன்னூல், நைடதம், பதிற்றுப்பத்தந்தாதி, பழநி மலைத் திரிபந்தாதி, பிரபுலிங்க லீலை, புகலூர் அந்தாதி, பேரூர்ப் புராணம், மறைசை அந்தாதி, மாயூரம்புராணம், மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், முல்லையந்தாதி என அந்நூல்களின் எண்ணிக்கை விரிகின்றன.

உ.வே.சா. சைவ சமயச் சார்புடையவர் எனினும், சமண நூலான சீவகசிந்தாமணியையும், பௌத்த நூலான மணிமேகலையையும் பதிப்பித்தார். அவற்றைச் செம்மையாகப் பதிப்பிக்க, அந்நூலில் வந்த அவ்வச் சமய நுண்கருத்துகளை அறிந்தோரை வினவி ஆழமாக உணர்ந்து தேர்ந்தார்.

சீவகசிந்தாமணியைப் பதிப்பிக்கும்போது, சமண சமய நுணுக்கங்களைச் சந்திரநாத செட்டியார், குணபால செட்டியார், அவர் மனைவியார் ஆகியோரிடமிருந்து அறிந்து கொண்டார்.

மணிமேகலையைப் பதிப்பிக்கும்போது, அதிலெழுந்த ஐயங்களைத் திருமிகு. ரெங்காச்சாரியார் தீர்த்து வைத்தார். பௌத்த சமயக் கருத்துகளில் இவர் கொண்டிருந்த ஆழமான புலமையைப் பாராட்டி 7.3.1899இல் வெளிவந்த 'விவேக திவாகரன்' என்னும் இதழில் ஆனந்தன் என்ற புனைப்பெயரில் ஒருவர், இவருக்குப் 'பௌத்தசமயப் பிரபந்த பிரவர்த்தனாசாரியார்' என்னும் பட்டத்தை அளித்திருந்தார்.

### உரைநடைத்திறன்

உ.வே.சா. தம் வாழ்வனுபவங்களையும், தமிழ் வளத்தையும் இலக்கிய நயத்தையும் குறித்துப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அக்கட்டுரைகள் நூலாக்கம் பெற்றுள்ளன. நல்லுரைக்கோவை (4 பாகங்கள்), நினைவு மஞ்சரி (2 பாகங்கள்), நான் கண்டதும் கேட்டதும் என்னும் நூல்கள் வெளிவந்தன. புதியதும் பழையதும், மணிமேகலைக் கதைச்சுருக்கம், புத்தசரிதம், திருக்குறளும் திருவள்ளுவரும், மத்தியார்ச்சுன மான்மியம் என்பன அவர் எழுதிய பிற நூல்கள்.

உ.வே.சா. இசைக்கலைஞர், கவிஞர், சான்றோர், புரவலர் ஆகியோரின் வரலாறுகளைத் தனித்தனிக் கட்டுரைகளாகவும், நூல்களாகவும் எழுதியுள்ளார். உ.வே.சா. இளமையிலிருந்தே தம் தந்தையைப்போன்று

இசை வல்லுநராக ஆசை கொண்டார். இசையிலும் நல்ல ஈடுபாடு கொண்டார். திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்த நாட்களில் அங்கு நடைபெற்ற இசையரங்குகளில் பங்குபெற்ற இசைமேதைகளுடன் நெருங்கிப் பழகினார். இளமையிலிருந்தே இசையோடு இவருக்கிருந்த தொடர்பினால், கனம் கிருஷ்ணையர், மகாவைத்தியநாதையர் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார்.

இசைத்தமிழில் உள்ளாட்டுப்பாட்டு என்னும் வகையைச் சேர்ந்த கனரகப் பாட்டில் தேர்ச்சி உடையவராதலால் கிருஷ்ணய்யர், 'கனம்' என்னும் அடைமொழி பெற்றார். இவரது பாடல்கள் காதற்சுவை மிக்கவை, பக்திச்சுவை மிக்கவை. உ.வே.சா. எழுதிய இவரின் வரலாறு, பெரும்பாலும் கிருஷ்ணய்யரின் கீர்த்தனங்கள் தோன்றிய சூழ்நிலையை விளக்குவதாகவே அமைந்துள்ளது. நூலின் இறுதியில் அவர் படைத்த எழுபத்தைந்து கீர்த்தனங்களின் பட்டியலைக் கொடுத்துள்ளார். இவ்வரலாற்றை எழுதுவதற்கு உ.வே.சா. வின் தந்தையார் கூறிய செய்திகளும் அவரது சிறிய தந்தையார் எழுதி வைத்திருந்த குறிப்புகளும் பிறர் வழியாக அறிந்த செய்திகளும் ஆதாரமாக அமைந்தன.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் வரலாற்றைப் பற்றி முன்னுரையில் உ.வே.சா. குறிப்பிடுகையில், 'பாரதியாருடன் நான் பழகிய காலத்தில் நான் அறிந்தனவும் என் தந்தையார், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் முதலியோர் வாயிலாக நான் தெரிந்து கொண்டனவுமாகிய செய்திகளையும் ராஜரத்தின தீட்சிதரவர்கள்பால் அறிந்த செய்திகளையும் தொடர்புபடுத்தி இவ்வரலாறு எழுதப்பட்டது,' என்று எழுதியுள்ளார். இந்நூலில் நந்தனார் சரித்திர ஆராய்ச்சிக்குச் சிறப்பிடம் கொடுத்துள்ளார்.

மகாவைத்தியநாதையர் பற்றி அவர்தம் தமையனார் கூறிய செய்திகளையும், நேரடிப் பழக்கத்தினால் அறிந்துகொண்ட செய்திகளையும் கொண்டு நூல் எழுதியுள்ளார்.

வித்துவான் தியாகராச செட்டியார், உ.வே.சா.வுக்குத் தாம் பார்த்த கல்லூரி ஆசிரியர் வேலையை நல்கிய நல்லார். அவருடைய ஆளுமைத் திறனையும், வாழ்வியல் சூழலையும் விளக்கி, 'வித்துவான் தியாராச செட்டியார்' என்ற நூலை எழுதியுள்ளார். 'தம்முடைய கடமையைத் திருத்தமாக நிறைவேற்றுவதும் குற்றம் செய்பவர் யாரானாலும் அவரை வெளிப்படையாகக் கண்டிப்பதும் மனத்தில் தோன்றியதை ஒளியாமல் எடுத்துரைப்பதும் அவரிடம் பொருந்தியிருந்த விசேஷ இயல்புகள்,' என்று அவருடைய குணச்சிறப்புகளைக் கூறியுள்ளார் (ப.5).

தம் ஆசான் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையை நன்றியுணர்வுடன் நினைவுகூர்ந்து இரு பாகங்களாக அவர்தம் வாழ்வியலை எழுதி வெளியிட்டார். 1815இல் தோன்றி 1876இல் மறைந்த மகாவித்துவான் வாழ்க்கை வரலாற்றை எழுதப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். முதற்பாகம், பிள்ளையவர்கள் பிறந்ததிலிருந்து அவரிடம் உ.வே.சா. மாணவராகச் சேர்ந்தது வரையுள்ள நிகழ்ச்சிகளைக் கொண்டது. இரண்டாம் பாகம் உ.வே.சா. நேரடியாக அறிந்த பிள்ளையவர்களின் வரலாறாகும். மகாவித்துவான், தம் மாணவர்களுக்கு உணவும், உடையும், உறையுளும் வழங்கித் தமிழறிவூட்டும் நல்லியல்பினர் என்பதை இந்நூல் உணர்த்துகிறது.

மகாவித்துவான், வருவாய்க்கு மீறிய செலவால் பெரும்பாலும் வறுமையிலேயே வாழ்ந்துவந்தார் என்றும், தாம் பாடிய நூல்கள் சிலவற்றைப் பிறர் பேரால் வெளியிடக் கொடுத்தார் என்றும், மிக வேகமாக ஏடெழுதுவோராலும் எழுத முடியாத வேகத்தில் கற்பனை வளம் கனிந்த பாடல்களை ஆற்றொழுக்காகப் பாடுபவர் என்றும், இருபத்தெட்டுக் காப்பியங்களும், நாற்பத்தைந்து சிற்றிலக்கியங்களும், எண்ணற்ற தனிப் பாடல்களும் இயற்றியுள்ளார் என்றும் உ.வே.சா. தம் நூலில் எழுதியுள்ளார்.

•இந்நூலில் மகாவித்துவான் பிறர்க்கு எழுதிய மடல்கள் சிலவற்றையும், பிறர், அவர்க்கு எழுதிய மடல்கள் சிலவற்றையும், சூழ்நிலைக்கு ஏற்ப அவர் எழுதிய தனிப்பாடல்கள் சிலவற்றையும் அவரைப் பாராட்டி அவரது மாணவர் முதலியோர் எழுதிய பாராட்டுக் கவிதைகளையும் உ.வே.சா. இணைத்துள்ளார்.

உ.வே.சா., மகாவித்துவானைப் பற்றி எழுதிய நூலில் தம் வாழ்வியல் அனுபவங்களையும் இணைத்து எழுதி வெளியிட்டதால், தனியாகத் தம் வாழ்க்கை வரலாற்றை எழுத ஆர்வம் காட்டாதிருந்தார். கல்கியும், டி.கே. சிதம்பரநாத முதலியாரும் அடிக்கடி இவரைச் சந்தித்துத் தன் வரலாறு எழுத வற்புறுத்தியதாலும், 6.2.1935இல் இவரது எண்பதாவது பிறந்தநாள் விழாவின் போது, பெயர் கூற விரும்பாத தமிழ் அன்பர் ஒருவர், இவர் தன் வரலாற்றை எழுத வேண்டுமென ஊக்கப்படுத்தி ஐந்நூறு ரூபாய் அளித்த அன்பினாலும் ஆனந்த விகடன் வார இதழில் 1940 ஆம் ஆண்டுத் தொடக்கம் முதல் 1942 இல் இவர் இவ்வுலக வாழ்வை நீத்தது வரை, கிழமைக்கு ஒன்றாக 122 அத்தியாயங்களாகத் தன் வரலாற்றைத் தொடர்ந்து எழுதி வெளியிட்டார்.

'என் சரித்திரம்' எனப் பெயர் தாங்கிய இவ்வரலாறு அவரது நாற்பத்து மூன்று வயது வரையுள்ள நிகழ்ச்சிகளையே தந்துள்ளது. உ.வே.சா.வின் என் சரித்திரம், இவரின் தமிழார்வம், மகாவித்துவானிடம் இவர் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பு, தமிழை வளர்த்த வள்ளல்களின் கொடைத் தன்மை,

அக்கால மக்களின் வாழ்க்கை முறை போன்றவற்றை மிக விரிவாக விளக்குகிறது.

இவர்தன் வரலாற்றில், தம் குடும்ப வாழ்க்கையைக் குறித்துப் பெரிதும் எழுதவில்லை. அவர்கால அரசியல் போராட்டங்கள் பற்றிய செய்தியோ, சமுதாய நிகழ்வுகளோ இந்நூலில் இடம்பெறவில்லை. பதிப்புப் பணியில் தன்னை முழுவதும் அர்ப்பணித்துக்கொண்ட காரணத்தால், புறச் சூழல்கள் எதுவும் இவரைப் பாதிக்கவில்லை எனலாம்.

வார இதழில் தொடர் கட்டுரைகளாக வெளிவந்தமையால் பெரும்பாலான அத்தியாயங்கள் ஆர்வம் தூண்டும் முடிவுகளைக் கொண்டவையாகவும், நகைச்சுவை இழையோடுவனவாகவும் அமைந்துள்ளன.

### கவித்திறன்

உ.வே.சா. ஒரு செவ்வியல் கவிஞர் என்பது தமிழக மக்களால் பெரிதும் அறியப்படாத செய்தி. உ.வே.சா. தம் ஆசானைப் போன்று பெருங்கவிஞராக வேண்டும் என்று இளமையில் விழைந்தார். கவிதை எழுதுவதைத் தமிழ் படித்தவர்கள் ஒரு தகுதியாகக் கருதிய காலம் அது. எனவே வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அவர் கவிதைகள் புனைந்தார்.

ஏதேனும் பொருள் பற்றிக் கவிதை பாடப் பிறர் பணித்தபோதும், பெரியோர்களுக்கும் நண்பர்களுக்கும் எழுதும் மடல்களின் முன்னுரை களாகவும், மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிகளிலும், பிறவற்றிலும் சூழ்நிலைகளுக் கேற்பப் பல கவிதைகள் யாத்துள்ளார்.

பதிப்புத்துறையில் இறங்கிய பின்னர், தாம் பதிப்பித்த நூல்கள் சிலவற்றின் முகவுரைகளில் அந்நூல்களின் பொருட் சிறப்பைப் பாராட்டியும் பதிப்பினை நிறைவேற்றிய இறையருள் நினைந்தும் பாடல்கள் பாடி இணைத்தார்.

வயது மூத்த காலத்தில் கூட, நாள்தோறும் பக்திமணம் கமழும் கவிதைமலர்களால் இறைவனை ஏத்தினார்.

உ.வே.சா. வின் கவிதைகளை எல்லாம் தொகுத்து, அவர்தம் மாணவர் கி.வா. ஜகந்நாதன், தமிழ்ப்பா மஞ்சரி, கயற்கண்ணிமாலை என இரு நூல்களாக வெளியிட்டார்.

தமிழ்ப்பா மஞ்சரியின் முதற்பாகத்தில் விநாயகப் பெருமான்மேல் துதிப்பாடல்கள், முருகன் வழிபாட்டுப் பாடல்கள், சிவபெருமான்மீது

புனைந்த கவிதைகள், அம்பிகை துதிப் பாடல்கள், சரசுவதி துதிப் பாடல்கள் முதலியன அடங்கியுள்ளன.

அதன் இரண்டாம் பாகம் தனிப்பாடல்கள், மொழிபெயர்ப்புப் பாடல்கள், பதிப்புப்பாடல்கள், திருத்தொண்டர்கள், பழகிய பெரியோர்கள், சிறப்புப் பாயிரங்கள் என ஆறு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.

கயற்கண்ணிமாலை என்னும் நூலில் கயற்கண்ணிமாலை, அங்கயற்கண்ணிமாலை, கடம்பவனவல்லி பதிகம், அருள்மிகு சுந்தரேசுவரர் துதிப் பாடல்கள் ஆகிய நான்கு சிற்றிலக்கியங்கள் உள்ளன.

உ.வே.சா. இயற்றிக் கிடைத்த கவிதைகள் 964. அவை :

| | | |
|---|---|---|
| 1. | அறுசீர் நெடிலடி ஆசிரிய விருத்தம் | 295 |
| 2. | கட்டளைக் கலித்துறை | 249 |
| 3. | தரவுக் கொச்சகக் கலிப்பா | 139 |
| 4. | வெண்பா | 136 |
| 5. | கலி விருத்தம் | 53 |
| 6. | எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | 18 |
| 7. | ஆசிரியப்பா | 15 |
| 8. | வஞ்சி விருத்தம் | 15 |
| 9. | எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | 11 |
| 10. | கண்ணிகள் | 10 |
| 11. | பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | 7 |
| 12. | குறள் வெண்பா | 5 |
| 13. | கலிநிலைத்துறை | 4 |
| 14. | தேவாரசந்தப் பாடல்கள் | 4 |
| 15. | கலித்துறை | 2 |
| 16. | பதினான்கு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் | 1 |
| 17. | கட்டளைக் கலிப்பா | 1 |
| 18. | கீர்த்தனம் | 1 |
| | | 964 |

உ.வே.சா.வின் பாடல்களில் பெரும்பாலும் முதலடியில் தன் சிறுமையை எண்ணிப் புலம்பலும், இரண்டாம் அடியில் அடைக்கலம் புகுந்த தம்மை ஆதரிக்க வேண்டுமென இறைவனை வேண்டலும், மூன்றாம் அடியில் பெருமைமிகு இறைவனை வாழ்த்தலும் இறுதியில் இறைவனின் திருப்பெயரும் அமைந்திருக்கக் காணலாம்.

சிவபெருமான் துதிகளில் வந்த நேரிசை வெண்பாக்கள் அந்தாதியாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் வந்த பல்வேறு யாப்புகளும் அந்தாதியாகவே அமைந்துள்ளன.[4] பழந்தமிழ்ச் செய்யுள் மரபைப் பின்பற்றியே பாடல்கள் இயற்றியுள்ளார். மகளிர்பால் மையம் கொண்டழிந்தது போலவும் இழிந்தோருடன் இணைந்து கெட்டதுபோலவும், பொருளாசை கொண்டு பொருளற்ற வாழ்க்கை வாழ்ந்ததுபோலவும், கற்பித்துக் கொண்டு, பழம் மரபு முறைப்படி கவிதைகளை உ.வே.சா. இயற்றியுள்ளார்.

### பேச்சுத்திறன்

உ.வே.சா. கருத்துச் செறிவோடு, நகைச்சுவை இழையோடப் பேச வல்லவர். அவருடைய இலக்கியப் பேச்சுக்கள் பல கட்டுரைகளாயின. 7.11.1927 முதல் 21.12.1927 வரை அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேசிய பேச்சுக்கள் 'சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும்' என்னும் நூலாகத் தொகுக்கப் பெற்றன.

சங்கீதப் பயிற்சி, சைவமும் தமிழும், மகளிர்கல்வி, கலைமகள் பெருமை போன்ற அவருடைய பேச்சுகள் பல கட்டுரைகளாகி நூல்களில் இடம்பெற்றன.

### உரைத்திறன்

உ.வே.சா. சில நூல்களுக்கு அரிய உரை எழுதியுள்ளார். மணிமேகலைக்கும் குறுந்தொகைக்கும் அவர் இயற்றிய உரைகள் அவரை ஒரு சிறந்த உரையாசிரியராக உலகுக்கு உணர்த்தின.

மணிமேகலைக்குப் பல இடங்களில் பதவுரையையும் இடைஇடையே சில அடிகளின் பொருட்சுருக்கத்தையும் காதை இறுதியில் ஒரே சொற்றொடரில் பெரும்பாலும் மூலநூல் சொற்களைக் கொண்டே அக்காதையின் பொருட்சுருக்கத்தையும் தந்துள்ளார். சிலப்பதிகாரத்துக்கு அரும்பதஉரை போல, மணிமேகலைக்கு உ.வே.சா.வின் உரை அமைந்துள்ளது எனலாம். அவ்வுரையில் எண்ணுப் பெயர்களையும், சுட்டுப் பெயர்களையும், புராணச் செய்திகளையும், புத்தசமயக் கருத்துகளையும் விளக்கியுள்ளார். பிற ஆசிரியர்கள் மணிமேகலையை எடுத்தாண்ட பகுதிகளைக் கூறியதுடன் ஒரு குறிப்பிட்ட சொல்லுக்குப் பிற உரையாசிரியர்கள் எவ்வாறு பொருள் கூறினர் என்றும் கூறியுள்ளார். தமிழ்ச் சொற்கள் சிலவற்றிற்கு வடமொழியில் பொருள் கூறியுள்ளார்.

மணிமேகலையில் இடம்பெறும் பாத்திரக் கூற்றை 'இன்னார் கூற்று' என்று எடுத்துரைத்துள்ளார். 'கள்ளும் பொய்யும்' என்பது முதலியன இராசமாதேவி கூற்று.[5]

மணிமேகலையில் வந்த உவமைகளைப் பொருத்திக் காட்டியுள்ளார். 'வங்கம் யானைக்கும் காற்று மதத்திற்கும் உவமை'[6] என்பன போன்று விளக்கியுள்ளார்.

சில சொற்களுக்கு இலக்கியநயம் தோன்றப் பொருள் விளக்கியுள்ளார். "அவ்வியம் - பிறர்க்கு இவள் உரியளாதல் கூடுமோ என்பதால் உளதாகிய பொறாமை"[7], 'மாக்களென்றார் ஐம்புல உணர்ச்சியே அன்றி மன உணர்ச்சியில்லாதவர் என்றற்கு'[8] என்னும் பகுதிகள் அதற்குச் சான்றாகும்.

குறுந்தொகைக்கு உ.வே.சா. உரை எழுதும்போது அவருக்கு வயது 82. "பல வருஷங்களாக முயன்று படித்துப் பலருடைய உதவியைப் பெற்று ஆராய்ந்து சுவைத்துப் பார்த்த இந்நூல் இப்பொழுது இந்த உருவத்தில் வெளிவருவதைப் பார்க்கையில் எனக்கு உண்டாகும் இன்பம் எழுதி உணர்த்துதற்கு அரியது"[9], என அவர் கூறியிருப்பதிலிருந்து குறுந்தொகை உரையைத் தம் பழுத்த அனுபவத்தின் துணைகொண்டு எழுதியிருப்பதை உணர்ந்து கொள்ளலாம்.

குறுந்தொகைப் பாடலில் வரும் ஒவ்வொரு கவிதையும் இன்னாருடைய கூற்று என்பதைப் பாடலின் தலைப்பில் அமைத்துள்ளார். பல பாட பேதங்களை உ.வே.சா. தம் உரையில் குறித்துள்ளார். பின்னர்ப் பதவுரை கூறியுள்ளார். அடுத்துப் பாடலின் வினையின் முடிவினைத் தந்துள்ளார். இதைத் தொடர்ந்து செய்யுளின் கருத்தினைச் சுருக்கமாகத் தந்துள்ளார். விசேட உரை என்னும் பகுதியில் சொல்நயங்கள், இலக்கணச் செய்திகள், போன்றவை விளக்கப் பெறுகின்றன. அதற்கடுத்துப் பிற இலக்கண இலக்கிய உரைகளில் குறுந்தொகைப் பகுதிகள் எடுத்தாளப்பெற்ற முறையினை அடிவரிசைப்படி தந்துள்ளார். பின்னர் ஒப்புமைப் பகுதியில் குறுந்தொகைப் பகுதிகளுக்கு எவ்வாறு உரை எழுத வேண்டும் என்பதற்குச் சான்றாக இவர் எழுதிய உரை அமைந்துள்ளது.

உ.வே.சா. குறுந்தொகைக்கு எழுதிய உரையில், உள்ளுறை உவமத்தையும், இறைச்சியையும் 'குறிப்புப்பொருள்' என்றே பொதுவாகக் குறித்துள்ளார். அவர்தம் உரை நயமாக அமைந்துள்ளது. 'நீ தலைவரைப் பிரிந்து இரங்குதலைப் போலவே அவரும் நின்னைப் பிரிந்தமையால் இரங்குவர் என்பாள் அழிவு பெரிதுடையரென்றாள்'[10] என்கிறார். மற்றோரிடத்தில், 'நெருஞ்சியனைய' (குறள் 315.4) என்னும் பகுதிக்கு, 'ஞாயிறு கீழ்த்திசையிருப்பின் கிழக்கு நோக்கியும் உச்சிவானத்தில் இருப்பின் உச்சியை நோக்கியும் நிற்பது ஞாயிற்றை நோக்கிய நெருஞ்சி போலத் தலைவனை என் தோள் நோக்கி நிற்குமென்றாள்'[11] என விரிவாக உரை எழுதியுள்ளார்.

புறநானூற்றுக்குக் குறிப்புரை எழுதியுள்ளார். மேலும் அவர் பதிப்பித்த சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள் உலாக்கள், கோவைகள், தூதுகள், இலக்கணங்கள் போன்ற பலவகை நூல்களுக்கு அவர் எழுதிய முகவுரைகள் சிறப்பானவை.

களப்பணி, பதிப்புப்பணி, தமிழாசிரியர் பணி என வாழ் நாட்களெல்லாம் தமிழ்ப்பணி ஆற்றியவர். உ.வே.சா.வின் பதிப்பு படிப்போருக்கு முழுநிறைவைத் தரவல்லது. ஒரு நல்ல பதிப்புக்கு எவை எவை இருக்க வேண்டுமோ, அவை எல்லாம் அமைந்தவை அவர் பதிப்பித்த நூல்கள் ஆகும். உ.வே.சா.வால் பழைய இலக்கிய இலக்கணங்கள் தமிழக மக்களுக்கு அறிமுகமாயின. கவிதை புனையும் பாங்கு, பேச்சுக்கலைத் திறன், உரை எழுதும் வல்லமை, கட்டுரைத் திறன், கலைபயில் நுண்ணறிவு, ஆய்வுத் தேடல் அனைத்தும் ஒருங்கே பெற்ற ஒப்பில்லாத் தமிழ் மாமணி முதுபெரும் அறிஞர் உ.வே.சா. எனலாம்.

## குறிப்புகள்

1. உ.வே. சாமிநாதையர், என் சரித்திரம், எஸ். கலியாண சுந்தரையர் பதிப்பு, கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1950, ப.191.
2. மேலது, ப. 213.
3. தேசிக விநாயகம் பிள்ளை, கலைமகள், ஜூன் 1942.
4. Moraes F.A., Tamil Literary Explorer, The New Reviewer, No. 96, Vol XVI, December 1942, p. 512.
5. மணிமேகலை (உ.வே.சா. பதிப்பு), ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, கபீர் அச்சுக்கூடம், சென்னை, ஆ.ப. 1964.
6. மேலது ப. 46.
7. மேலது ப. 56.
8. மேலது ப. 76.
9. உ.வே. சாமிநாதையர், முகவுரை - குறுந்தொகை (உ.வே.சா. பதிப்பு, ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, கபீர் அச்சுக்கூடம், சென்னை), 1962, ப. 17.
10. குறுந்தொகை, ப. 285.
11. மேலது ப.285.

# புலப்பாட்டு நெறி

## முன்னுரை

புலப்பாட்டுநெறி என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் கேட்போரின் மனத்தில் பேசுவோன் தன் கருத்தைப் பதிய வைக்கும் முயற்சியைக் கண்டறியும் நெறியாகும். பேச்சுக் கலைக்கும், கட்டுரைக் கலைக்கும் இந்நெறி தேவையாகும். இலக்கியத் திறனாய்வுக்கும் இந்நெறி இன்று உதவுகிறது. ஒரு குறிப்பிட்ட அறிஞரின் மொழி ஆளுந்திறமையையும், கலைபயில் தெளிவையும், பட்டறிவையும், தனித்திறனையும் அவர் கருத்துகளைப் புலப்படுத்தும் உத்திமுறைகளால் உணரலாம். இந்நெறி கிரேக்கத்தில் பிறந்தது.

## புலப்பாட்டுநெறி விளக்கம்

கிரேக்கச்சொல் (Rhetor) என்பதற்குப் பேச்சுக் கலை ஆசிரியன் என்பது பொருளாகும். 'Rhetoric' என்னும் புலப்பாட்டுக் கலை மொழியைத் திறம்படக் கையாளும் கலையாகும். ஒருவன் தன் எண்ணத்தை மற்றவனுக்குப் புலப்படுத்த மொழி ஓர் ஊடகமாக அமைகிறது. தன் கருத்தை மற்றவர் மனம் ஏற்குமாறு கூறவும் கேட்பவன் மனத்தில் ஒரு விருப்பத்தை உருவாக்கவும், தாக்கத்தை ஏற்படுத்தவும் கலைஞன் பல உத்திகளைக் கையாள்கிறான். அந்த உத்திகள் சில நெறிமுறைகளுக்கு உட்படுகின்றன. இப்புலப்பாட்டு நெறி, மொழியைப்போன்றே பழமை வாய்ந்ததாகும். கிரேக்கர்களே இப்புலப்பாட்டு நெறிக்கு வித்திட்டனர். பல கொள்கைகளை வகுத்தனர். இந்நெறி குறித்துப் பல நூல்கள் எழுதினர்.

## கிரேக்கத்தில் புலப்பாட்டு நெறி

கிரேக்க நாட்டில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வழக்கு மன்றங்களில் முதன்முதலாகப் புலப்பாட்டு நெறி பின்பற்றப்பட்டது. நீதிமன்றத்தில் விவாத முறையில் கருத்துகளை நிலைநாட்டவும், உண்மையைக் கண்டறியவும் இப்புலப்பாட்டு நெறி பயன்படுத்தப்பட்டது. கோரக்ஸ் (Corex) என்பார் புலப்பாட்டு நெறியின் முதல்வர் ஆவார். நீதிமன்றப் பேச்சுக்களையும் விவாதங்களையும் புலப்பாட்டு நெறிக்குள் அடக்கியவர் இவரே.

சொல்வன்மைக் கலையாகக் கிரேக்கத்தில் இந்நெறி மலர்ந்த நிலையைக் கிரேக்க இலக்கியங்கள் வழி அறியலாம். ஹோமரின் இலியத்திலும், ஒடிசியிலும் காப்பியப் பாத்திரங்கள் பேச்சுக்கலை வல்லுநராய்ப் படைக்கப்பட்டுள்ளனர். கிரேக்க நாடகங்களில் தருக்க முறை

உரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஹிரோடாடஸ் (Heridotus), தியூசிடைடஸ் (Theycyditias) போன்றோரின் வரலாற்று நூல்களிலும் ஹீஸாய்டின் (Hesoid) தத்துவங்களிலும் சொல்வன்மை செல்வாக்குப் பெற்றுள்ளது.

திதியாஸ் (Titias) என்பவர் கோரக்ஸின் மாணவர் ஆவார். பேச்சுக்கலை ஆசிரியராகவும், தூதராகவும் பணியாற்றிய இவரது சொல்லாற்றலில் முரண்அணி, இணையணி ஆகியன சிறப்பிடம் பெற்றிருந்தன.

கார்கியஸ் (Gorgias) என்பவர் கி.மு. 427 இல் சிசிலியிலிருந்து ஏதென்சுக்கு வந்தவர். இவரது பேச்சில் உணர்ச்சியும் உண்டு; உயரிய எண்ணங்களும் உண்டு. ஐசாக்ரடீஸ் (Isocraties) என்பவர், ஏதென்ஸ் நகரில் பேச்சுத்திறன் வளர்க்கப் பள்ளிகளை நிறுவினார். கல்விநிலையங்களில் பேச்சுக்கலையைப் பாடமாக்கிக் கற்பித்தவர்களைச் 'சோபிஸ்டுகள்' என்றழைத்தனர். பயிற்சிப் பள்ளிகள் பல நிறுவிப் புகழ் வாய்ந்த சொற்பொழிவாளர்களை ஐசாக்ரடீஸ் உருவாக்கி உள்ளார். இவர் தந்த பயிற்சியால், காரண காரிய உத்திமுறை வாதம் (Reasonal Arguement) தோன்றியது. தனிப்பட்ட ஒழுக்கத்துக்கு இவர் முதலிடம் கொடுத்தார். கலையறிவை வளர்ப்பவன் ஒழுக்கசீலனாகவும் இருக்க வேண்டும் என்பது இவரது கருத்தாகும்.

இந்தச் சோபிஸ்டுகளின் போக்கினைப் பிளேட்டோ (Plato) அரிஸ்டாட்டில் (Aristotle) போன்றோர் ஏற்க மறுத்தனர். "கேட்போரை உல்லாசப்படுத்தவும், உணர்ச்சியில் ஆழ்த்தவும் மட்டுமே சோபிஸ்டுகள் தம் பேச்சுக்கலையைப் பயன்படுத்துகின்றனர். காசு ஒன்றே இவர்கள் குறிக்கோள்," என்பதை எதிர்த்தனர். பேச்சாளன் பேசப்போகும் பொருளை உள்ளபடி உணர்ந்து, 'பேச்சைப் பகுத்துக்கொண்டு, கேட்போர் மனநிலை அறிந்து பேச வேண்டும்' என்றனர். அரிஸ்டாட்டில், பேச்சுக்கலையை விவரித்து, 'Rhetoric' (புலப்பாட்டுக்கலை) என்ற நூலை எழுதினார். இவர் எழுதிய மற்றொரு நூலான Poetics (கவிதையியல்) என்பதில் மொழி நடை குறித்து எழுதியுள்ளார்.

கிரேக்கச் சொற்பொழிவாளர் டெமாஸ்தனீஸ் பேச்சுக் கலைக்குத் தனிச் சிறப்புச் சேர்த்தவர். பேசும்போது ஒலியில் ஏற்ற இறக்கமும் சைகைகளும் சொற்பொழிவாளனுக்கு வேண்டும் என டெமாஸ்தனீஸ் வற்புறுத்தினார்.

சிசரோ (Cicero) தம் பேச்சுக்களாலும் கடிதங்களாலும் புலப்பாட்டு நெறியை விளக்கியுள்ளார். சிசரோ சிறந்த பேச்சாளர். சிறந்த பேச்சாளனுக்குப் பல்கலை அறிவு தேவை என்பார். சொற்பொழிவு நூல் எழுதினார்.

சிசரோ கருத்தை ஒட்டி, பேபியஸ்குவிண்டிலியான் (Feabius Quvintilian) சொற்பொழிவு நூல்களை எழுதினார். புலப்பாட்டு நெறியின் தன்மை, நோக்கம், பரப்பு ஆகியவற்றை இவரது நூல்கள் ஆய்வு செய்கின்றன.

உரோமானியர்களின் புலப்பாட்டுநெறி

உரோமில் வாழ்ந்த டயோனிசியஸ் (Dianysicus) என்பார் எழுதிய 'on the arrangement of word,' (சொற்களின் அமைப்புமுறை) என்னும் நூல் சொல்லின் ஒழுங்கு, அழகு, நடை பற்றி விளக்குகிறது. உரோமில் புலப்பாட்டு நெறியைக் கற்பித்து வந்தார். சொற்களை அடுக்கிச் சொல்லும் பேச்சுமுறையை ஆதரித்தார். ஹெர்மோஜெனிஸ் (Hermogenes) என்பவரும் எப்தோனியஸ் (Aphthonious) என்பவரும் பேச்சின் மையக் கருத்தினை (Theme) அடிப்படையாகக் கொண்டு நூல்கள் எழுதினர். லாஞ்ஜீனியஸ் (Longinius) எழுதிய 'On the sublime' (புனிதத்தன்மை குறித்து) என்ற நூல் இலக்கியத் திறனாய்வுக்கு உதவுவது ஆகும். கிரேக்கரின் பேச்சுக் கலைநடைக்கு, Attic style என்று பெயர். உரோம அறிஞர்கள் பின்பற்றிய நடையை Asian style என்று குறித்தனர்.

தூய அகஸ்டின் (St. Augustine) பேச்சாளன் ஒழுக்கம் மிக்கவனாக இருக்க வேண்டுமென வற்புறுத்தினார்.

இங்கிலாந்தில் புலப்பாட்டுநெறி

இங்கிலாந்தில் 16ஆம் நூற்றாண்டில்தான் புலப்பாட்டுநெறி பற்றிய சிந்தனை மேலோங்கியது. லியானார்டு காக்ஸ் (Leanard Cux) என்பவர் 1580இல் புலப்பாட்டு நெறி குறித்து நூல் எழுதினார். ரிச்சர்டு செர்ரி (Richard Sherry), தாமஸ் வில்ஸன் (Thomas Wilson) போன்றோரும் பேச்சுக்கலையை வளர்த்தனர். எராமல் (Eramal), டீன் காலட் (Dean Colet) ஆகியோர் முயற்சியால் இங்கிலாந்தில் பேச்சுக்கலைப் பள்ளிகள் நிறுவப்பட்டன. மொழிநடையைப் பயன்படுத்தும் முறை இந்நூல்களில் விதந்தோதப்பட்டது. ஜீயன் லுயிற் வைவ்ஸ் (Juan Luis Vivs) என்பவர் இங்கிலாந்தில் ஆங்கிலப் புலப்பாட்டு நெறியை வளர்க்கப் பாடுபட்டவர். தாமஸ் வில்கர் எழுதிய 'Art of Rhetorigue' (பேச்சுக்கலை) என்னும் நூல் சிறப்பு வாய்ந்தது ஆகும். ஆங்கிலப் புலப்பாட்டு நெறியில் பதினேழாம் நூற்றாண்டு ஒரு திருப்புமுனையாகும். சமயச்சார்பான நூற்பொருளை விளக்கும் வகையில் பேச்சுக்கலை வளர்ந்தது.

பிரான்சில் புலப்பாட்டுநெறி

பதினேழாம் நூற்றாண்டுப் புலப்பாட்டு நெறி பிரான்சிஸ் பேகனுடன் (Francis Becan) தொடங்கியது. ஜான்டிரைடன், தாமஸ் பிளவுண்ட் (Thomas

Blount) போன்றோரும் பேச்சுக்கலைக்கு வித்திட்டனர். வழங்குமொழி நடையின் தந்தையாக டிரைடன் விளங்கினார்.

### தமிழில் புலப்பாட்டு நெறி

தமிழ் மொழியை வரையறைப்படுத்திப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் தொல்காப்பியம் துணை நிற்கின்றது. 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று கூறுகிறார் தொல்காப்பியர். பேசுவோன், கேட்போன் என்ற நிலைகளை உணர்ந்து கூற்று முறையை அமைத்துள்ளார். செய்யுளின் வண்ணமும் வனப்பும் அமையும் வகைகளைப் புலப்பாட்டு நெறி வழி நின்று விளக்குகிறார். நன்னூலார் நூல் என்றால் பாயிரம் வேண்டும் என்கிறார். உத்திமுறைகளை இலக்கண நூலார் எடுத்துரைத்துள்ளனர்.

பேச்சுக்கலை பற்றிய சிந்தனையைத் திருக்குறளில் சொல்வன்மை, அவை அஞ்சாமை ஆகிய அதிகாரங்களில் வள்ளுவர் வெளியிடுகிறார். தமிழில் பேச்சுக்கலை இருந்தது. எனினும், அது பற்றிய தனி நூல்கள் அன்று எழவில்லை. திருக்குறளில் இனியவை கூறல், புறங்கூறாமை, பயனில சொல்லாமை, கேள்வி, குறிப்பறிதல் போன்ற அதிகாரங்கள் சொற்கோப்புக்கலை நுட்பத்தினை உள்ளடக்கி உள்ளன.

உரைநூல்களிலும் உரைநடை நூல்களிலும் பல்வேறு உத்தி முறைகளும், நடையியல் அழகும் பயின்று வந்துள்ளன. ஆங்கிலேய அரசின் காலத்தில், விடுதலை வேட்கையைப் பரப்பப் பேச்சுக்கலை உதவிற்று. கவிதைகள், நாடகங்கள், நூல்கள் ஆகியவற்றிலும் விடுதலை உணர்வு பல்வேறு புதிய உத்திமுறைகளால் பரப்பப்பட்டுள்ளது. விடுதலை பெற்ற நாட்டில், அரசியல் கருத்துகளைப் பரப்ப மேடைப்பேச்சு உதவிற்று. பல்வேறு பேச்சாளர்கள் தம் பேச்சுக் கலையால் மக்கள் உள்ளத்தில் நீங்கா இடம் கொண்டனர். சமயம், கல்வி, இலக்கியம், அரசியல் போன்ற பல்வேறு துறைகளிலும் வல்ல பேச்சாளர்கள் உருவாகினர். பேச்சுக்கலை வித்தகர்கள் தமக்கென ஒவ்வொருவரும் தனிமுறையைப் பின்பற்றினர். கிருபானந்த வாரியார், குன்றக்குடி அடிகளார் போன்றோர் தம் பேச்சால் மக்களை ஈர்த்தனர். பெரியார் ஈ.வே.ரா., அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, குமரிஅனந்தன், வை.கோ, ம.பொ.சி. போன்றோர் தம் பேச்சால் சொந்தக் கருத்துகளை மக்களிடையே பரப்பித் தம் எண்ணங்களைச் சாதித்துக் கொண்டனர். ஆட்சியைத் தம் பேச்சு வன்மையால் அரசியலார் தம் வசப்படுத்திக் கொள்வதையும் தமிழகத்தில் காணலாம். பேச்சுக்கலைக்கு உதவும் புலப்பாட்டு நெறிகள் எழுத்திலும் தொடர்ந்தன. உ.வே.சா. தம் பேச்சாலும், இயல்பான எளிமையான நாடகப்போக்கும் தன்னுணர்வுப் போக்கும் கூடிய கட்டுரைத்திறனாலும் தனித்தன்மை படைத்தவர்.

அவருக்கே உரிய புலப்பாட்டு நெறியை, அவர்தம் நூல்கள் வழி ஆராயும்போது உணரலாம்.

## புலப்பாட்டு நெறியின் கோட்பாடுகள்

சொற்கோப்புக்கலை பற்றிய விதிமுறைகள் காலந்தோறும் பல்வேறு நிலைகளில் உருவாகி வளர்ந்துள்ளன. கோரக்ஸ் என்பார், "பேச்சுப் புலப்பாட்டுக் கலையில் முன்னுரை, நிகழ்ச்சிக்கோவை முறை, விவாதம், முடிவுரை ஆகிய நான்கு பகுதிகள் வேண்டும்" என்கிறார். "பேச்சாளன் பேசப்போகும் பொருளின் உண்மையை உண்மையாகவே அறிய வேண்டும். தலைப்பில் அமைந்த சொற்களுக்கு இலக்கணம் தர வேண்டும். பேசப்படும் பொருளைத் தகுந்த முறையில் பகுத்துக் கொள்ளவேண்டும். கேட்பவன் மனநிலையை அறிந்து பேச்சினை அமைக்க வேண்டும்" என்று பிளேட்டோ கூறுவார்.

நீதிக்குப் புறம்பாக நடைபெறும் தவறுகளைப் போக்கக் கூடியது (Corrective), அறிவூட்டுந் தன்மை உடையது (Instructive), உடன்பாட்டிலோ எதிர்மறையிலோ குறிப்புப் பொருளைத் தெரிவிக்கக் கூடியது (Suggestive), அற்றம் காக்கும் கருவியாகக் கூடியது (Defensive) ஆகிய நான்கு தன்மைகளை நல்கும் கலை பேச்சுக்கலையாகும்" என்று உரைக்கிறார் அரிஸ்டாட்டில்.

பேசப்போகும் பொருளைப் பகுத்து வரிசைப்படுத்திக்கொள்ள வேண்டியது பேச்சாளனின் கடமையாகும். கையாளப்படும் நடையும் பேச்சில் சிறப்பிடம் பெறும். நினைவாற்றல் உடையவரே கோர்வையாகப் பேச முடியும். சிறப்புரை ஆற்றுபவன், வழங்கு முறையையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்றும் உணர்த்துவார் அரிஸ்டாட்டில்.

அரிஸ்டாட்டில் பேச்சுக்கலையை மூன்றாகப் பகுத்துள்ளார். அவர், நீதிமன்றப் பேச்சு, ஆழ்ந்த சிந்தனைப் பேச்சு, பொழுதுபோக்கிற்கான பேச்சு என மூவகையாகப் பிரித்துள்ளார்.

மார்க் ஆண்டனியின் சொற்பொழிவு ஆட்சிமாற்றத்தை உண்டாக்கியது. மக்கள் உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்தது.

விளக்கம் தருதல், ஒப்பீடு செய்தல், தொடர்புபடுத்திப் பார்த்தல், சூழலமைவு நோக்கல், சான்றாதாரம் காட்டல் ஆகிய கூறுகள் ஒருவர் பேச்சில் இருக்க வேண்டும் என்றும் விளக்குகிறார் அரிஸ்டாட்டில்.

சிசரோவின் கூற்றுப்படி கண்டுபிடிப்பு (Invention), வரிசை அமைவு (Dianysim), வெளியீட்டு முறை (Elocution), உச்சரிப்பு (Pronunciation),

நினைவாற்றல் (Memory) ஆகிய ஐந்து உத்திகளின் உள்ளடக்கமே புலப்பாட்டு நெறியாகும்.

பேச்சுக்கலைக்கு மொழிநடையும், வெளிப்பாட்டுத்திறனும் வேண்டும். 'நடை என்பது மனிதன் தன் எண்ணங்களை வெளியிடும் தனி முறைமை' எனப் பிளேர் கூறியுள்ளார். 'மொழியில் உரக்கச் சிந்திப்பது நடை' என நியூமென் உரைப்பார். 'சரியான இடத்தில் சரியான சொல்லைக் கூறுவது நடை' என்கிறார் ஸ்வீட்.

'புலவரின் உள்ளத்தில் உண்மையும் உறுதியும் சிறந்து விளங்கினால் அவருடைய நடை திட்பமும், நுட்பமும் பெற்று விளங்கும்' என்பார் மு.வரதராசன். 'நடை என்பது ஓர் ஆசிரியரின் தனித் தன்மையை வெளிப்படுத்தவல்லது. அவரை இனங்கண்டுகொள்ளும் வகையில் அவருக்கே உரித்தாக இருக்கும், வெளிப்பாட்டு மொழிப் பாங்கே அது. இலக்கியத்தில் அதுவே சாதனை' என்பார் முரே.

நடைப்போக்கில் கருத்துகளை மட்டும் இயல்பாக ஆற்றொழுக்காகக் கூறிச்செல்லும் இயல்பு நடை (Plain style). உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்யும் நடை நடுநடை (Middle style) கவித்திறன் மிக்க உயர் நடை (High style) ஆகிய மூன்று வகைகள் இருக்கின்றன.

சொற்பொழிவின் இடையே தக்க இடையீடுகள் (Rhetorical term periods) இருத்தல் அவசியம். சரியான தொடர் அமைப்பு (Correct syntax), சொற்களிடையே இயைபு (Collecation of words), வாக்கியக் கோலங்கள் (pattern of sentences), இணைப்புச்சொற்களின் பயன்பாடு (proper use of conjunctions) ஆகியவற்றை அறிந்து கொள்வதே தொடுக்கும் முறையாகும். பொருத்தமான இடங்களில் அணிகளைப் பயன்படுத்துவது, பொருளைக் கூறுவதில் ஒழுங்கு, நேர்மை, சொற்களை வரிசைப்படுத்தி அமைப்பதில் உள்ள சிறப்பு ஆகியவற்றை லாஞ்ஜீனியஸ் வற்புறுத்தியுள்ளார். முகவுரை, நிகழ்ச்சி வருணனை, உரை, பொருத்தமான அளவுப் பகுப்பு, உடன்பாட்டுரை, மறுப்புரை, முடிவுரை எனப் பேச்சை வரையறை செய்து கொள்ள வேண்டும் என்பார் தாமஸ்வில்கர்.

உரைநிகழ்த்தும்போது அழுத்தம், தொனி, ஏற்ற இறக்கம், அமைதி தந்து பேசல், உச்சரிப்பு, சைகை போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்று தாமஸ் செரிடான் கூறியுள்ளார்.

கருத்துகளோடு மக்களையும், மக்களோடு கருத்துகளையும் இணங்க வைக்கும் செயல்முறையே புலப்பாட்டுநெறி என்பர். கேட்போரை இணங்க வைக்கும் வகையில் மொழியை ஒரு குறியீட்டுக் கருவியாகப் பயன்படுத்தும்

நெறி புலப்பாட்டு நெறி எனலாம். கருத்துப் பரிமாற்றக் கருவியான மொழியைச் செப்பமுற அமைத்து, ஒழுங்குசெய்து பயன்படுத்தும் கலையே புலப்பாட்டு நெறி.

வள்ளுவர் சொல்ல வந்த கருத்தைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதால் பேச்சுக்கலை வல்லவராகத் திகழ்கிறார்.

கேட் டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

என்று கேட்போனை ஈர்க்கும் வகையில் பேசுவதே புலப்பாட்டுநெறி என்பதைப் புலப்படுத்துகிறார்.

இணருழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார்

என்று குறளில் பேச்சுக்கலையின் அவசியத்தை எடுத்துரைக்கிறார். பிறர் உணரும்படிக் கருத்தைப் புலப்படுத்த வேண்டும்.

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து

என்று பேச்சுக்கலைக்குப் பொருத்தமான சொற்களைக் கையாள்வதன் தேவையை வள்ளுவர் வற்புறுத்துகிறார். 'செவிக்கு உணவு கேள்வி, அக்கேள்வியால் தோட்கப்படாத செவி, செவியாகுமா?' என்று வினவுகிறார். வேட்பச்சொல், வேட்பனசொல், தொகச்சொல், நகச்சொல், ஒருதலையாச் சொல், பண்பற்றவை பிரியாச்சொல், இன்சொல் எனச் சொற்களை அறிந்து வள்ளுவர் வகைப்படுத்துகிறார்.

சொல்லிற் பயனுடைய சொல்லுக, பண்பில் சொல் பல்லாரகத்துச் சொல்லாதே. சொல்லில் கோட்டம் கூடாது. இன்னாச் சொல்லோ, கடுஞ்சொல்லோ கடுமொழியோ கூறாதே என்றெல்லாம் அறிவுறுத்துகிறார்.

உ.வே.சா. பேச்சிலும், எழுத்திலும் கிரேக்க நாட்டுப் புலப்பாட்டு நெறிகள் பொருந்தி வருவதைக் காணலாம். தாம் பேசப்போகும் பொருளின் உண்மையை உள்ளபடி உணர்தல், தலைப்புக்கு விளக்கம் தருதல், பேசப்படும் பொருளைத் தகுந்த முறையில் வகுத்துக் கொள்ளுதல், கேட்பவர் இயல்புக்கேற்றவாறு பேச்சை அமைத்துக் கொள்ளுதல் போன்ற பண்புகளை உ.வே.சா. வின் பேச்சிலும் எழுத்திலும் காணலாம்.

# உ.வே.சா. வின் கட்டுரைகளில் காணும் புலப்பாட்டுநெறி

# 1. நல்லுரைக்கோவை

## முன்னுரை

உ.வே.சா. சிறந்த கட்டுரை ஆசிரியர். அவர் எழுதிய கட்டுரைகள் நல்லுரைக்கோவை (4 பாகங்கள்), நினைவு மஞ்சரி (2 பாகங்கள்), நான் கண்டதும் கேட்டதும் என்னும் நூல்களாக வெளிவந்தன. புதியதும் பழையதும், மணிமேகலைக் கதைச்சுருக்கம், புத்த சரிதம், திருக்குறளும் திருவள்ளுவரும், மத்தியார்ச்சுன மான்மியம் என்பன அவர் எழுதிய பிற கட்டுரை நூல்கள்.

## உ.வே.சா. வின் காலச்சூழல்

உ.வே.சா. தம் வாழ்வில் பழகியவர்கள் - இசையறிஞர்கள், இலக்கிய அறிஞர்கள், பதிப்பாசிரியர்கள், புலவர்கள், சமயக்காவலர்கள் எனப் பல திறத்தினர். ஒவ்வொரு சார்பினரோடும் பழகுகையில் ஏற்பட்ட பயன்மிகு சுவையான நிகழ்ச்சிகளைச் சிந்திக்கத் தூண்டும் சிறுசிறு கட்டுரைகளாக ஆக்கினார். அவரது சில கட்டுரைகளில் குறிப்பிட்ட சில பாடல்களின் விளக்கங்களாகவோ, அவை தோன்றிய சூழ்நிலைகளை விளக்குவதாகவோ அமைந்துள்ளன. செய்திகளைச் சுவைகூட்டிக் கதைகள் போல எழுதுவதில் வல்லவர். உ.வே.சா. வாழ்ந்த காலத்தில் சிற்றிலக்கியங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன. தமிழ்க்கல்வி பயில, போதிய வசதிகளும், வாய்ப்புகளும் இல்லாதிருந்தன. புத்தகங்கள் வடிவில் அறிஞர் நூல்கள் ஒவ்வொன்றாய் அச்சேறிக் கொண்டிருந்த காலமது. ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதும் பழக்கம் பரவியிருந்தது. தமிழும் வடமொழியும் கலந்து எழுதும் மணிப்பிரவாள நடையே செல்வாக்குப் பெற்றிருந்த காலம். சைவமடங்கள் தமிழையும், சைவத்தையும் பேணி வளர்த்த காலம். காலச் சூழலுக்கேற்ப, உ.வே.சா. அக்கால நிகழ்வுகளைத் தம் நூல்களில் பதிவு செய்துள்ளார். நல்ல தமிழ்ச் சொற்களை இயன்ற மட்டும் பயன்படுத்தினார். சிறுசிறு தொடர்களாக அமைத்துக் கொண்டார். நாடகப் போக்கில் கட்டுரைகளின் இடையே உரையாடல்களைக் கையாண்டு நாடகப் பாங்கைக் கையாண்டுள்ளார். தன்னுணர்வுக் கட்டுரைகளாகவே அவர் எழுத்து அமைந்திருக்கிறது. உளப்பாட்டுத் தன்மையில், வாசகனையும் தன்னுடன் உணர்வில் பங்கேற்கச் செய்கிறார். பெரிதும் இதழ்களில் வெளிவந்தவை ஆதலின் ஆர்வநிலையைத் தூண்டும் முறையில் மொழிநடையைக் கையாண்டுள்ளார்.

கதைசொல்லி விளக்குதல், காரணகாரியம் காட்டிக் கருத்துகளை நிறுவுதல், மேற்கோள் காட்டுதல், பேச்சுவழக்கு ஆகிய புலப்பாட்டு உத்திகளை உ.வே.சா. பின்பற்றியுள்ளார். நகைச்சுவை இழையோடப் பல நிகழ்வுகளைச் சுவைபட எழுதிச் செல்கிறார். பழகுதமிழில், பத்திரிகை நடையில் எளிமையாகக் கருத்துகளை உ.வே.சா. வெளிப்படுத்தியுள்ளார்.

## நல்லுரைக்கோவையில் புலப்பாட்டுநெறி

நல்லுரைக்கோவை நான்கு பாகங்களாக வெளிவந்துள்ளது. மூன்றாம் பாகத்தில் பதினைந்து கட்டுரைகள் உள்ளன. இக்கட்டுரைகள் கலைகள், சரித்திரம், பழைய வரலாறுகள் தொடர்புடையவை. அவற்றுள் திவான் ஸர். ஏ. சேஷையா சாஸ்திரியார், கச்சியப்பனை உதைத்த கால் என்னும் இரண்டும் சுதேசமித்திரன் விஜயதசமி மலர்களிலும், மூப்பனார் தேசத்து ராஜா என்பது ஜயபாரதி வாரப் பத்திரிகையிலும், அபசாரத்திற்கு உபசாரம் என்பது ஜோதியிலும், பெண்கள் கடமை என்பது சாரதா ஸ்திரீகள் சங்க மலரிலும், ஒரு குமரன் என்பது ஆனந்தவிகடன் தீபாவளி மலரிலும் வெளிவந்தவை. கூத்தரும் குலோத்துங்கனும், அழையாவிருந்து, மாணாக்கர் விளையாட்டு, அன்னம்படைத்த வயல், அழைத்த காரணம், இன்னும் அறியேன், திருமலைராயன் பட்டினத்தில் ஏடு தேடியது ஆகிய ஏழு கட்டுரைகள் கலைமகளில் வெளிவந்தவை. 'பண்டைத்தமிழ் இசையும் இசைக் கருவிகளும்,' என்பது கோடைக்காலச் சங்கீதப் பள்ளிக்கூடத்தில் ஆற்றிய சொற்பொழிவாகும். அவ்வாறே 'இந்திய இலக்கியக் கழகம்,' என்பது பாரதீய சாகித்திய பரீஷத்தில் பேசிய சிறப்புரை ஆகும்.

## கட்டுரைகளின் பாடுபொருளும் புலப்பாட்டுநெறியும்

முதுபெரும் அறிஞர் உ.வே.சா. கேள்வியறிவால் தோட்கப் பெற்ற செவியுடையவர். பதிப்புப்பணி பொருட்டு ஊர் ஊராகச் சென்று பல காட்சிகளையும் கருத்துகளையும் அறிந்துகொண்டவர்; வாழ்வில் பல்வேறு அனுபவங்களை உற்றவர்; தமிழ்க்கல்வியில் ஆழங்கால் பட்டவர்.

> யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு.

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, வாழ்நாள் எல்லாம் தமிழ்க்கல்வியில் தோய்ந்தவர். 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்', என்ற நோக்கில் தாம் கண்டும், கேட்டும், உற்றும், உணர்ந்தும், கற்றும், பெற்ற அனுபவங்களைக் கட்டுரைகளாகத் தந்த வள்ளல். உ.வே.சா. வாழ்ந்த காலத்துக்கே அவர் எழுத்து வாசகனை இட்டுச் செல்லும். வாசகனின் வாசிப்புக்கிடையில் உ.வே.சா.வின் உருவம் நிழலாடக் காணலாம். அந்த அளவுக்குப் பக்கமிருந்து கதைகதையாய்ப் புதிது புதிதாய் ஊற்றெனப்

பொங்கும் பல்வேறு செய்திகளைச் சுவைபட உ.வே.சா. எழுதிச் செல்கிறார்.

நல்லுரைக்கோவை மூன்றாம் பாகத்தில் உள்ள கட்டுரைகள் பதினைந்தையும் எட்டு வகைகளாகப் பிரித்து அக்கட்டுரைகள் செப்பும் செய்திகளைப் புரிந்துகொள்ளலாம்.

பழங்கால நிகழ்வுகள்

பண்டைத் தமிழ் மன்னன் பெருஞ்சேரல் இரும்பொறை மோசிகீரரிடம் காட்டிய பரிவு குறித்து 'அபசாரத்திற்கு உபசாரம்' என்ற கட்டுரையில் எழுதியுள்ளார். குலோத்துங்கசோழன் ஒட்டக்கூத்தர்மீது கொண்ட மதிப்பைக் 'கூத்தரும் குலோத்துங்கனும்' என்ற கட்டுரையில் இயம்பியுள்ளார். ஆங்கில அரசாட்சியின் போது, புதுக்கோட்டை திவானாகப் பணியாற்றிய ஸர் ஏ. சேஷையா சாஸ்திரிகள் பற்றி ஒரு கட்டுரையில் விவரித்துள்ளார். சரபோஜி மன்னர் காலத்து நிகழ்வினைக் குறித்து, 'மூப்பனார் தேசத்து ராஜா' என்ற கட்டுரையில் எழுதியுள்ளார். கச்சியப்ப முதலியார் என்பவர் புலவர்களை ஆதரித்த செய்தியைக் 'கச்சியப்பனை உதைத்த கால்' என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார்.

அபசாரத்திற்கு உபசாரம்

மோசிகீரனார் என்பவர் கடைச்சங்க காலத்தில் இருந்த புலவர்களுள் ஒருவர். ஒரு நாள் அவர் சேர அரசனாகிய பெருஞ்சேரல் இரும்பொறையைப் பார்த்துப் பரிசில் பெற்று வரச் சென்றார். அப்போது வழி முழுவதும் வெயிலில் நடந்து போக வேண்டியிருந்தது. சேரமான் அரண்மனையை அணுகியவுடன் அவருக்கு மிக்கக் களைப்பு உண்டாயிற்று. அங்கே ஓர் அழகிய பெரிய கட்டில் அவர் கண்ணில் பட்டது. அதில் மெத்தென்ற அணைகளும், எண்ணெய் நுரையைப் போன்ற மெல்லிய விரிப்புகளும் மலர்களும் இருந்தன. வந்த களைப்பின் மிகுதியினால் அவர் அதன்மேல் ஏறிப்படுத்துக் கொண்டார். மெய்மறந்து ஆனந்தமாகத் தூங்கலானார்.

அந்தக் கட்டில் சேரமானது முரசை வைத்து வழிபடுவதற்குரியது. அதனை முரசுக் கட்டில் என்று கூறுவர். போர்செய்யத் தொடங்குவதற்குமுன் அம்முரசை முழக்குவர். அதனை மலரால் பூசித்துப் பலிகொடுத்து வழிபடுவர்.

அன்று பகைவனது மதிலைக் கைப்பற்றுவதற்காகச் சேரமான் அம்முரசிற்குப் பூசை செய்ய எண்ணியிருந்தான். முரசிற்கு அபிஷேகம் செய்துவரும் பொருட்டு, ஏவலாளர்கள் அதனை எடுத்துச் சென்றிருந்தனர்.

ஆதலின் அக்கட்டிலின் அருகே ஒருவரும் அப்பொழுது இல்லை. புலவர் அதனை முரசுக் கட்டிலென்று அறியாமல் அதில் படுத்து உறங்கிவிட்டார்.

அப்பொழுது அவ்வழியே சேரமான் வந்தான். அவனுடைய கண்கள் முரசுக் கட்டிலின்மேல் விழுந்தன. 'கடவுளுக்குரிய பீடத்தில் மனிதனா படுத்துறங்குவது?' என அவன் எண்ணினான். அவன் கண்கள் சிவந்தன. ஒரே வீச்சில் அவனை இரண்டு துண்டாக வெட்டிவிடுவதை அன்றி வேறு தண்டனை அவனுக்கில்லை என்று கட்டிலை அணுகினான்.

அருகில் சென்றதும் படுத்திருப்பவர் புலவர் என்று உணர்ந்தான். கோபம் தணிந்தான். புலவர்மீது பரிவும், அன்பும் கொண்டான். அங்கே இருந்த கவரியை எடுத்து மெல்லப் புலவர் தூக்கம் கெடாமல் இருக்க வீசினான். சிலநேரம் சென்றது. மோசிகீரனார் ஒருவாறு துயில் நீங்கினார். உண்மையை உணர்ந்தார். மன்னனின் மாண்பையும், புலவரைப்போற்றும் பண்பையும் புரிந்துகொண்டார். "அபசாரத்திற்கு உபசாரமா தண்டனை" என்று வியந்தார். அந்த வியப்பின் உச்சியில் நின்று கவிதை பாடினார்.

மாசற விசித்த வார்புறு வன்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை யெண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய வென்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
அதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்
அதனொடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத் தோளோச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடங் கமழ
இவணிசை யுடையோர்க் கல்லதவண
துயர்நிலை உலகத் துறையுளின்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குருசினீ யீங்கிது செயலே (புறநானூறு 50)

'அபசாரத்திற்கு உபசாரம்' என்று வடமொழித் தலைப்பை இட்டு, சங்கத் தமிழ்ப் புலவரின் பெருமையை உ.வே.சா. கூறியிருப்பது சற்று முரணாக் இருக்கிறது. இருப்பினும் மணிப்பிரவாள நடை ஆட்சி செய்த

காலத்தின் தாக்கம் உ.வே.சா. வையும் விட்டுவைக்கவில்லை எனலாம். மோசிகீரனாரிடம் பாசமும் பரிவும் காட்டிய இரும்பொறையின் தமிழ்ப்பற்றைக் கதைபோல எடுத்துரைக்கிறார்.

### உணர்ச்சிநடை

உணர்ச்சி மேலிட நாடகப் போக்கில் நிகழ்வுகளை எடுத்துச் சொல்கிறார் உ.வே.சா. "என்ன! மனிதனா படுத்திருக்கிறான்" என்று திடுக்குற்றுப் பார்த்தான். "ஆம்! மனிதன்தான். சந்தேகமே இல்லை. சுகமாகத் தூங்குகிறான். என்ன துணிவு! என்ன தைரியம்!" என்று அவன் எண்ணினான் (ப.185).

மோசிகீரனார் தமக்குக் கவரி வீசி நின்ற மன்னனைக் கண்டு திகைத்தார். சேரமான் தமிழ்ப்பற்றையும், தம்மீது கொண்ட பரிவையும் கண்டு நெஞ்சம் உருகினார். "என்ன ஆச்சரியம்! நான் பண்ணிய குற்றத்திற்கு இதுவா தண்டனை? வாளை எடுத்து வீச வேண்டிய இக்கை கவரியை அல்லவா வீசுகிறது ! என்று வியந்தார்", (ப.187) என்று உ.வே.சா. எழுதும் போது உணர்ச்சி நடையைக் கையாள்கிறார்.

### வினைமுற்றுத் தொடர்

சின்னச்சின்ன வினைமுற்றுகளை அடுத்தடுத்து அமைத்து, நிகழ்வுகளை அப்படியே மனக்கண்முன் கொண்டு வருவதில் உ.வே.சா. வல்லவர்.

> அவன் கண்கள் சிவந்தன. மீசை துடித்தது. கை
> உறையினின்றும் வாளை உருவியது

என்றும்

> 'ஆ' என்று அவன் கூவினான். அவன் கை சோர்ந்தது.
> வாள் உறைக்குள்ளே சென்றது,

என்றும் சிறுசிறு தொடர்களை அமைத்துக் கருத்துகளை எளிதில் புலப்படுத்தியுள்ளார்.

### வடமொழிச் சொற்கள்

தலைப்பில்தான் வடமொழி இடம் பெற்றிருக்கிறது. கட்டுரையில் நல்ல தமிழ் நடையே நிலவுகிறது. வடமொழிச் சொற்கள் அருகியே வந்துள்ளன. அபிஷேகம், உபசாரம் என்று வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தி யுள்ளார்.

## கூத்தரும் குலோத்துங்கனும்

கூத்தருக்கும் குலோத்துங்கனுக்கும் நிலவிய தமிழுறவை நிலைநாட்டுவது இக்கட்டுரையாகும். மன்னன், புலவனின் பரிந்துரையை ஏற்று வேலையை விட்டு நீக்கிய சமையற்காரனை மீண்டும் வேலையில் அமர்த்திய நிகழ்வை இக்கட்டுரை இயம்புகிறது.

ஒட்டக்கூத்தரை இரண்டாம் குலோத்துங்கனின் தந்தை விக்கிரம சோழன் ஆதரித்துப் போற்றி வந்தான். 'தன் மைந்தன் குலோத்துங்கனும் இளமைக்கால முதலே அப்பெரியாருடைய நல்லுரைகளைக் கேட்டுச் சிறந்த அறிவுடையான் ஆகலாம்' என்பது அவனுடைய கருத்து. அவ்வாறே ஒட்டக்கூத்தரிடம் இளமையிலேயே மாணாக்கனாக ஒப்படைக்கப்பட்டவன் இரண்டாம் குலோத்துங்க சோழன்.

அக்குலோத்துங்கன் மன்னன் ஆன பின்பும் கூத்தரை ஆதரித்து வந்தான். அவர் ஆலோசனை கேட்டு நடந்தான். கூத்தர் மன்னன்மீது பிள்ளைத்தமிழ் பாடினார். உலா ஒன்றையும் இயற்றினார். நாள்தோறும் அவன் புகழை இசைத்தார். தம்மைப் போற்றி எழுதும் கூத்தரின் பாட்டுக்களைக் கேட்டு மகிழ்ந்த குலோத்துங்கன், தன் செய்ந்நன்றி உணர்வைப் புலப்படுத்த நேரம் பார்த்துக் காத்திருந்தான். ஒருநாள் கூத்தர், குலோத்துங்கனைச் சிறப்பிக்கும் விதத்தில்,

> ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெல்லாம்
> நீடுங் குடையிற் றரித்த பிரான்

என்று சொல்லி நிறுத்தினார். உடனே மன்னன்,

> ........ என்று நித்தநவம்
> பாடும் கவிப்பெருமானொட்டக் கூத்தன் பாதாம்புயத்தைச்
> சூடும் குலோத்துங்கசோழனென் றேயெனைச் சொல்லுவரே

என்று அப்பாட்டை முடித்து நிறுத்தினான்.

ஒரு சமயம், அரசன் உணவு உண்ணும்போது, உணவில் கல் அகப்படவே, மன்னன் கோபங் கொண்டு சமையற்காரனை வேலையிலிருந்து நீக்கினான். அச்சமையற்காரன், ஒட்டக்கூத்தரிடம் சென்று மன்றாடித் தன்னைப் பணியில் அமர்த்தப் பரிந்துரை செய்யும்படி கேட்டுக் கொண்டான். உற்ற சமயம் பார்த்திருந்தார் கூத்தர். ஒருநாள் இருவரும் உரையாடிய போது, மன்னன் 'மடையன், சோற்றில் கல்லும் மண்ணும் இருப்பதைக் கவனியாமல் இருந்தான்' என்று சமையற்காரனை வேலையை விட்டு நீக்கியதைச் சொன்னான். உடனே கூத்தர், 'பெரிய மலைகளையும்,

மண்ணையும், விழுங்கிய பழக்கம் மகாராஜாவுக்கு உண்டே! அது மறந்து போயிற்றா ?' என்று வினவினார். திருவுடை மன்னன் நீ திருமாலுக்குச் சமம் 'நீ முன்பு சமுத்திரத்தையும், மண்ணுலகையும் மலைகளையும் உண்டவன் அல்லவா' என்ற கருத்தில் எடுத்துரைத்தார், கூத்தர். உடனே மன்னன், 'தங்கள் உள்ளக் குறிப்பை உணர்ந்தேன். இன்றிரவே அவன் நம் அரண்மனையில் மீண்டும் பணிசெய்யத் தொடங்குவான்,' என்றான்.

இந்தக்கட்டுரைக்கு ஆதாரமாக இருந்தது ஒரு தனிப்பாடல். அப்பாடலுக்கு விளக்கம் தருவது போல இக்கட்டுரை அமைந்திருக்கிறது.

மீனகம் பற்றிய வேலையை மண்ணையவ் வெற்படங்கப்
போனகம் பற்றிய மாலலை யோபொருந் தாவரசர்
கானகம் பற்றக் கனவரை பற்றக் கலங்கள் பற்ற
வானகம் பற்ற வடிவேல் விடுத்த மனுதுங்கனே

என்பது அப்பாடல். இப்பாடலுக்கு அடிக்குறிப்பில் விளக்கம் தந்துள்ளார்.

நாடகப்போக்கு

குலோத்துங்கனுக்கும் கூத்தருக்கும் இடையே நடந்த உரையாடலை நாடகம்போலக் கட்டுரைக்கு நடுவில் அமைத்துள்ளார்.

அவ்வாறே சமையற்காரனுக்கும் கூத்தருக்கும் இடையே நடந்த உரையாடலையும் நாடகம்போலவே அமைத்துள்ளார்.

'பெருமானே, நான் செய்தது பிழை. அதற்குத் தலைவிதியை நொந்துகொள்வதையன்றி வேறு வழியில்லை. பெரியவர்கள் இந்த ஏழையடிமையை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும்' என்று மீண்டும் கதறினான் அவன்.

கூத்தர்,'சரி நீ வீட்டுக்குப் போ. என்னால் ஏதாவது முடியுமானால் செய்கிறேன்,' என்று சொல்லி அவனை அனுப்பினார். இவ்வாறெல்லாம் நிகழும் பாத்திர உரையாடல்கள், கட்டுரைக்கு நாடகத் தன்மையை நல்குகின்றன.

சொல்லாடல்

உ.வே.சா. கவிதை புனையும் ஆற்றல் மிக்கவர். சாதுரியமான சொல்லாடல்களையும், பழமொழிகளையும் கட்டுரையில் ஆங்காங்கே இடம் பெறச் செய்துள்ளார்.

"தமிழ்மொழிப் பரப்பைத் தம் அறிவினால் ஆண்டுவந்த அக்கவிச் சக்கரவர்த்தியின் பெரும்புலமையையும் தமிழ்நிலப் பரப்பைத் தன்

ஆணையால் ஆண்டு வந்த புவிச்சக்கரவர்த்தியின் பேரன்பையும் தமிழ்நாட்டார் உணர்ந்து வியந்தனர்'' (ப.2) என்று எழுதும்போது உ.வே.சா. வின் சொல்லாடல் திறனை அறியலாம். 'அரசனுக்கு ராஜஸகுணம் இயல்பல்லவா?' என்றும், "அரசன் ஆணைக்கு மேலும் ஓர் ஆணையுண்டோ?'' என்றும் மக்கள் வழக்கில் உள்ள சொல்லாடல்களையும் இணைத்துள்ளார். 'அதற்குரிய செவ்வியை எதிர்ப்பார்த்திருந்தான்,' என்ற வரியில் 'செவ்வி' என்ற பழந்தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

### ஆர்வநிலை உத்தி

கட்டுரையை முடிக்கும்போது, "வேலையினின்றும் விலக்கப்பட்ட சமையற்காரன் அன்றிரவு சமைத்த சமையல் மன்னனுக்காகவா, அன்றிப் புலவருக்காகவா என்பதை யாரேனும் வரையறுத்துச் சொல்ல முடியுமா? என்று முடிக்கிறார். வினாவுக்குரிய பதிலை வாசகன் நெஞ்சில் தோற்றுவித்துச் சுவையான நிகழ்வை அனுபவித்த மனநிறைவை உருவாக்குகிறார்.

### வினா விடை

மேடைப்பேச்சில் பேச்சாளன் முன்னிற்போரை விளித்தும், பல கேள்விகளை முன்வைத்தும், உணர்வு பொங்கப் பேசுகிறான். அப்போது கேட்போன் மனத்தில் நல்லதொரு மனமாற்றத்தை விளைவிக்க முடியும். இத்தகு வினா முறையைப் பண்டைய உரையாசிரியர்களும், உரைநடை ஆசிரியர்களும் பின்பற்றி உள்ளனர். அவ்வாறே உ.வே.சா. வும் வாசகனுடன் பேசுவதுபோன்ற பாவனையை உருவாக்கிக் கொண்டு வினா விடையை அமைத்துள்ளார்.

'நான் ஒரு புலவன்தானே ? என்னை இப்படிச் செய்யலாமா? நீங்கள் முடிமன்னரல்லவா?' என்றார் புலவர் பிரான் (ப.5).

'அரசருடைய உணவென்றால் கவனமாக இருக்க வேண்டாமா? இவ்வளவு குடிகளுக்கும் அவர் உயிரல்லவா?' என்று கேட்டார் சூத்தர் (ப.7). இவைபோலப் பெரிதும் வினா விடையை உ.வே.சா. கையாண்டுள்ளார்.

### வடமொழிச் சொற்கள்

இக்கட்டுரையில் ஓரிரு வடசொற்களே இடம்பெற்றுள்ளன. தேவரீர், பாதாம்புயம், ராஜஸகுணம் என்பன போன்று மிகக்குறைவாக வடசொற்களைப் பயன்படுத்தியுள்ள போக்கு பாராட்டுக்குரியது.

### திவான் ஸர். ஏ.சேஷையா சாஸ்திரியார்

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவர். பதிப்புப் பணியிலும், தமிழ்ப்படிப்பிலும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட உ.வே.சா. புறச்

சூழல்களால் எந்த விதப் பாதிப்பும் கொள்ளவில்லை. நாட்டு விடுதலைப் போரிலோ, சமூக மாற்றத்திலோ எந்தப் பங்கும் ஏற்கவில்லை. காலம்போன போக்கிலே தாமும் உடன்சென்று, அந்த இடர்ப்பாடான காலத்திலும், தமிழ்ப்பணியில் முழுமுச்சாக ஈடுபட்டார். அந்நியர் ஆட்சிக் காலத்தில் நடந்த நல்லவற்றையும், அந்நியர் ஆட்சியில் பயன்பெற்ற பெரியோர்களையும் ஏற்கும் மனநிலையே பெற்றிருந்தார்.

அமராவதி சேஷையா சாஸ்திரியார் திருவனந்தபுர சமஸ்தானத்திலும் புதுக்கோட்டை சமஸ்தானத்திலும் திவானாகப் பணியாற்றியவர். ஆங்கில அரசுக்கு உறுதுணையாக இருந்து ஆட்சி நிர்வாகத்தில் பங்கேற்றார். நல்ல அறச்செயல்களைச் செய்வதற்கும் நாட்டுக்கு நன்மை செய்வதற்கும் உரிய வாய்ப்பாக அப்பணியைப் பயன்படுத்திக் கொண்டார். நல்ல நிர்வாகி. ஏழைக்கு இரங்கும் பண்பினர். குளம் வெட்டி, நீர்வளம் பெருகச் செய்தார். மின்வசதி இல்லாத காலத்தில், பல தீப ஸ்தம்பம் நிறுவினார். அவர் வாழ்நாளில் சாதித்த செயல்களைச் செவிவழிக் கேட்டு, அவற்றைச் சுவைபடத் 'திவான் ஸர்.ஏ. சேஷையா சாஸ்திரியார்' என்ற கட்டுரையில் தடிகொண்ட ஐயனார், அவர் செத்தாலோ? வறுத்த கொள் முளைக்குமோ? எதுகை மோனை உத்தரவுகள் என்ற நான்கு தலைப்புகளில் விவரித்துக் கூறியுள்ளார்.

புதுக்கோட்டையில் உள்ள பைரவபுரம் என்ற ஒரு பெரிய தெருவில் போக்குவரத்துக்கு இடையூறாகப் பெரிய ஆலமரம் இருந்தது. அம்மரத்தடியில் ஐயனார் கோயிலொன்று இருந்தது. அம்மரத்தை வெட்ட ஊர்மக்கள் தடையாக இருந்தனர். மக்கள் நம்பிக்கையைக் கடந்து, அதிரடியாக அம்மரத்தை வெட்டத் திவானுக்கு மனமில்லை. எனவே அவர்கள் போக்கில் சென்று, அவர்கள் இசைவு பெற்று மரத்தை வெட்டினார். முதலில் ஐயனாருக்கு மரம் வெட்டப்பட வேண்டியதன் அவசியத்தையும், ஐயனார் பிறிதொரு கோயிலில் இருக்க வேண்டுமென்றும் ஒரு விண்ணப்பம் எழுதி ஐயனார் திருவடிகளில் வைத்தார். குறிப்பிட்ட நாளில் ஐயனாருடைய கோபத்துக்கு அஞ்சி வேலையாட்கள் கோடரியைத் தொடவும் பயந்தனர். சாஸ்திரி துணிந்து தாமே கோடரியை எடுத்துத், 'தடிகொண்ட ஐயனார் துணை,' என்று சொல்லிக் கொண்டு வெட்டத் தொடங்கினார். வெட்டும்போது அவருக்கு எதுவும் நேரவில்லை. மக்கள் எதிர்ப்புக் காட்டவில்லை. சாஸ்திரியும் தம் காரியத்தைச் சாதித்துக் கொண்டார்.

ஒரு சமயம் கணக்குப்பிள்ளை ஒருவர் சரியில்லை என்று அவரை வேறொரு கிராமத்துக்கு மாற்றிவிட்டார், சாஸ்திரியார். அதனை எதிர்த்து மக்களின் கையொப்பங்களை வாங்கி மீண்டும் கணக்குப்பிள்ளை

விண்ணப்பித்தார். ஆனால் சாஸ்திரியார் தம் ஆணையை மாற்றிக் கொள்ளவில்லை.

அவ்வாறே வேலையிலிருந்து நீக்கப்பட்ட குற்றம் செய்த பணியாளர்களுக்குப் பரிந்துரை பலர் செய்தும், மீண்டும் சாஸ்திரியார் வேலை கொடுக்க மறுத்துவிட்டார்.

அவருடைய உத்தரவுகள் எதுகை மோனை நயமுடன் இருக்கும் என்று உ.வே.சா. பாராட்டி எழுதியுள்ளார்.

'கேட்பதோ வில்லை கொடுப்பதோ வில்லை கொடுத்தாலும் தொல்லை' 'வட்டமோ எட்டு வல்லநாட்டு மாகாணம் பட்டுப்பாயும் கம்பளியும் பற்றாவோ?' என்றெல்லாம் அவருடைய உத்தரவுகள் அமைந்திருந்தன.

சேஷையா சாஸ்திரியாரின் நிர்வாகத் திறனையும், கண்டிப்பையும் இக்கட்டுரையில் தெளிவாகக் கூறியுள்ளார்.

### பிறமொழிச் சொற்கள்

பாதாரவிந்தம், சமர்ப்பிக்கும், மகஜர், ஆச்சாரிய புருஷர், பிரதிஷ்டை, போன்ற வடசொற்களைப் பயன்படுத்தியுள்ளார். மேலும் பர்த்ருப் என்ற சொல்லுக்கு வேலையை விட்டுத் தள்ளுதல் என்று அடிக்குறிப்பில் பொருள் எழுதியுள்ளார். அச்சா என்ற இந்திச் சொல்லையும் பயன்படுத்தியுள்ளார். ரிவென்யூ இன்ஸ்பெக்டர், திவான் ரீஜண்ட் என்பன போன்ற ஆங்கிலச் சொற்களையும் பயன்படுத்தியுள்ளார்.

தாமறிந்த தகவல்களைச் சுவையாக அடுத்தடுத்துச் சொல்லிச் செல்லும் உ.வே.சா. வின் எளிய நடை இக்கட்டுரைக்கு அழகூட்டுகிறது.

### மூப்பனார் தேசத்து ராஜா

இத்தலைப்பே வித்தியாசமாக, ஆர்வநிலையைத் தூண்டுவதாக அமைந்தது. தஞ்சையை அரசாண்ட சரபோஜி மன்னர் வடதேச யாத்திரை செய்தார். மன்னரை வடநாட்டு மக்களும், பிரபுக்களும் வந்து பார்த்துச் சென்றனர். அப்படி வந்த கூட்டத்தில் பல பைராகிகளும் இருந்தார்கள். அவர்கள் சரபோஜி மன்னரைச் சுட்டிக்காட்டி இவர் 'மூப்பனார் தேசத்து ராஜா' என்று சொன்னார்கள். அரசர், யார் அந்த மூப்பனார்? என்று சிந்தித்து விசாரித்தார். பைராகிகள் அது குறித்து விளக்கம் தந்தனர். இராமபத்திர மூப்பனார் சரபோஜி மன்னனின் குடிமக்களில் ஒருவர். அவர் அன்னதானம் செய்து வருபவர். பயணம் மேற்கொண்டு வரும் வெளியூர் மக்களுக்கு அன்னம் அளித்து ஆதரித்து வருபவர் என்பதை அறிந்து கொண்டார். பின்னர் ஊருக்கு மீண்ட பின்பு அன்ன சத்திரங்களை ஏற்படுத்தினார்.

இக்கட்டுரை செவிவழியாகக் கேட்ட செய்தியை விவரிப்பதாகும். கட்டுரையின் இறுதியில், 'சரபோஜி மன்னர் அன்னதான சத்திரங்கள் ஏற்படுத்தினாலும், அவர் வடதேசத்துப் பைராகிகளுக்கு மூப்பனார் தேசத்து ராஜாவாகவே இருந்து வந்தார்' என்று உ.வே.சா எழுதியிருப்பது அவரது நகைச்சுவை உணர்வைக் காட்டுகிறது.

சொல்விளக்கம்

பைராகிகள் எப்படிப்பட்டவர்கள்? என்பதற்கு உ.வே.சா. விளக்கம் தருகிறார். பைராகிகள் எப்பொழுதும் யாத்திரை செய்து கொண்டிருப்பவர்கள். ஆதலின் அவர்கள் எல்லா நாடுகளையும் அறிந்தவர்கள் (ப.91) என்று உ.வே.சா. விவரிக்கிறார்.

உரையாடல்

கட்டுரையின் இடையில் பாத்திர உரையாடல் அமைந்து நாடகப் பாங்கினைக் கட்டுரைக்குத் தருகிறது.

"எந்த மூப்பனார்?"

"கபிஸ்தலம் மூப்பனார்."

"அவர் பெயர் என்ன ?"

"அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? பல தேசங்களையும் கடந்து அவருடைய புகழ் வீசும்பொழுது, அருகிலுள்ள உங்களுக்குத் தெரியாமலா இருக்கும் ?" (ப.92)

என்று உரையாடலை இடையில் அமைத்துள்ளார்.

சுவை மாற்றணி

ஒரு புலனுக்குரிய சுவையை, மற்றொரு புலனுக்கு மாற்றித் தரும் அழகைச் 'சுவை மாற்றணி' எனலாம்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே

என்ற பாரதியார் கவிதையில் இவ்வணி சிறக்கக் காணலாம்.

"பைராகிகள் மேலும் மேலும் வருணிக்கத் தொடங்கினார்கள். அதிகாரிகளுக்குக் காது கொப்பளித்துவிட்டது" (ப.93) என்று சொல்லும் போது பைராகிகளின் பேச்சைக் கேட்டு அதிகாரிகளுக்குச் சலித்துவிட்டது. என்பதைக் கூறக் 'காது கொப்பளித்துவிட்டது' என்ற சொல்லாடலைப் பயன் படுத்தியுள்ளார் என்பதை அறியலாம்.

வடசொற்கள்

முகவிலாஸம், உபசாரம், ராஜா போன்ற சில வடசொற்கள் கட்டுரையில் பயின்று வந்துள்ளன.

ஒரு சிறு நிகழ்வைச் சுவைபட வருணித்து விளக்க நடையில் இக்கட்டுரையை உ.வே.சா. எழுதியுள்ளார்.

கச்சியப்பனை உதைத்த கால்

இக்கட்டுரையின் தலைப்பு ஆர்வநிலைத் தலைப்பாக விளங்குகிறது. காளத்தி முதலியார் என்பவரின் கொடைத்தன்மையையும், புலவரை ஆதரிக்கும் தமிழ்ப்பற்றையும் இக்கட்டுரை விளக்குகிறது. செவிவழிக் கேட்ட செய்தியை விவரித்துக் கட்டுரை வடிவாக்கியுள்ளார்.

காளத்தி முதலியாருக்குக் கச்சியப்பர் முதலியாரென்ற குமாரர் ஒருவர் இருந்தார். அவர் தம் வீட்டில் எப்பொழுதும் தண்டமிழ்ப் புலவர்கள் கூடித் தமிழ் நயங்களை எடுத்து உரைத்து அளவளாவி மகிழ்வர். ஒருநாள், முதலியார் புலவர்களை நோக்கி, ‘நேற்று இரவு ஒருவன் என் மார்பிலே காலால் உதைத்தான். அவனுக்கு என்ன தண்டனை விதிக்கலாம்?’ என்று கேட்டார். புலவர்கள் பலரும் பலவிதமாகப் பதிலுரைத்தனர். வீரகவிராயர் என்பவர், ‘அப்படி உதைத்த காலுக்குத் தண்டையும் கொலுசும் பண்ணிப் போட வேண்டும்’ என்று புகன்றார். அனைவரும் திகைத்தனர். ‘இவர்களை உதைத்தவன் இவர்களுடைய அன்புக்குப் பாத்திரனாக இருக்க வேண்டுமென்றே தோற்றுகிறது. முதலியாரவர்களுடைய குழந்தையை அல்லாமல் வேறு யாருக்கு அப்படிச் செய்யும் உரிமை உண்டு?’ என்று மேலும் வீரகவிராயர் விளக்கம் அளித்தார்.

> மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு
> கண்படுமோ எப்போதும் கற்றவர்க்குப் - பண்புடனே
> மெச்சியப்பா லுங்கொடுக்கும் வீறுவல்லைக் காளத்திக்
> கச்சியப்ப னையுதைத்த கால்

என்ற வெண்பாவை இசைத்தார் வீரகவிராயர். புதிர் விலகியது. அனைவரும் மகிழ்ந்தனர்.

சொல்லாடல்

‘கற்பகத்தின் கீழ்க் கன்றே போற் புலவர்களை ஆதரித்துப் பெயர் பெற்றார்’ (ப.164) என்று உவமை அமைத்துள்ளார் உ.வே.சா. மேலும் “கவிஞர்களுக்கு எய்ப்பில் வைப்பாக விளங்கிய அவருடைய வீட்டில் எப்பொழுதும் தண்டமிழ்ப் புலவர்கள் கூடியிருப்பர்”, என்ற போது, ‘எய்ப்பில் வைப்பு’ என்ற சொல்லாடலை அமைத்துள்ள அழகு வியக்கத்தக்கது.

### வினா விடை

“இவர்களை ஒருவன் கோபித்து உதைப்பதென்றால் முடியா? பராக்கிரமசாலிகளாகிய இவர்கள், அப்படி உதைக்கும் வரையில் பேசாமல் இருப்பார்களா? அல்லாமலும், சயன அறையிலே இரவில் ஒருவன் வந்து உதைக்க வேண்டுமென்றால் அது சாத்தியமாகுமா?.... யாருக்கு அப்படிச்செய்யும் உரிமை உண்டு?” என்று வினாக்களை அடுக்கிக் கேட்போரை உளப்படுத்திக் கருத்துக்கு வலுசேர்க்கும் வண்ணம் வினாநடையை உ.வே.சா. கையாண்டுள்ளார்.

### நாடகப்போக்கு

ஆர்வநிலையை வளர்க்கும் விதத்தில் உரையாடலைக் கட்டுரையின் இடையில் அமைத்துள்ளார்.

> “உங்கள் கருத்து என்ன?” என்று கவிராயரை முதலியார் கேட்டார்.
>
> “இராத்திரி உங்கள் சயன அறையிலே தானே அவன் உங்களை உதைத்தான்?” என்று கவிஞர் வினவினார்.
>
> “ஆமாம்” என்றார் முதலியார்.
>
> “எங்கே இருந்தால் என்ன?” என்று இடைமறித்து ஒருவர் சொன்னார். (ப. 166)

இத்தகு உரையாடல் போக்கு, நாடக அமைப்பைக் கட்டுரைக்குத் தருகிறது.

### வடசொற்கள்

அக்கிரமம், சிக்ஷித்திருக்க, சயனஅறை, விஷயம், பராக்கிரமசாலி என்பன போன்ற சிற்சில வடசொற்கள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன.

இக்கட்டுரை பழந்தமிழ் வெண்பாப் பாட்டுக்கு விளக்கம் தரும் வகையிலும், செவிவழிக் கேட்ட செய்தி அடிப்படையிலும் எழுதப்பட்டது.

## சைவத்திருமடங்கள் குறித்த கட்டுரைகள்

நல்லுரைக்கோவை மூன்றாம் பாகத்தில் பதினைந்து கட்டுரைகளில் மூன்று சைவத் திருமடங்கள் குறித்த செய்திகளைக் கூறுகின்றன. அந்நாளில் சைவ ஆதீன மடங்கள் புலவர்களை ஆதரித்து வந்தன. சைவத்தையும், தமிழையும் காத்துவந்தன.

### அழையா விருந்து

சைவத்திருமடங்கள் நாடாளும் குறுநில மன்னர்களைப் போற்றி, அவர்கள் ஆதரவுடன் சைவமதத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டன.

ஒரு சமயம் இராமநாதபுரம் அரசராக இருந்த பாஸ்கர சேதுபதி ஆன்மீகப் பயணம் மேற்கொண்டார். திருவிடைமருதூருக்கு வந்து ஒருமாதம் அத்தலத்தில் தங்கியிருந்தார். அக்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தின் தலைவராக விளங்கியவர் அருள்மிகு அம்பலவாண தேசிகர். திருவிடைமருதூரிலேயே இருந்து வந்தார். தேசிகர் மன்னரையும், அவருடைய பரிவாரங்களையும் மிகவும் செவ்வையாக உபசரித்து வந்தார். சேதுபதி அங்கிருந்து மாயூரத்திற்குச் சென்றார். ஆதீனத்துக்குச் சொந்தமான கட்டளை மடமொன்று உண்டு. அங்கு அனைவரும் தங்குவதற்குரிய வசதிகள் செய்யப் பட்டிருந்தன.

சேதுபதி வேந்தருடன், அவர் பரிவாரங்களும் பத்திரமாக மாயூரம் வந்து சேர்ந்தனர். அங்கிருந்து அழகிய மேனாப் பல்லக்கில் ஏறி மடத்தைச் சென்றடைந்தார் சேதுபதி. பிறரும் பிற வாகனங்களில் ஏறி மடத்துக்குச் சென்றனர். பரிவாரங்களோடு ஊர்பேர் தெரியாத ஒருவன் ஊடே நுழைந்து கொண்டான். பெரிய அதிகாரி போல நடித்து, மன்னருக்கும், பிறருக்கும் தந்த உபசரிப்புகளையும், உணவுப் பொருட்களையும் முன்னதாகப் பெற்றுக் கொண்டு உண்டு மகிழ்ந்திருந்தான். இதை உ.வே.சா. கண்டார். இருப்பினும் வாளா இருந்தார். மன்னர் சேதுபதி, தம் அன்பிற்குரிய சிவத்தொண்டர் இருவர் நோயுற்று மரணம் எய்திய செய்தி கேள்வியுற்று மாயூரத்தில் கவலையுற்றிருந்தார். எவருடனும் பேசவில்லை. எவரும் நெருங்க அஞ்சினர். அவருடைய மனநிலையை மாற்ற உ.வே.சா. அவர் அருகில் சென்று ஆறுதல் கூற முனைந்தார். "பாவம், மன்னரின் அன்பிற்குரிய அந்த இருவர் அஜீரணத்தால் துன்புற்று இறந்தார் என்றால் ஆச்சரியமாக இருக்கிறது. இந்த இருவருடைய கதியையும் பார்க்கும்போது, எனக்கு வேறொரு கவலை உண்டாகிவிட்டது. கவலைக்கிடனான மனுஷர் ஒருவர் இவ்விடத்திலும் இருக்கிறார்" என்று கூறி நிறுத்தினார். மன்னர் 'என்ன' என்று வியந்து கேட்டார். உடனே உ.வே.சா., 'மன்னர் கூட்டத்தோடு உட்புகுந்து கடந்த மூன்று நாட்களாக ஒருவர் இரு பக்கத்தாரையும் ஏமாற்றிக் கிடைத்ததை உண்டு வருகிறார். பின்னால் ஏதாவது விபரீதம் உண்டானால் என்ன செய்வதென்று தான் யோசிக்க வேண்டியிருக்கிறது' என்று வந்து புகுந்தவனைக் காட்டிக் கொடுத்துவிட்டார். எண்ணியபடி, மன்னரும் தம் மனக்கவலை மாறி, இச்செய்தியை அறிய ஆர்வம் காட்டினார். 'என்ன தைரியம்' என்று சொல்லி நகைத்தார். அவருடைய துயரம் மாறியது. ஊடே நுழைந்த மனிதர் அகற்றப்பட்டார்.

இக்கட்டுரைக்கு, அழையா விருந்து என்று தலைப்பிட்டுள்ளார். தன்னையும் உள்ளப்படுத்தித் தன்னனுபவ நிகழ்வாக இக்கட்டுரையை உ.வே.சா. எழுதியுள்ளார். அந்நாளில் சைவ ஆதீன மடங்களின்

செயல்பாடுகளையும், மன்னர்களுக்குத் தரப்படும் மிகுந்த வரவேற்புகளையும் ஆடம்பர விருந்துகளையும், மடங்களைச் சார்ந்து ஒரு கூட்டம் பிழைப்பதையும் உ.வே.சா. சுட்டிக்காட்டியுள்ளார். மடத்தில் மன்னருக்கும், அவர் பரிவாரங்களுக்கும் தரப்பட்ட வரவேற்பையும் விருந்து பேணலையும் அழையாமலே ஊடே நுழைந்து அனுபவித்த மனிதரையும் உ.வே.சா. அறிந்துகொண்டார். மன்னரின் சோகத்தை மாற்ற வேண்டிய சூழலில் அந்த மனிதரைக் காட்டிக்கொடுத்துவிடுகிறார். அம்மனிதர் யாரென்பதைக் கட்டுரையின் இறுதியில் வெளிப்படுத்துகிறார். 'அந்த மனிதர் கும்பகோணத்தில் பொடிக்கடை வைத்திருக்கிறார். மகாராஷ்டிரர். அவரை எனக்குத் தெரியும். என்னை அவருக்குத் தெரியாது... இந்தச் சமயத்தில் வேறு வழியில்லை மகாராஜாவினுடைய துக்கத்தை மாற்றுவதற்கு. அவர் வரலாறு உபயோகமாயிற்று. பாவம்! என்னால் அவருடைய வேஷம் வெளிப்பட்டது' என்று ஆர்வநிலையை வளர்த்து இறுதியில் அச்செய்தியை வெளிப்படுத்துகிறார்.

பெரிய காறுபாறு என்று திருவாவடுதுறை மடத்தின் நிர்வாகியை அழைப்பதை உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார். மேனா பல்லக்கு என்பது மன்னர்களும், மடாதிபதிகளும் ஏறும் வாகனம். மனிதர்கள் சுமக்கும் வாகனம். அன்று அவ்வாகனம் இருந்ததை அறியலாம்.

வருணிப்புநடை

திருவிடைமருதூரிலும், மாயூரத்திலும் ஆதீனப் பணியாளர்கள், மன்னருக்கும், அவர் பரிவாரத்திற்கும் ஆற்றிய பணிவிடைகளையும், ஆடம்பர விருந்தையும் நிகழ்ச்சிகளையும் மனக்கண்முன் தோன்றும் வண்ணம் வருணித்துச் சொல்கிறார், உ.வே.சா. ஊடே அழையாத விருந்தாய் நுழைந்து விட்ட மனிதரை வருணிக்கும்போது, 'அக்கனவான் உயர்ந்த சட்டை யொன்றை அணிந்திருந்தார். காதில் வெள்ளைக் கடுக்கன்கள் ஒளிவிட்டன. கையில் மோதிரம் மின்னியது. நல்ல வேலைப்பாடு உடைய பிரம்பொன்றை அவர் கையுள் வைத்திருந்தார். அடிக்கடி மீசையை முறுக்கிக் கொண்டு நின்றார். ஒரு பெரிய செல்வராக யாவரும் நினைக்கும்படி அவருடைய தோற்றம் இருந்தது' என்று வருணித்துள்ளார்.

வடசொற்கள்

ஸல்லாபம், இஷ்டம், பக்ஷணம், விசேஷம் என்பன போன்ற சிறிய அளவில் வடசொற்கள் இடம்பெற்றுள்ளன.

சொல்விளக்கம்

உண்டுகாட்டி என்ற சொல்லுக்கு உ.வே.சா. விளக்கம் அளித்துள்ளார். 'உண்டுகாட்டிகள் என்ற ஒருவகையினர் இருப்பதுண்டு. அவர்கள்

அரசருக்குரிய உணவை அவருக்கு முன்பு உண்டு குற்றமற்றது என்று தெரிவித்த பின்னரே அவ்வுணவு அரசருக்கு அளிக்கப்படும்' என்று உ.வே.சா. எடுத்துரைத்துள்ளார். அவ்வாறே, சவுகண்டி என்பது மடத்தின் பின்புறத்திலுள்ள பெரிய வெளியில் உள்ள இடம் என்று விளக்கம் தருகிறார்.

### உணர்ச்சி நடை

உ.வே.சா. திருவாவடுதுறை ஆதீனத்து மடத்தில் தங்கி இருந்து படித்தவர். பயன்பெற்றவர். செய்ந்நன்றி மறவாமல், அம்மடத்தின் ஆதீனகர்த்தர் அம்பலவாண தேசிகரைப் பாராட்டி மகிழ்கிறார். "அரசருக்கு நிகழ்ந்த உபசாரங்கள் அளவற்றன. உபசாரங்கள் செய்வதில் அம்பலவாண தேசிகரைப் போன்றவர்கள் உலகத்தில் சிலரே இருக்கக்கூடும். அவருடைய கட்டளையின்கீழ் ஓர் அரசருக்கு நடைபெறும் உபசாரத்தைப் பற்றி எழுதுவது எங்ஙனம் இயலும்"! என்று உணர்ச்சி பொங்க எழுதுகிறார்.

### அழைத்த காரணம்

இக்கட்டுரை உ.வே.சா.வின் தன்னனுபவக் கட்டுரையாகும். சைவத் திருமடங்கள் தமிழ்ப்புலவர்களை ஆதரித்து வந்தன. அவரவர் தகுதிகளுக்கு ஏற்பப் பரிசுகள் நல்கின. இசை நிகழ்ச்சிகளும் திருமடங்களில் நிகழ்வதுண்டு. மகா வைத்தியநாதையர் புகழ்பெற்ற இசை வித்தகர். அவர்தம் இசை நிகழ்ச்சி திருவாவடுதுறை மடத்தில் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் ஆதீனகர்த்தாவாக இருந்தபோது நிகழ்ந்தது. அந்நிகழ்ச்சிக்குப் பல வித்துவான்களும், வேறுபல ஊர்களிலிருந்து அறிஞர்களும், செல்வர்களும் வந்திருந்தனர். ஆயிரம்பேராவது கூடியிருப்பர். அக்கூட்டத்தில் இருபத்திரண்டு வயதே ஆகியிருந்த உ.வே.சா.வும் இருந்தார். சுப்பிரமணிய தேசிகரிடம் உ.வே.சா. சில நூல்களைப் பாடம் கேட்டவர். மடத்திலிருந்த சிலருக்குத் தமிழ்ப் பாடம் சொல்லியும் வந்தவர். அவரை இசைநிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, 'சாமிநாதையர்,' என்று கம்பீரமாக அழைத்த சுப்பிரமணிய தேசிகனார், அவர் வந்தவுடன் தம்மருகில் உட்காரச் செய்தார். உ.வே.சா. திடீரென்று கிடைத்த மரியாதையில் திணறிப் போனார். எழவும் முடியாமல், உட்காரவும் முடியாமல் நெளிந்தார். இசைநிகழ்ச்சி முடிந்தவுடன், தேசிகர் அவ்வாறு உட்காரவைத்ததற்குக் காரணத்தை இயம்பினார். "எமக்கு உம்மை நன்றாகத் தெரியும். ஆனால் மடத்தில் ஒவ்வொரு காரியத்திற்கும் தனித்தனியே ஒவ்வொரு அதிகாரி இருக்கிறார். ஒவ்வொருவருக்கும் தனித்தனியே சொல்வதென்பது இயலாத காரியம். என் அருகில் நீர் இருந்ததால் இப்போது அனைவரும் அறிந்து கொண்டனர். இனிமேல் யாதொரு தடையும் இல்லாமல் அவர்களுடைய உதவியை நீர் பெறலாம்" என்று கூறினார். உ.வே.சா. அவர்தம் அன்பில் மனம் நெகிழ்ந்தார். அந்த அனுபவத்தை இக்கட்டுரையில் விளக்கினார்.

### மேற்கோள் காட்டல்

'தாம் இன்புறுவது உலகின்புறக் கண்டு காமுறுவர்,' (ப.128) என்ற திருக்குறளை இக்கட்டுரையில் மேற்கோள் காட்டியுள்ளார்.

### சொல்வழக்கு

அந்நாளில் உயரிய நிலையில் இருப்பவர்கள், இளையோரை 'நீர் இரும், உட்காரும்,' என்று கூறுவது வழக்கம். அச்சொல்லாடலை இக் கட்டுரையில் உ.வே.சா. இயம்பியுள்ளார்.

### உவமை

பண்டார ஸந்நிதானம் அருகில் உட்கார்ந்திருந்தபோது இருந்த மனநிலையை அழகான உவமை மூலம் விளக்குகிறார், உ.வே.சா. "ஒன்றும் தெரியாதவனைத் திடீரென்று சிங்காதனத்தில் தூக்கிவைத்தால், அவன் யாதும் விளங்காமல் விழிப்பது போன்ற நிலையில் நான் இருந்தேன்" (ப.130).

### உரையாடல்

உ.வே.சா. தமக்கும், தேசிகருக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலை இக்கட்டுரையின் இடையில் அமைத்துள்ளார்.

நான் : எனக்கு ஒன்றும் தெரியவில்லை. என்னைக் கூப்பிட்டவுடன் நான் திகைத்துப் போனேன். அவ்விடத்து உத்தரவுக்கு அஞ்சி நான் இருந்தேன்.

தேசிகர் : நீர் இந்தமடத்தில் இருக்கிறீர். உம்மைப் பற்றி நமக்கு நன்றாகத் தெரியும். ...

நான் : அவ்விடத்து அன்பு எனக்குப் பலவகையிலும் தெரிந்திருப்பினும் என்னை அழைத்தது என் நன்மையைக் கருதியே என்பது அப்போது தெரிய வில்லை. இப்பொழுதுதான் தெளிவாகத் தெரிந்தது.

என்று உரையாடலை அமைந்திருப்பது, நாடக அமைப்பைக் கட்டுரைக்குத் தருகிறது.

### பிறசொற்கள்

ஸம்மானம், கனவான், பூரணம், அநுசிதம், காரியஸ்தர் என்பன போன்ற சொற்கள் இக்கட்டுரையில் வருகின்றன..

### ஒரு குமரன்

திருவாவடுதுறை ஆதீனத்தில் வேளூர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரென்னும் பெரியார் தலைவராக இருந்தார். எண்பதாண்டு நிறைந்தவர்.

கல்வி கேள்வி மிக்கவர். 14 ஆம் பட்டத்துக்கு உரியவர். தமிழ் நாட்டில் உள்ள ஜமீன்தார்களும் பெருஞ்செல்வர்களும் வந்து தரிசித்துச் செல்வார்கள்.

சின்னையா முதலியார் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் பணிபுரிந்தவர். செல்வந்தர். தெய்வபக்தி மிக்கவர். ஒருமுறை சின்னையா முதலியார் தம் மனைவியரோடும் மற்றப் பரிவாரங்களோடும் பயணம் மேற்கொண்டார். திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகரைச் சந்திக்க அவ்விடம் வந்தார். மடத்தில் தங்கினார்; தரிசிக்க நேரம் கேட்டார்; ஸந்நிதானம் மட்டும் இருக்க வேண்டும். தான் தம் மனைவியரோடு தரிசிக்கச் செல்லும்போது பிற ஆடவர் எவரும் இருக்கக்கூடாது என்றும் நிபந்தனை இட்டார். சுப்பிரமணிய தேசிகர், 'அப்படியே செய்யலாம். ஆனாலும் நம்மோடு ஒரு குமரன் மாத்திரம் இருப்பான்' என்று சொல்லி அனுப்பினார். முதலியார் மனம் ஒப்பவில்லை. ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டு காணிக்கைப் பொருள்களோடும், மனைவியரோடும், தேசிகரை மாலையில் சென்று பார்த்தார். அங்கே தேசிகரைத் தவிர வேறு எவரும் இல்லை. தரிசித்துவிட்டு விடைபெற்றபோது, தேசிகர் குமரன் என்பவரை அழைத்தார். அங்கிருந்த ஓர் அறையிலிருந்து ஓர் உருவம் வெளிப்பட்டது. அவன் ஒரு தள்ளாத கிழவன். வரும்போது, 'அடியேன், அடியேன்' என்று சொல்லிக்கொண்டே வந்தான். அவன் தாம்பூலப் பையைக் கொண்டுவந்து கொடுத்தான். தேசிகர் முதலியாருக்கு விபூதிப் பையும், மனைவிமார்களுக்குத் தாம்பூலம், மஞ்சள், குங்குமம் முதலியவையும் வழங்கினார். குமரன் என்பது அந்தக் கிழவரின் பெயர் என்பதை அறிந்து முதலியார் ஐயந் தெளிந்து மகிழ்ந்தார்.

இக்கட்டுரையில் அந்நாளில் செல்வந்தர்கள் பல மனைவியரைத் திருமணம் செய்வது வழக்கில் இருந்தது. அவர்கள் பிற ஆடவரைப் பார்ப்பதும், தடைசெய்யப் பெற்றிருந்தது என்பதை உ.வே.சா. உணர்த்தியுள்ளார்.

இக்கட்டுரையில் உ.வே.சா. ஆர்வநிலை உத்தியைக் கையாண்டுள்ளார். சின்னையா முதலியாருக்குக் கடைசியில்தான் குமரன் என்பது அங்குள்ள கிழவரின் பெயர் என்பது தெரிந்தது. அதுவரை அவர் மனம் குழம்பிய நிலையிலேயே இருந்தார். தேசிகரின் விளையாட்டுணர்வும், ஆர்வத்தை அதிகப்படுத்தி ஆசி நல்கும் குணமும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளன. வேலைக்காரரை வயது முதுமை கருதி மரியாதையாக அழைக்காமல், 'அவன், இவன், அடே,' என்று அழைப்பதை உ.வே.சா.வின் இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

### சொல்விளக்கம்

ஒடுக்கம் என்ற சொல்லுக்கு உ.வே.சா. விளக்கம் தருகிறார். 'ஒடுக்கமென்பது மடாலயத்துத் தலைவர்கள் தனியே இருக்கும் இடம்.' (ப.200)

### வருணிப்பு நடை

இக்கட்டுரையில் மிகுதியும் வருணிப்பு நடையே இடம்பெற்றுள்ளது. "வந்தவன் ஒரு தள்ளாத கிழவன். தொண்ணூறு பிராயத்துக்கு மேற்பட்டவன். அவன் உள்ளிருந்து கையிலே எதையோ எடுத்து வந்தான். தள்ளாடித் தள்ளாடிச் சுவரைப்பிடித்துக்கொண்டு அவன் வருவதற்கு நெடுநேரமாயிற்று. தான் வருவதைப் புலப்படுத்தவே, 'அடியேன் அடியேன்' என்று அவன் கூறினான்'' (ப.203) என்றெல்லாம் சின்னச்சின்ன செய்திகளைக் கூடப், பெரிதுபெரிதாக வருணித்துச் சுவைபட எழுதியுள்ளார் உ.வே.சா.

### பிறமொழிச் சொற்கள்

தேசாந்திரி, பூஜைகாலம், ஸ்திரீ, ஸ்ரீ, ஸம்பிரதாயம், ஸல்லாபம், பிராயம் என்பன போன்ற வடச்சொற்களை இக்கட்டுரையில் கையாண்டுள்ளார்.

## ஏடு தேடிய அனுபவம்

மக்களின் அறியாமையால் பண்டைய தமிழிலக்கிய ஏடுகளில் பல தீக்கிரையாகின. நீர்வழிச் சென்றன. ஆகமப் பெயரால் அழிக்கப்பட்டன. கறையான் வாய்ப்பட்டன. பயன்படுத்தாமல் பாழ்பட்டுக் கிடந்த ஏட்டுச் சுவடிகளை எல்லாம் முயன்று பெற்று அவற்றைத் திருத்தி ஒழுங்குபடுத்திச் சிரமப்பட்டுப் பதிப்பித்த பெருமை உ.வே.சா.வுக்கு உண்டு. எங்காவது ஏடுகள் இருப்பது தெரிந்தால், அங்குச் சென்று ஏடுகளைத் திரட்டி வருவதில் ஆர்வம் காட்டுபவர் உ.வே.சா. ஏடு தேடி அலைந்த அனுபவத்தை உ.வே.சா. 'திருமலைராயன் பட்டினத்தில் ஏடு தேடியது' 'இன்னும் அறியேன்' என்ற இரு கட்டுரைகளில் இயம்பியுள்ளார்.

### திருமலைராயன் பட்டினத்தில் ஏடு தேடியது

களப்பணி மேற்கொண்டு ஏடு தேடும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். 'எங்கேயாவது ஏடு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தால், பட்டினியாக ஒருவாரம் கிட என்றாலும் கிடப்பேன்' என்பார் உ.வே.சா. 'போகுமிடங்களில் உண்டாகும் அசௌகரியங்களையும் அவமதிப்பையும் கருத்திற்கொள்வதில்லை. என்னுடைய சௌகரியத்தையும் பெருமையையும் பாராட்டிக் கொண்டிருப்பின் எவ்வளவோ அரிய நூல்களைப்

பெறாமல் இழந்திருப்பேன். தமிழ்த்தாயின் பெருமையை நிலைநிறுத்தும் நூற்செல்வங்களைப் பார்த்திருக்க முடியாது' (ப.169) என்று ஏடு தேடுவதில் கிடைக்கும் தொல்லையைத் தமிழுக்கு ஏற்றம் தருவதில் மறந்தார்.

ஒரு சமயம், பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயரென்பார் உடன் வர, நாகபட்டினம் அருகில் உள்ள திருமலைராயன் பட்டினம் சென்றார். காளமேகம் வசைக்கவி பாட, அந்நகரம் மண்மாரியால் அழிந்ததென்று சொல்வார்கள். அழிந்த பட்டினத்தருகில் புதிய பட்டினம் உருவானது. அங்குச் சென்று உ.வே.சா. பள்ளிக்கூட ஆசிரியர் இராமசாமி பிள்ளையைப் பார்த்தார். அவர் இருக்கும் பள்ளிக்கூடம் மிகப் பழைய கோலத்தோடு விளங்கியது. ஆசிரியரோ, சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு பிள்ளைகளை அதட்டிக்கொண்டு இருந்தார். உ.வே.சா. தான் இன்னாரென்று அவரிடம் காட்டிக்கொள்ளவில்லை. அவர் உ.வே.சா.வின் நோக்கமோ, அருமையோ அறியாது அவரை அலட்சியப்படுத்தினார். 'இரண்டு மணிக்கு மேல் வாருங்கள் பார்த்துக்கொள்ளலாம்' என்று சொன்னார். பின்னர், குமாரசாமி முதலியாரைப் பார்த்தார். அவரிடம் தன்னை இன்னாரென்று அறிவித்துக் கொண்டார். அவர் வீட்டில் ஏடுகள் எதுவும் அகப்படவில்லை. பின்னர் இராமசாமி பிள்ளையை இரண்டு மணிக்கு அவர் கூறியபடி சென்று சந்தித்தார். அவர், இவரிடம் ஆணவத்தோடு மகாவித்வான் மாணவர் சவேரிநாத பிள்ளையிடம் பாடம் கேட்டதாகச் சொல்லிக்கொண்டார். உ.வே.சா. எதுவும் பேசவில்லை. போகும் வழியில் உ.வே.சா.வைப் பின் தொடர்ந்து வந்து பலர் கூடிவிட்டனர். இராமசாமி பிள்ளை மெல்ல உ.வே.சா. யாரென்று அறிந்து கொண்டார். தவறு செய்த குற்றவுணர்வு அவரிடம் தோன்றியது. அவர் உதவியோடு ஒருநாள் முழுதும் தேடியும் ஏடுகள் எதுவும் கிடைக்கவில்லை. மறுநாள் ஊருக்குப் புறப்பட்டபோது, இராமசாமி பிள்ளை, 'தம்மைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்' என்று மன்றாடினார்.

இந்நிகழ்ச்சி நடந்து பல ஆண்டுகளுக்குப் பின்னர்த் திருப்பனந்தாள் காசிமடத்தில் நடைபெற்ற ஸ்ரீஆதிகுமரகுருபர சுவாமிகள் தின விசேஷத்துக்குச் சென்றபோது இராமசாமி பிள்ளையைச் சந்தித்தார். அடையாளம் தெரியாதபடி தளர்ந்திருந்தார். 'நீங்கள் எந்த ஊர்?' என்று விசாரித்தார் உ.வே.சா. 'திருமலைராயன் பட்டினம்' என்றார் அவர் 'இராசாமி பிள்ளை என்பவர் சௌக்கியமாக இருக்கிறாரா?' என்று கேட்டார் 'நான் தான்' என்று சொல்லிச் சிரித்தார்.

உ.வே.சா. ஏடு தேடி அலைந்த அலைச்சல் பற்றியும், சந்தித்த பலதரப்பட்ட மனிதர்களின் குணம் குறித்தும் இக்கட்டுரையில் எழுதியுள்ளார். உ.வே.சா.வின் தன்னடக்கத்தையும், தமிழார்வத்தையும் ஆய்வுத் தேடலையும் இக்கட்டுரை இயம்புகிறது.

அந்நாளைய கிராமத்துப் பள்ளிக்கூடத்தின் பரிதாபமான தோற்றத்தையும், போதிய ஆசிரியர்கள் இல்லாத அவலத்தையும் இக்கட்டுரையில் உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார். "அந்தப் பள்ளிக்கூடம் மிகவும் பழைய கோலத்தோடு விளங்கியது. மேலே கீற்று வேயப்பட்டிருந்தது. தளவரிசை, குறடுகளெல்லாம் செங்கல் பெயர்ந்தும் குழிந்தும் இருந்தன. அங்கே கீழே மணல் பரப்பப்பட்டிருந்தது. பிள்ளைகள் மிக்க பயபக்தியோடு தரையில் உட்கார்ந்திருந்தார்கள்" (ப.172) என்று வருணிக்கிறார், உ.வே.சா. பள்ளிக்கூட ஆசிரியர்கள் பொருளாதார வசதியின்றி இருந்திருக்கிறார்கள். கிராமங்களில் இந்நாள் போல் உணவு விடுதிகள் எதுவும் இல்லை. உ.வே.சா. கோயில் பிரசாதத்தை வாங்கி உண்டு பசிதீர்ந்தார்.

### சொல்லாடல்

"ஒரு சிங்காதனத்தில் வீற்றிருக்கும் அரசனுடைய அதிகாரத் தொனி அவருடைய அதட்டலில் இருந்தது" என்று ஆசிரியரின் வீற்றிருக்கும் கோலத்தை உ.வே.சா. வருணிக்கிறார். "எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? யாரறிவார்?" என்ற பழமொழியைக் கையாண்டுள்ளார்.

### உரையாடல் போக்கு

கட்டுரையின் இடைஇடையே உரையாடல்கள் அமைந்து கட்டுரைக்கு நாடகத் தன்மையை நல்குகின்றன. அவரை, 'உங்களிடம் ஏதேனும் ஏடு இருக்கிறதா?' என்று கேட்டேன். 'என்னிடம் ஒன்றும் இல்லை. எனக்கு வேண்டும்போது யாரிடமாவது வாங்கிப் படித்துத் திருப்பிக் கொடுத்துவிடுவது வழக்கம்' என்றார் அவர் (ப. 178).

### பிறமொழிச் சொற்கள்

அபசாரம், ஜட்கா, சந்தோஷம், பிரசாதம், கிரகசாரம், உபாத்தியாயர், அசௌகரியம் என்பன போன்ற வடசொற்களை இதில் உ.வே.சா. பயன்படுத்தியுள்ளார்.

## இன்னும் அறியேன்

ஏட்டுச்சுவடிகளைத் தேடி அலைந்த சமயங்களில் பலரும் உ.வே.சா.வுக்கு உதவிபுரிந்துள்ளனர். பெயர் தெரியாத ஓர் அன்பர் செய்த உதவியை 'இன்னும் அறியேன்' என்ற கட்டுரையில் எடுத்துரைத்துள்ளார்.

அச்சிட்ட புத்தகமோ, அச்சிடாததோ எதுவானாலும் சுவடியின் உருவத்திலே காணும்பொழுது, ஏதோ தெய்வத்தின் உருவத்தைக் காண்பதுபோலவே எண்ணுவது உ.வே.சா.வின் வழக்கம். ஏட்டுச் சுவடிகளைத் தேடித் திரிவதில் ஒரு தனி இன்பம் உ.வே.சா. அடைந்தார்.

ஏடுதேடிச் செல்வது உ.வே.சா. வுக்குத் தீர்த்த யாத்திரையாகவும், தல யாத்திரையாகவும் அமைந்தன.

கல்லூரியில் பணியாற்றியபோது, மாணாக்கர்கள் ஏடு தேடும் பணியில், உ.வே.சா. வுக்கு உதவினர். கல்லூரியில் ஒருநாள் ஒரு மாணவர் எழுந்து, 'நான் சாப்பிடும் விடுதியில் ஒருவர் வந்திருக்கிறார். அவர் பல தலைமுறைகளாகத் தம்முடைய வீட்டில் உள்ள ஏட்டுச் சுவடிகளை எல்லாம் கொண்டு வந்திருக்கிறார். தங்களிடம் கொடுக்கவே அவற்றைக் கொண்டு வந்திருக்கிறார்' என்று கூறினார். கல்லூரியை விட்டு மாலை நேரம் உ.வே.சா. தம் இல்லத்தில் இருந்த போது, மாணவர் ஏட்டுச் சுவடிகளை அள்ளிக் கொணர்ந்து உ.வே.சா. முன் கொட்டினார். உ.வே.சா. சுவடி கொடுத்த மனிதரைப் பார்க்கத் தேடிப் போனார். அவரைக் காண இயலவில்லை. கிடைத்த சுவடிகளை ஆராய்ந்து பார்த்தபோது 'தமிழ்விடு தூது' என்னும் சிற்றிலக்கியம்தான் அச்சுவடிகள் என்பதை அறிந்தார். பெயர் தெரியாமல், சுவடிகளை உதவிய பெருந்தகையாளரை மீண்டும் எண்ணி வாழ்த்தினார்.

இக்கட்டுரைக்கு, 'இன்னும் அறியேன்,' என்ற தலைப்பிட்டு உள்ளார். கட்டுரையின் இறுதியில், 'அவர் யாரோ? இன்னும் அறியேன்' என்று பொருத்தமாக முடித்துள்ளார்.

உவமை

"சுவடியின் உருவத்திலே காணும்போது, ஏதோ தெய்வத்தின் உருவத்தைக் காண்பதுபோலவே நான் எண்ணுவது வழக்கம்' என்று உவமிக்கிறார்.

"தங்கப் புதையலுக்கு வழி சொல்லும் மந்திரவாதியைப்போல அம்மாணாக்கர் சொல்லச் சொல்ல என் மனம் ஊக்கமிகுதியால் நிலைகொள்ளாமல் தவித்தது" என்று தன் மன நிலையைப் பொருத்தமான உவமை மூலம் விளக்கியுள்ளார்.

"குழந்தையைப் பெறும்பொழுது படுந்துன்பமெல்லாம் அக்குழந்தையைக் கண்ட காலத்திலே மறைந்து விட, தாய் பெரிய இன்பத்தை அடைகின்றாள். அதுபோலவே சுவடிகளுக்காகப்படும் சிரமங்களெல்லாம் அவற்றைப் பெற்றவுடன் மாறிவிடுகின்றன, என் உள்ளம் பெரு மகிழ்ச்சி அடைகின்றது" என்று உ.வே.சா. ஏடு கிடைத்தபோது உள்ளம் கொண்ட உவகையை ஏற்ற உவமையால் எடுத்து மொழிகிறார்.

இருந்தமிழே உன்னால் இருந்தேன், இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்

என்ற தமிழ்விடு தூது வரிகளை மேற்கோள் காட்டியுள்ளார், உ.வே.சா. "இந்தக் கண்ணியிலே என் உள்ளம் சிக்கிக் கொண்டது. அப்பொழுது பெயர் தெரிவியாமல் அதனையும் மற்ற சுவடிகளையும் உதவிய பெருந்தகை யாளரை மீண்டும் நினைந்து நினைந்து பாராட்டி வாழ்த்தினேன்,' என்று நெகிழ்ந்து உணர்ச்சியோடு எழுதியுள்ளார். 'வலக்கை செய்யும் உபகாரம் இடக்கைக்குத் தெரியாமல் செய்க,' என்ற வரியையும் மேற்கோள் காட்டியுள்ளார்.

பிறமொழிச் சொற்கள்

அபவாதம், சமாசாரம், உபகாரி, ஸ்தம்பித்து, மகோபகாரம் என்பன போன்ற பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

## இசைக்கலை குறித்த கட்டுரை

இசைக்கலையில் பெரிதும் ஆர்வம் காட்டியவர் உ.வே.சா. இசைக்கலையைக் குறித்த அரிய செய்திகளை எல்லாம் தொகுத்து, 'பண்டைத் தமிழரின் இசையும் இசைக்கருவிகளும்,' என்ற கட்டுரையை எழுதியுள்ளார்.

1. இசையின் பெருமையை உணர்ந்தே, முத்தமிழுள், இசைத் தமிழை நடுநாயகமாக அமைத்துள்ளனர், ஆன்றோர். இசை எல்லா உயிருக்கும் இன்பம் நல்கும். வண்டுகள் இசைபாட அரும்புகள் மலரும். பாம்பு இசைக்கு அடங்கும். யானை வீணையின் இசைக்கு அடங்கிவிடும். தினைப்புனம் காக்கும்போது இளம்பெண் குறிஞ்சில் பண் இசைத்திருப்பாள். அங்கே வந்த யானை, மயங்கிக் கதிரை உண்ணாமல், நிற்கும். இச்செய்தி அகநானூற்றில் இடம்பெற்றுள்ளது. பெருங்கதையில் உதயணன் நளகிரி என்ற மதம் பிடித்த யானையை வீணை வாசித்து அடக்கி அதன்மேல் ஏறி ஆயுதங்களை எடுத்துத் தர அதனையே ஏவி ஊர்ந்தான் என்று ஒரு செய்தி காணப்படுகிறது.

பசுக்கள் இசையில் வயப்படுகின்றன என்பதைக் கண்ணன் கதை விளக்கும். ஆனாய நாயனாருடைய புராணத்தும் இத்தகைய செய்திகள் காணப்படுகின்றன. அசுணமா என்ற பறவை, இன்னா இசையைக் கேட்டபின் மூர்ச்சையுற்று விழுந்துவிடும். தெம்மாங்கு, தாலாட்டு போன்ற இசைக் கலைக்கு விலங்குகளும் குழந்தைகளும் மயங்கும்.

வன்மனக் கள்வரும் தம் கொடுஞ்செயலை மறந்து இசை வயத்தர் ஆவார். சீவகசிந்தாமணி காப்பியத் தலைவன் சீவகன் இசைபாடி, சுரமஞ்சரி என்ற பெண்ணைத் தன் வசப்படுத்தினான்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் சிறப்புப் பாயிரம் கேட்டு வந்த கோபாலகிருஷ்ண பாரதியார் மகாவித்துவான் வீட்டில் காத்திருந்தபோது, நந்தனார் சரித்திரக் கீர்த்தனைப் பாடல்களைப் பாடினார். பிள்ளையவர்கள் பாட்டைக்கேட்டு மனம் உருகி, சிறப்புப் பாயிரம் நல்கினார்.

பரமசிவனே இசையின் வடிவமாய் இருப்பவன். இசையைக் கேட்டு ஆனந்திக்கும் பொருட்டுக் கம்பளர், அசுவதரர் என்ற இசையில் வல்ல இரண்டு கந்தருவர்களைச் சிவபெருமான் காதிற் குழையாக வைத்தருளினான். வீணா தக்ஷிணாமூர்த்தி என்று இறைவன் அறியப்பட்டவர். நாயன்மார்களுள் சிலர் இசையால் வழிபட்டுப் பேறு பெற்றவர்கள். பாணபத்திரர் இசையில் வல்லவர். தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளும், திவ்யப்பிரபந்தமும், திருப்புகழும், தத்துவராயர் பாட்டும் இசைப்பாட்டுக்களால் ஆன நூல்களே.

தமிழர் இசை

இசைத்தமிழ்ச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சங்கப் புலவர்கள் பலர் இசை அறிந்தவர்கள். புதுக்கோட்டைத் தசவாத்தியம் கிருஷ்ணையர், பத்து வாத்தியங்களை வாசிப்பதில் வல்லவர்.

'பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இசை நுணுக்கம், பஞ்சமரபு, தாளசமுத்திரம், சச்சபுட வெண்பா, இந்திரகாளியம், பதினாறு படலம், தாளவகையோத்து, இசைத்தமிழ்ச் செய்யும்முறை, கோவை முதலிய இசை இலக்கண நூல்கள் அந்நாளில் இருந்தன. பிற்காலத்தில் எழுந்த சுத்தானந்த பிரகாசம் நூலும் இசை இலக்கணத்தை இயம்பியதாகும். பழைய இசைத் தமிழிலக்கியங்கள் சிலப்பதிகாரம், பரிபாடல் முதலியனவாகும்.

குறவஞ்சி, பள்ளு, சிந்து முதலிய பிற்காலப் பிரபந்தங்களும் இசையைச் சேர்ந்தனவே.

இசைவகை

இசையில் பண்கள் என்றும், நிறங்கள் என்றும் இருவகை உண்டு. பண்கள் ஏழு நரம்புகள் கொண்டன. நரம்பு என்பது இங்கே ஸ்வரம். பண்களிலிருந்து நிறங்கள் பிறக்கும். அவை இக்காலத்தில் ஜன்யராகங்கள் என்றழைக்கப்படும். இப்படிப் பிறக்கும் பண்ணும் திறமுமாம் இசைவகைகள் ஒரு வழியில் தொகுக்கப்பட்டு 11,999 என்று கூறப்படுகின்றன.

இரவுப் பண், பகல் பண் என்று இருவகையாக அமையும். இரங்கற் பண் விளரி. இராவணன் விளரிப் பண் பாடினான். பண்ணமைந்த இசைப்பாட்டுகள் உருக்கள், வரிகள் என்று கூறப்படும். அவ்வுருக்கள் பத்துவகை என்பர்.

### இசைக்கருவிகள்

இசைக்கருவிகள் கீதாங்கம், நிருத்தாங்கம், உபயாங்கம் என மூவகைப்படும். இயற்கை மூலமாக அறிந்து அமைத்தது பற்றிக் குழலே முதல் இசைக் கருவியாயிற்று. குழலில் பலவகை உண்டு. யாழ் வகைகளும் பல உண்டு. தண்ணுமை வகைகளும் பல. பாணர் என்பார் இசை வல்லார்.

இசைத்தமிழ் குறித்து விளக்கம் கொடுத்து, தமிழர்களின் இசையறிவு பற்றி எடுத்துரைத்து, இசைவகைகளைப் பற்றிக் கூறி, இசைக்கருவிகள் குறித்துச் செய்திகளைத் தொகுத்து முழுமையான தகவல்களைத் தந்துள்ளார், உ.வே.சா. இக்கட்டுரை 1929ஆம் ஆண்டு, சென்னை ஒய்.எம்.ஸி.ஏ. மண்டபத்தில் கோடைக்கால இந்தியச் சங்கீதப் பள்ளிக்கூடத்தின் ஆதரவில் நிகழ்த்திய சொற்பொழிவாகும்.

### சொல்விளக்கம்

இவ்வுரையில் உ.வே.சா. பல்வேறு சொற்களுக்கு விளக்கமும் பொருளும் தந்துள்ளார். "ஏழு ஸ்வரமும் கொண்டவை ஸம்பூரண ராகம். அதுவே பண்ணாம். வடமொழியில் மேளகர்த்தா என்று கூறப்படுவதும் அதுவே. ஏழு ஸ்வரங்கள், வடமொழியில் ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்று கூறப்படும். அவற்றையே தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என வழங்குவர்" என்று ஏழு ஸ்வரங்கள் குறித்து விளக்குகிறார்.

"உருக்கள் பத்துவகைப்படும். அவை செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, வரிமுரண், தலையோடு மண்புலம் என்பவையாகும்" என்று உருக்களின் பத்து வகைகளையும் விவரித்துள்ளார்.

புல்லாங்குழல் என்ற பெயர் வந்ததற்கான காரணத்தை உ.வே.சா. ஆராய்ந்து கூறியுள்ளார்.

"புறக்காழெல்லாம் புல்லெனப் படுமே"

என்ற சூத்திரத்தின்படி, புறத்தே வயிரமுடைய மூங்கில் முதலியன புல்லெனப்படும். எனவே மூங்கிலால் செய்யப்பட்டமை காரணமாகப் புல்லாங்குழல் என்னும் பெயர் ஏற்பட்டது என்பதே பொருத்தமாகும். வங்கியம் என்றும் குழலுக்கு ஒரு பெயர் சொல்லப்படும். அது வம்சம் என்பதன் திரிபு. வம்சமென்பது மூங்கிலைக் குறிக்கும் வடமொழியில் பெயர் (ப.120) என்று காரணகாரியத்தோடு பொருள் கூறியுள்ளார்.

குழலில் பலவகை உண்டு. கொன்றையங்குழல், ஆம்பலந்தீங்குழல், முல்லையங்குழல் முதலியன பல இலக்கியங்களில் சொல்லப்படுகின்றன.

“பேரியாழ் இருபத்தொரு நரம்புகளை உடையது. பத்தொன்பது நரம்புகளை உடையது மகரயாழ். பதினான்கு நரம்புகளை உடையது சகோட யாழ்” என்று விளக்கம் தருகிறார் உ.வே.சா.

“தண்ணுமை வகைகளும் பல. பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரபுகை, தமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முடிவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசானம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை முதலிய தோற்கருவிகளின் பெயர்கள் நூல்களில் காணப்படுகின்றன. வேறு பல கருவிகளும் ஆங்காங்கே கூறப்படுகின்றன. அவை ஆகுளி, பாண்டில், கோடு, நெடுவங்கியம், குறுந்தூம்பு, தட்டைப்பறை, பதலை முதலிய பல” என்று பலவகை இசைக் கருவிகளை உ.வே.சா. அடுக்கிச் சொல்லும்போது அவர்தம் இசையறிவு வியப்பில் ஆழ்த்துகிறது.

**மேற்கோள் விளக்கம்**

கலித்தொகை, பெருங்கதை, மேருமந்திர புராணம், அகநானூறு பெரியபுராணம், கம்பராமாயணம், தேவாரம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலிருந்து மேற்கோள் காட்டிக் கருத்தினை நிறுவியுள்ள உ.வே.சா. வின் பன்னூல் அறிவு பாராட்டுக்குரியது.

## தமிழ்மொழிச் சிறப்பு

பாரதீய சாகித்ய பரிஷத்தின் முதலாவது மகா நாட்டு வரவேற்பில் ஆற்றிய சொற்பொழிவு, ‘இந்திய இலக்கியக் கழகம்,’ என்ற கட்டுரையாக வெளிவந்தது. இதில் வரவேற்புரை நல்கிய பின்னர், தமிழ்மொழியின் அருமை பெருமைகளை மிகவிரிவாக விளக்கியுள்ளார்.

“திராவிட பாஷைகளுள் பழமையான தமிழில் பல வருஷங்களாக ஈடுபட்டுக் கறையானோடும், ராமபாணப் பூச்சிகளோடும் போராடி ஏட்டுச் சுவடிகளின் புழுதியால் மங்கிய கண்களோடு முதுமைப் பருவமும் துன்புறுத்த உங்கள்முன் வந்து நிற்கும் என்பால் உள்ள குறைபாடுகள் பல. எனக்குத் தமிழையன்றி வேறு பாஷைகளில் பயிற்சி இல்லை,” என்று தன்னடக்கத்தோடு தொடங்கி அளவுகடந்த செய்திகளைக் கூறுகிறார்.

அந்நாளில் புலவர்களிடத்தில் ஒற்றுமை நிலவியது. தொல்காப்பியத்தில் தலைவன் படிப்பதற்காக வேற்று நாட்டிற்குப் போவதைப் பற்றிய விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்திருந்த வியாபாரி ஒருவன் நாக சாதியினர் வாழும் தீவில் சிக்கிக் கொண்டான். நாகர் மொழியில் பேசி, அவர்கள், அன்பைப் பெற்று மீண்டான்.

இச்செய்தி மணிமேகலையில் கூறப்பட்டுள்ளது. கலைஞர்கள் கூர்சரம், வங்கம், நேபாளம், இலங்கை முதலிய இடங்களுக்குச் சென்று தங்கள் கலைத்திறனைப் புலப்படுத்தினார்கள்.

முற்காலத்தில் பதினெட்டு மொழிகளும் அறிந்தவர்கள் தமிழகத்தில் இருந்தனர். குறிஞ்சிப்பாட்டு ஆரிய அரசனுக்குத் தமிழ் அறிவிப்பதற்காக எழுதப்பட்ட பாட்டு. தமிழர்களுடைய நியாய சபையில் வடதேசத்து அறிஞர்கள் இருந்தனர்.

கம்பர், தெலுங்கு நாட்டிற்குச் சென்று தம்முடைய தமிழறிவை வெளிப்படுத்திப் பிரதாபருத்திரன் என்ற அரசனால் சன்மானம் பெற்றார். அருணகிரிநாதர் வடநாட்டினரால் போற்றப்பட்டவர்.

தமிழ் தொன்மைச் சிறப்பு மிக்கது. சங்க நூல்கள் என்று சொல்லப்படும் நூல்கள் 2000 வருஷங்களுக்குமுன் இயற்றப்பட்டவை. பண்டைத் தமிழ் நூல்களில் இயற்கை அழகின் வருணனை அதிகம். சங்க இலக்கியத்தில் தன்மைநவிற்சி அணியே இருக்கிறது. ஏழை இடையன் வீட்டில் பந்தற்காலில் கட்டியிருக்கும் தழையை ஆட்டுக்குட்டி உண்பதும், தெருக்களில் முத்துக்களைக் கிளிஞ்சலுக்குள் இட்டுக் குரங்குகள் குழந்தைகளோடு கிலுகிலுப்பை விளையாடுவதும் ஆன காட்சிகளைச் சங்க இலக்கியத்தில் காணலாம்.

சங்க இலக்கியத்தில் காதல், வீரம், கருணை, சோகம் முதலிய ரஸபாவங்கள் அங்கங்கே அமைந்து விளங்குகின்றன. தமிழர் நிலங்களைப் பகுத்த பகுப்பும், காவிய கதியை வரையறுக்கும் இலக்கணங்களும் மற்ற பாஷைகளுக்குப் புதியவை. தமிழ்நாட்டார் நிலத்தை ஐந்து பகுதிகளாகப் பிரித்தார்கள். தமிழர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர்.

அரசியல் சிறப்பு

நாட்டை ஆளும் முறை, நகரத்தின் அமைப்பு, பாதுகாப்பு ஒழுக்கங்கள், தெய்வவழிபாடு முதலியவற்றைப் பற்றித் தமிழ் நூல்களில் உள்ள செய்திகளைப் பார்த்தால் தமிழர் நாகரிக வாழ்வின் நிலை நினைக்குந்தோறும் வியப்பை உண்டாக்குகிறது.

நாளடைவில் மனிதர்களுடைய வாழ்க்கை நிலை மாறுபடுகின்றது. அதற்கேற்பக் கொள்கைகளும் மாறுபடுகின்றன. அக்கொள்கைகளுக்கு ஏற்றபடி இலக்கியங்களும் "நல்வழியில் மாற வேண்டியது இயல்பே", என்றெல்லாம் பண்டைத் தமிழின் சிறப்பைத் தம் சொற்பொழிவில் கூறியுள்ளார்.

### உவமைகள்

சொற்பொழிவில் பொருத்தமான உவமைகளை எடுத்தாண்டுள்ளார், உ.வே.சா. "இந்த ஸாஹித்ய பரிஷத் அறிவொளியைத் தரும் மலைமேல் விளக்காகத் திகழ்கிறது" (ப.134) என்கிறார். 'பெருங்கடலைப்போலப் பரந்திருந்த அக்கலைகளில் சில துளிகளே இப்பொழுது கிடைக்கின்றன' (ப.143) என்று கலைகளுக்குக் கடலை உவமிக்கிறார். 'உங்களுடைய தேச பாஷைகளாகிய ஆறுகள், ஞானமாகிய சாகரத்தில் ஒன்று சேர்ந்து விளங்குகின்றன' என்று உவமைகளைப் பொருத்திக்காட்டி இணைத்துள்ளார்.

### மேற்கோள் விளக்கம்

தம் பேச்சில் கருத்துக்கு வளம் சேர்க்க முன்னோர் நூல்களிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார். சங்க இலக்கியம், திருக்குறள் ஆகியவற்றிலிருந்து பல பாக்களை மேற்கோள் காட்டியுள்ளார்.

> ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
> மாற்றுவார் ஆற்றலின் பின்

என்ற குறளுக்கு விளக்கம் தந்துள்ளார். இவ்வாறே பல திருக்குறள்களையும், அவற்றுக்கு விளக்கங்களும் தந்துள்ளார்.

### சொற்பொருள் விளக்கம்

"சிலர் கருதுவது போல, ஆரியர் என்பது ஒரு சாதியினரையோ, ஒரு குலத்தினரையோ குறிப்பதாகத் தோன்றவில்லை. வடநாட்டினரைத் தமிழர் ஆரியர் என்று குறித்து வந்ததாகத் தெரிகிறது. வடநாட்டுக் கூத்தை ஆரியக் கூத்து என்றும் வடநாட்டு அரசர்களை ஆரிய அரசர்கள் என்றும், வடநாட்டுப் படையை ஆரியப்படை என்றும் கூறும் தமிழ் நூல் வழக்கங்களால் இது விளங்கும்" (ப.139) என்று ஆரியர் என்ற சொல்லுக்குப் பொருள் விளக்கம் தருகிறார்.

### உணர்ச்சி நடை

"தமிழர் எத்தகைய உயர்ந்த லக்ஷ்யங்களை உடையவர்கள்; அவர்கள் இயற்கையை எவ்வளவு நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்; எத்தனை மலர்கள் எத்தனை மரங்கள்" (ப.139) என்று உணர்ச்சி மீதூர எழுதியுள்ளார் உ.வே.சா.

"சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் முதலிய காவிய ரத்னங்களை இந்தியர் யாவரும் ஆராய்ந்து ஆனந்தமடையும் நாள் வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்" (ப.140) என்று ஆற்றாமை கொள்கிறார்.

பிறசொற்கள்

பாஷை, பாரதவர்ஷம், சமரஸபாவம், ஸ்வபாவோக்தி ஆகிய தன்மை நவிற்சியணி, அதிசயோக்கி, ஸஸ்திரம், ஸ்வபாவ விரோதம், பாஷாபிமானம் என்பன போன்ற மிகுதியான வடசொற்களைத் தமிழின் சிறப்புப் பற்றிக் கூறும் பேச்சில் அமைந்திருப்பது முரணாக உள்ளது.

## பெண்ணின் கடமை

உ.வே.சா. வாழ்ந்த காலத்தில் பெண்கள் அடிமைப்பட்டுச் சார்பு நிலையில் வாழ்ந்தனர். பெண்கல்வி அருகியிருந்த காலமது. இளமை மணம் பெருகியிருந்த காலம். வாக்குரிமை, சொத்துரிமை எதுவும் இல்லாத காலமது. குடும்பம் என்ற கட்டமைப்பில் இருந்துகொண்டு, தன் அடையாளம் மறந்து கற்பு, பொறுமை, தியாகம் என்பனவற்றைப் பேணிப் போராடி வாழ்ந்த காலமது. உ.வே.சா. பெண்ணை மதித்தவர். ஆனால், பெண்ணுரிமை பற்றி எதுவும் கருத்துகள் கூறியதில்லை. ஆண்கள் பல மனைவியரைத் திருமணம் செய்துகொண்டதை எந்த விதத்திலும் மறுத்துரைக்கவில்லை. சின்னையா முதலியார் என்ற செல்வந்தர் தம் மனைவியரோடு திருவாவடுதுறை ஆதீனத்துக்கு வந்தபோது உ.வே.சா. அதை ஒரு சமூக நிகழ்வாக ஏற்றுக் கொண்டு இயல்பாக இருந்ததைக் குமரன் கட்டுரை மூலம் அறியலாம். தம் மனைவி மதுராம்பாள் குறித்து, என் சரித்திரத்தில் ஓரிடத்தில் மட்டுமே குறிப்பிட்டுள்ளார். அவர்தம் மனைவியாரின் செயல்பாடுகள் குறித்து எங்கும் எதுவும் அவர் பேசியதில்லை. வித்துவான் தியாகராச செட்டியார் வரலாற்றில் செட்டியாரின் மனைவி குறித்துக் கூறியுள்ளார். ஆனால், தம் மனைவி குறித்து எதுவும் கூறவில்லை.

பெண்கள் கடமை என்ற கட்டுரை ஸ்ரீ சாரதா ஸ்திரிகள் சங்க வெள்ளிவிழா மலரில் வெளியிடப்பட்டது. பெண் என்பவள் மகள், சகோதரி, மனைவி, தாய் என்ற நிலைகளில் ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்து இக்கட்டுரையில் எழுதியுள்ளார்.

“பழங்காலத்தில் பெண்கள் வாழ்க்கையைப் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என ஏழு பருவங்களாகப் பிரித்தார்கள். பெண்கள் நான்கு நிலைகளில் ஆற்றவேண்டிய கடமைகள் பல உண்டு. மகள் என்ற நிலையில் ஒரு பெண் பெற்றோர் அரவணைப்பில் கல்வி கற்க வேண்டும். நவீன நாகரிக வாழ்க்கையில் அளவுக்கு மீறிப் புகாமலிருப்பதற்குரிய மன உறுதி இந்நிலையில் உண்டாக வேண்டும்.

பிறரோடு பழகும் காலத்தில் சகோதர உணர்ச்சியோடு பழக வேண்டும். பிறர் குற்றம் குறித்து வம்பு பேசக்கூடாது. தக்க துணையின்றி ஒரு செயலைச் செய்வதும், ஓரிடத்துக்குச் செல்வதும் கூடாது.

பெண்களுடைய கடமைகளில் சிறந்த பகுதி மனைவியாக இருந்து செய்வதாகும். அடக்கம், நாயகனையும் தன்னையும் பாதுகாத்தல், அன்பைப் பேணுதல் ஆகியன பெண்ணுக்கு அமைய வேண்டுவன. கணவனுக்குத் தெரியாமல் ஒரு காரியத்தையும் மனைவி செய்தல் கூடாது. தம் ஒழுக்கத்தையும் கற்பையும் காத்துக்கொள்வதில் கண்ணாக இருக்க வேண்டும். குடும்பத்தின் நிர்வாகம் மனைவிக்கு உரியது. ஆடம்பரமான வழிகளில் பொருளை அழித்தல் கூடாது. கல்யாணம் முதலியவற்றில் வீணாகப் பொருளைச் செலவிட்டு அடையும் மதிப்பைக் காட்டிலும் வறியவர்களுக்கு உதவி செய்து பெறும் மதிப்பே சிறந்தது.

இல்லறம் நடத்துவது நல்ல சந்ததிகளை உண்டாக்குவதற்கென்று உபநிஷத்துக்கள் சொல்கின்றன. அன்பின் முதிர்ச்சி அவள்பால் அருளை உண்டாக்குகிறது. வருங்கால மக்களாகிய குழந்தைகளை நல்லவர்களாகவும் அறிவுடையவர்களாகவும் பழக்க வேண்டியது அன்னையின் கடமையாகும்.

ஆண்டாள், திலகவதியார், வள்ளுவர் மனைவி வாசுகி, கோசலை, சுமித்திரை போன்றோர் நம் நாட்டுப் பெண்மணிகள். அவர்கள் சரிதைகளை அறிந்து பெண்கள் தம் வாழ்க்கையில் பயன்படுத்திக் கொள்வார்களாயின் “நாட்டிற்கே விளக்கங்களாகத் திகழ்வர்.”

பெண்கள் கடமை என்ற இக்கட்டுரை உ.வே.சா. ஆச்சாரமான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் என்பதைப் புரியவைக்கிறது. பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று காலங்காலமாகச் சொல்லப்பட்ட பின்னணியிலிருந்து வழிமொழிகிறார்.

**மேற்கோள் காட்டல்**

பெண்கள் கடமையை எடுத்துச் சொல்லும்போது, கருத்துக்கு அணிசேர்க்கப் பல்வேறு நூல்களிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார்.

> அனக நாட கற்கெம் மன்னை
> மனைவி தாய் தங்கை மகள்

என்று ஒரு செய்யுளில் குமரகுருபரர் பெண்ணின் நான்கு நிலைகளைச் சுட்டிக் காட்டியுள்ளார் என்று எடுத்துக்காட்டுகிறார் உ.வே.சா.

> மனைவிக்கு விளக்கம் மடவாள்

என்பது ஒரு பழந்தமிழ்ச் செய்யுள் என்று சான்று காட்டியுள்ளார். “தாயிற் சிறந்த தயவான தத்துவனே”என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார். “அன்னை தயையும்” என்று வேறொரு பழம் பாடல் தெரிவிக்கின்றது என்றெல்லாம் பெண்ணின் இயல்புளுக்குச் சான்றுகள் தந்துள்ளார்.

அருளது சத்தியாகும்அரன்தனக்கு

என்பது சிவஞான சித்தியார்" என்று சிவஞான சித்தியார் கருத்தைச் சான்று காட்டியுள்ளார். 'ஏர் பிடித்தவன் என்ன செய்வான்? பானை பிடித்தவள் பாக்கியம்' என்ற முதுமொழி இக்கருத்தையே விளக்குகின்றது என்று பழமொழியை எடுத்துக்காட்டி எழுதியுள்ளார்.

### தலச்சிறப்புக் குறித்த கட்டுரை

உ.வே.சா. தெய்வபக்தி சான்றவர். தலங்கள்தோறும் சென்று ஆய்வுக் கண்ணோட்டத்தோடு பல செய்திகளைத் திரட்டி உண்மை அறிந்து இன்புறுவார்.

#### அன்னம் படைத்த வயல்

எந்த ஊருக்குப் போனாலும், அவ்வூரில் இருந்த புலவர்கள், பிரபுக்கள் முதலியவர்கள் வரலாறுகளையும், சரித்திரம், புராணம் என்பவற்றையும் கர்ணபரம்பரைச் செய்திகளையும் விசாரித்துத் தொகுப்பது உ.வே.சா. வின் வழக்கம். ஒரு முறை திருவையாற்றில் நடைபெறும் ஸப்த ஸ்தானம் உத்ஸவத்துக்கு உ.வே.சா. புறப்பட்டார். வழியில் இறங்கி வழியில் உள்ள திருச்சோற்றுத்துறை என்ற சிவன் தலத்துக்குச் சென்றார். திருச்சத்துறை என்று இப்போது அப்பெயர் மருவி வழங்குகிறது. 'ஓதவனம்' என வடமொழியில் கூறப்படும் சுவாமியின் பெயர் ஓதவனேசுவரர்; அம்பிகையின் திருநாமம் அன்னபூர்ணி என்பதாகும். கௌதம் மகிரிஷி அங்கே இருந்து தவம் புரிந்ததாக ஒரு ஐதீகம் உண்டு.

பழங்காலம் ஒன்றில் அம்பிகை அங்கே பல ஏழைகளுக்கு அன்னம் படைத்ததாகச் சொல்வார்கள். இது பழைய வரலாறு. இதற்குரிய ஆதாரம் எதுவும் இருக்கிறதா என்று விசாரித்து அறிய முற்பட்டார் உ.வே.சா. எவரும் சரியான தகவல்களைக் கொடுக்கவில்லை. அந்தணர் குல எளிய மூதாட்டி ஒருவர் அவரை அருகில் அழைத்துப் பேசினார். அப்பாட்டி, "இங்கே அம்பிகை ஒரு பஞ்சகாலத்திலே ஏழைகளுக்கெல்லாம் பெரிய வயல் ஒன்றில் அன்னம் போட்டாளாம். அந்த வயல்கூட இருக்கிறது. அதற்கு அன்னம் படைத்த வயல் என்று பெயர். இந்த ஊரில் சோறுடையான் வாய்க்கால் என்று தெற்கே ஒன்று இருக்கிறது 'சோறுடையான்' என்பது இந்த ஊர் ஸ்வாமியின் பெயர்," என்று பல தகவல்களை எடுத்துக் கூறினார்.

இந்த ஏடறியாத எழுத்தறியாத பாட்டி சொன்ன கருத்துகளையே திருவையாற்று ராஜா காலேஜில் தமிழாசிரியராக உள்ள திரு.டி.ஜி. சோமசுந்தர தேசிகரிடம் கேட்டு அறிந்துகொண்டார்.

உ.வே.சா.வின் ஆய்வுத்தேடலை இக்கட்டுரை உணர்த்துகிறது. உண்மை அறியும் ஆர்வத்தால் எவரிடமும் அன்போடு பேச்சுக்கொடுத்து தகவல்களைப் பொறுமையோடு திரட்டிக்கொள்வார். ஒரு களப்பணியாளர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உ.வே.சா. சான்றாவார்.

இக்கட்டுரையை நாடகம்போல எழுதியுள்ளார். பாட்டிக்கும் உ.வே.சா. வுக்கும் நிகழ்ந்த உரையாடல் நாடகத் தன்மையைக் கட்டுரைக்குத் தருகிறது. கிழவியின் பேச்சு யதார்த்தமாகவும் அந்தணர் பேச்சு வழக்காகவும் அமைந்து கதை படிப்பது போன்ற அனுபவத்தைத் தருகிறது. ஆதரவற்ற ஒரு பாட்டி, தன்னிடம் யாராவது பேச மாட்டார்களா என்று ஏங்குவது இயல்பு. உ.வே.சா. பரிவுகாட்டிப் பேசியதும், பாட்டி, தன் மனத்து எண்ணங்களை எல்லாம், வெகுளியாகவும், வெளிப்படையாகவும் பல்வேறு அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

"உமக்கு எந்த ஊர்?"
"நான் உத்தமதானபுரம்."
"உத்தமதானபுரமா? அங்கே எங்களுக்குக் கூடச்
சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். நீர் என்ன ஜாதி ?"
"நான் அஷ்டஸஹஸ்ரம்."
"அடே! எங்கள் ஜாதிதான். நீர் யார் பிள்ளை?"

என்றெல்லாம் இருவரிடையே நிகழ்ந்த உரையாடலை எடுத்தாள்கிறார்.

### அனுபவ அறிவு

உ.வே.சா. அனுபவம் மிக்கவர். பாட்டியோடு பேசத் தொடங்கியவுடன் அவளின் மனநிலையைப் புரிந்துகொண்டார். "பாட்டிக்கு உத்ஸாகம் உண்டாகிவிட்டது. அவளோடு யாரும் பேசுவதில்லை. எத்தனையோ நாட்களாகக் கட்டுக் கிடையாக மனத்துக்குள் புதைந்து வைத்திருந்த அபிப்ராயங்களை எல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துவிட ஆரம்பித்தாள். பொறுமையோடு கேட்பதற்கு நான் ஒருவன் அகப்பட்டுக் கொண்டேன்" (ப.123) என்று எண்ணமிட்டார்.

### மேற்கோள் காட்டல்

பாட்டி பலவிதமாகப் பேசினாள். பொறுமையாகக் கேட்டால், ஏதாவது செய்தி கிடைக்கும் என்று எண்ணமிட்டார். உ.வே.சா. "கல உமி தின்றால் ஓர் அவலாவது கிடைக்காதா என்று எதிர்பார்ப்பவன் நான்," என்று பழமொழியைச் சொல்லித் தன் உள்ளக்கிடக்கையை வெளியிட்டார்.

பிற சொற்கள்

சமாச்சாரம், பிராயம், சஞ்சாரம், மனோரதம், உத்ஸாகம் என்பன போன்ற வடசொற்களை இடைஇடையே உ.வே.சா. எடுத்தாண்டுள்ளார்.

வருணனை நடை

ஆதரவின்றி இருந்த கிழவியை மிக அழகாக வருணித்துள்ளார். "அவளுடைய பிராயம் எண்பதுக்கு மேல் இருக்கும். கண் ஒளி இல்லை. ஒரு தடிக்கம்பை அருகில் வைத்துக்கொண்டு சில கந்தைகள், ஒரு கொட்டாங் குச்சியில் ஜபம் செய்வதற்கான கூழாங்கற்கள், ஓர் அழுக்கடைந்த செம்பு, ஏதோ தின்பண்டத்தை மூடிவைத்திருந்த சிறிய தகரப் பாத்திரம் ஒன்று ஆகிய இவற்றோடு அக்கிழவி அங்கே வீற்றிருந்தாள்" என்று கிழவியின் தோற்றத்தை வருணிக்கிறார்.

**கல்லூரி அனுபவக் கட்டுரைகள்**

கும்பகோணம் கல்லூரியில் உ.வே.சா. பல்லாண்டுக்காலம் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். தம் பணிக்காலத்தில் பல்வேறு மாணவர் களோடு கலந்து பழகியவர். அத்தகு அனுபவத்தை மாணவர்கள் விளையாட்டுக்கள் என்ற நீண்ட கட்டுரையில் பல்வேறு தலைப்புகளில் அந்த அனுபவங்களை எழுதியுள்ளார். தன்னனுபவக் கட்டுரையாக இதனை அமைத்துள்ளார்.

உ.வே.சா. 1880 ஆம் ஆண்டில் கும்பகோணம் கல்லூரியில் வேலையில் நியமிக்கப்பெற்று அது முதல் 1903-ஆம் ஆண்டு வரையில் அவ்விடத்திலும் அப்பால் 1919 ஆம் வருடம் வரையில் சென்னை மாநிலக் கல்லூரியிலும் பணிபுரிந்து 40 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். கும்பகோணம் கல்லூரியில் பணி ஏற்கும்முன் திருவாவடுதுறை மடத்தில் பாடம் சொல்லிக் கொடுத்த அனுபவமும் உ.வே.சா.வுக்கு உண்டு. பணிநிறைவு பெற்ற பின்பும் சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் கல்லூரியில் பாடம் சொல்லியதுமுண்டு. எனவே உ.வே.சா. பல மாணவர்களோடு பழகியும் அவர்கள் மனமறிந்து பாடம் கற்றுக் கொடுத்தும் அவர்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்றவர். மாணவர்களோடு பழகிய அனுபவத்தைச் சில நிகழ்ச்சிகள் மூலம் நினைவுகூர்கிறார்.

1) அண்டருலகம்

ஒருமுறை முதுகலை (எம்.ஏ.) முதல் வகுப்பில் நைடதம் பாடம் சொல்லி வந்தார். அதில் இந்திரப்படலம் பாடமாக இருந்தது. அதில், இடம்பெறும் 'அண்டருலகத்திறைவன் அவ்வுழி இருப்ப' எனத் தொடங்கும்

செய்யுளுக்கு ஒரு மாணவரிடம் பொருள் கேட்டார். அவர் 'நாகருலகம்' என்று பொருள் சொன்னார். உடனே மாணவர்கள் சிரித்தனர். 'இங்கிலீஷில் அண்டர் என்பதற்குக் கீழ் என்று பொருள். அண்டருலகம் என்பதைக் கீழுலகம் என்றெண்ணி இப்படிக் கூறினார் என்று தோன்றுகின்றது,' என்று சொன்னார் ஒரு மாணவர். பின்னர் உ.வே.சா, 'நைடதம் எழுதிய ஆசிரியருக்கும் இங்கிலீஷுக்கும் சம்பந்தமே இல்லை என்று சொல்லி,' வகுப்பு மாணவர்களுக்குப் புரிய வைத்தார்.

2) வயலிலுள்ள முத்துக்கள்

பாடம் நடத்தும்போது, மாணவர்கள் பல ஐயங்களைக் கேட்பர். புராணக் கதைகளையும், உயர்வு நவிற்சி அமைந்த கவிதைகளையும் பாடம் நடத்தும்போது அறிவுடன் யோசித்துப் பலவிதமாகக் கேள்விகள் கேட்டு ஆசிரியரைத் திணற அடிப்பர். அத்தகு சூழ்நிலையில் உ.வே.சா. எங்ஙனம் நடந்து கொண்டார் என்பதை 'வயலிலுள்ள முத்துக்கள்' என்ற தலைப்பில் உ.வே.சா. விளக்கியுள்ளார்.

அருமறைக் கிழவ ருள்ளத் தவாக்கெடவன்பி னல்கும்
பெருநிதிக் குப்பை யோடு பெய்புனல் பெருகி யோடி
வரிவளை யலறி யீன்ற மணியிள நிலவு காலும்
திருவநீள் கழனி தோறுஞ் செந்நெலை வளர்க்கு மாதோ

என்ற நைடதம் நாட்டுப் படலத்தின் பாடலை நடத்தினார். நிடத நாட்டிலுள்ள செல்வர்களின் பெருங்கொடையையும் நாட்டு வளத்தையும் கூறுவது இச்செய்யுள். அந்தணர்களுடைய உள்ளத்திலுள்ள ஆசை நீங்குபடி அந்நாட்டில் உள்ளோர் அன்போடு செல்வத்தைத் தானமாக அளிப்பார்கள். அங்ஙனம் தானம் செய்யும்போது தாரை வார்த்த தண்ணீர் ஓடிச் சென்று வயல்களில் பாய்ந்து செந்நெல் பயிர் வளர்க்கும் அவ்வயல்களில் சங்குகள் முழங்கிப் பல முத்துக்களைப் பெறும். அம்முத்துக்களின் ஒளி இளநிலவைப் போல இருக்கும்'' (ப.45) என்று பொருள் சொல்லி விளக்கினார்.

அப்போது ஒரு மாணவன் எழுந்து, 'யாசகத்துக்கு வருபவர்கள் வயல்களை எல்லாம் தாண்டிக் கொண்டுதானே ஊருக்குள் வர வேண்டும் ? அப்படி வரும்போது வயல்களில் நிரம்பிய முத்துகளை எடுத்துக் கொண்டு போய் விற்று, செல்வத்தை அடையலாமே? எதற்காக அவர்கள் யாசிக்க வேண்டும்'என்று கேட்டார்.

உ.வே.சா. யோசித்து, 'இந்தப் பாட்டின் உட்பொருள் நிடத நாட்டில் அறச்சிந்தனை உடையோர் அதிகமாக இருந்தார்கள் என்பதுதான். அதைச்

சாதுரியமாக இவ்வாசிரியர் வருணித்திருக்கிறார்' என்று விளக்கம் கூறி மேலும் நடைமுறை வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் சான்றுகாட்டி அம்மாணவனின் ஐயத்தைப் போக்கினார்.

3) எங்கள் ஐயா

தியாகராச செட்டியார், தாம் பார்த்த கல்லூரி ஆசிரியப் பணியைத் தமக்குப் பின்பு, உ.வே.சா. வுக்குக் கிடைக்கும் வண்ணம் செய்தார். அக்காலத்தில் எம்.ஏ. பரீட்சைக்கு நைடத்தில் ஒரு பகுதி பாடமாக இருந்தது. செட்டியார் வேலையிலிருந்து நீங்கும்போது, அதில் ஒரு பாகத்தைச் சொல்லி முடித்திருந்தார். மீதியை உ.வே.சா. நடத்தி முடித்தார். ஒருநாள் சில மாணவர்களுடன் தியாகராச செட்டியாரைப் பார்க்கச் சென்றார். அங்கு ஏற்கெனவே சிலருக்குச் செட்டியார் பாடஞ்சொல்லிக் கொண்டிருந்தார். பாடங் கேட்டவர்கள் செட்டியாரை வியந்து பாராட்டினர். உடனே உ.வே.சா. வைப் பார்த்துச் செட்டியார், 'இப்படி நீங்கள் பாடஞ்சொல்லுவீர்களா?' என்று கேட்டார். அதற்கு உ.வே.சா. தன்னடக்கத்துடன், 'நீங்கள் எங்கே? நான் எங்கே?' என்று சொன்னார்.

அப்பொழுது மாணவர் ராமச்சந்திர ஐயர் செட்டியாரை நோக்கி, 'என்ன ஐயா சொன்னீர்கள்! என் கண்ணுக்கு முன் எங்கள் ஐயாவை இப்படிக் கேட்கிறீர்களே?' என்று கேட்டார். செட்டியார் 'அப்படியானால், இவர் நடத்திய செய்யுட்களைப் பாராமல் சொல்லுவாயா?' எனக் கேட்க, அவரும் செய்யுட்களை ஒப்பித்தார். பின்னர்ச் செட்டியார், 'நீ சொல்லியது சரிதான். நான் கொண்டுவந்து வைத்தவரைப் பற்றி நீ இவ்வளவு புகழ்ந்து பேசுவது எனக்குத் தான் முதலில் சந்தோஷத்தை அளிக்கிறது,' என்றார். உ.வே.சா. ஆறுதலையும் ஊக்கத்தையும் இந்த நிகழ்ச்சியால் பெற்றார்.

4) பாடஞ்சொல்லாத பாட்டு

இளங்கலை (பி.ஏ.) பரீட்சைக்கு, பிரபோத சந்திரோதயம் என்னும் நூலிலிருந்து ஒரு பகுதி பாடமாக வந்தது. உ.வே.சா. அதில் குறிப்பிட்ட காமஞ் சார்ந்த பகுதியை விலக்கிவிட்டு, மீதியை நடத்தினார். அந்த ஆண்டு தேர்வு நடந்தபோது உ.வே.சா. விலக்கிய பகுதியிலிருந்து கேள்வி கேட்கப் பட்டிருந்தது. உ.வே.சா. மிகவும் வருந்தினார். சென்னைக்குச் சென்று தேர்வு எழுதி மீண்ட மாணவர்கள், உ.வே.சா.வைப் பார்த்துக், 'கவலையே படாதீர்கள்.' 'நீங்கள் நடத்தாத பாடத்தில் இருந்து கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் எழுதிவிட்டோம்' என்றனர் 'எப்படி' என்றார்? 'எப்போது நீங்கள் அதை நடத்தவில்லையோ, அப்போதே ஆர்வத்தோடு நாங்கள் படித்துக் கொண்டோம்,' என்றனர். மாணவர் இயல்பை இந்நிகழ்ச்சி வாயிலாக உ.வே.சா. உணர்ந்து கொண்டார்.

5) ஆஜானுபாகு

ஒருசமயம் கம்பராமாயணம் பாடம் சொன்னார், உ.வே.சா. இராமனைப் பற்றி ஒரு செய்யுளில், 'முழங்காலளவும் நீண்ட கைகளை உடையவன்' என்று கம்பர் கூறியுள்ளார். உ.வே.சா. அது குறித்துப் பேசும்போது, 'இங்ஙனம் முழங்கால் அளவும் நீண்ட கைகளை உடையவரை ஆஜானுபாகு என்று வடமொழியில் சொல்வது வழக்கம்' என்று கூறினார். வகுப்பில் ஒரு மாணவர் அந்த லட்சணம் தம்மிடம் அமைந்திருக்கிறதா என்று கையைக் கீழே நீட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். உடனே உ.வே.சா. 'சரியாக இருக்கிறதா அப்பா?' என்று கேட்டார். பிள்ளைகள் சிரித்தார்கள். அதுமுதல் அந்த மாணவரை யாவரும், 'ஆஜானுபாகு' என்று அழைத்தனர்.

6) தேனுசுவாஸபுரம்

வகுப்பு மாணவர்களிடம் அவர்களைக் குறித்து அறிவித்துக் கொள்ளுமாறு உ.வே.சா. கேட்டுக் கொண்டார். ஒரு மாணவர், தம்முடைய ஊர் 'தேனுசுவாஸபுரம்,' என்றார். அப்படி ஓர் ஊர் இல்லை. மாணவர் பிறர் கவனத்தைத் தம்பால் ஈர்க்க வேண்டும் என்பதற்காக, 'ஊற்றுக்காடு' என்ற ஊரை மாற்றித், 'தேனுசுவாஸபுரம்' என்று கூறிக் காரணத்தையும் புனைந்து கூறினார். அன்றிலிருந்து அவர் பெயரும் அவ்வாறே வழங்கப்பட்டது.

7) உரையாசிரியர் எழுதியிருக்கிறார்

நாலடியார் பாடம்சொல்லும்போது, உ.வே.சா. மாணவர் ஒருவரிடம் அது தொடர்பாக ஒரு கேள்வி கேட்க, அவர் தவறாகப் பதில் சொல்லிவிட்டு, 'அப்படி உரையாசிரியர் சொல்லியிருக்கிறார்' என்றார். உ.வே.சா. மாணவரின் தவறைச் சுட்டிக்காட்டி, அப்படி எந்த உரையாசிரியரும் சொல்லவில்லை என்று உறுதியாகச் சொன்னார். மாணவர் வெட்கித் தலைகுனிந்தார்.

8) தேர்வலான்

கம்பராமாயணத்தில் சுமந்திரனைப் பற்றி, 'தேர்வலான் இனைய கூற' என்ற தொடர் குறித்து வகுப்பெடுத்தார். தேர்வலான் என்ற சொல் தேரோட்ட வல்லவன் என்ற பொருளையும், ஆராய்ச்சியில் வல்லவன் என்ற பொருளையும் குறிப்பது என்று விளக்கினார். அப்போது வகுப்பில் இருந்த மாணவர் எழுந்து, 'ஐயா! இந்த அர்த்தம் மிகவும் நன்றாக இருக்கிறது,' என்று பாராட்டினார். இது நடந்து பதினைந்து ஆண்டுகள் சென்றபின் அதே மாணவர் புதுக்கோட்டை ஜாகீர்தாரின் அந்தரங்கச் செயலராகப் பதவியில் இருந்தார். அங்கு ஒரு வேலையாகச் சென்ற உ.வே.சா.விடம் அம்மாணவர்

வந்து பணிந்தார். யாரென்று உ.வே.சா. உசாவினார். 'என் பெயர் கோவிந்தராவ்' என்றார் உடனே உ.வே.சா. அடையாளம் கண்டுகொண்டு, 'தேர்வலானோ' என்று கேட்க, அவர், 'ஆமாம்' என்றார். இந்த அனுபவம் உ.வே.சா. வுக்குத் தனி இன்பத்தைத் தந்தது.

9) எங்கள் ஊர், ஐயா

ஒரு நாள் வகுப்பில் உ.வே.சா. திருக்கோவலூரைப் பற்றிச் சிறப்பாகச் சொன்னார். கேட்டுக்கொண்டிருந்த மாணவன் ஒருவன் எழுந்து, 'அந்த ஊர் எங்கள் ஊர் ஐயா' என்று சொன்னார் உ.வே.சா. மாணவனின் ஊர்ப்பற்றைப் புகழ்ந்தார்.

10) கேள்வி முறையில்லையா?

விநோதரச மஞ்சரியில் ஒரு பகுதி பாடமாக இருந்தது. அதில் ஓரிடத்தில் முகம்மதிய அரசர் ஒருவரைப் பற்றிக் கடுமையான வரலாறு ஒன்று எழுதப்பட்டிருந்தது. உ.வே.சா. பாடம் சொல்லியபோது, ஒரு முகம்மதிய மாணவர் எழுந்து 'இதற்கொன்றும் கேள்விமுறை இல்லையா?' என்று கேட்டார். தம்முடைய மதத்தினரைப் பற்றிக் குறை கூறியிருப்பதைக் காண அவர் உள்ளம் பொறுக்கவில்லை. உடனே உ.வே.சா., 'ஒரு வகுப்பார் மனத்தைப் புண்படுத்தும்படியுள்ள விஷயங்களைப் பாடமாக வைப்பது பெரும் பிழை. இருந்தாலும் குற்றமுள்ளவனை உலகமே வெறுக்கும்,' என்று ஆறுதல் கூறினார்.

11) கணபதி சுப்பிரமணியர்

ஒருசமயம் இளங்கலை வகுப்பில் கணபதி ஐயர், சுப்பிரமணிய ஐயர் என்ற இருவர் படித்து வந்தனர். இருவரும் அறிவுடையவர்கள். இருவரும் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்வர். உ.வே.சா. சிவப்பிரகாச சுவாமிகளின் செய்யுளுக்கு விளக்கம் சொன்னார். "ஒருசமயம் சிவபெருமானும் உமாதேவியும் வீற்றிருக்கும்போது கணபதி அழுதுகொண்டே வந்து, சுப்பிரமணியன் என் காதில் அழுத்திக் கிள்ளிவிட்டான்" என்றார். முருகனைச் சிவபெருமான் அழைத்து, 'நீ ஏன் அப்படிச் செய்தாய்?' என்று வினவினார். 'அவன் மட்டும் என் முகத்தில் எத்தனைக் கண்கள் இருக்கின்றன என்று எண்ணலாமோ?' என்று கூறினார். உடனே பிள்ளையார், 'என் துதிக்கையைப் பிடித்திழுத்து முழம் போட்டு அளந்தால் நான் சும்மா இருப்பேனோ?' என்றார். சிவபிரான் சிரித்து இருவரையும் அணைத்துக் கொண்டார் என்று விளக்கம் கூறிவிட்டு உ.வே.சா. 'இறுதியில் கணபதி சுப்பிரமணியர்களுக்கிடையில் விஷமம் நடப்பது இயல்பு. இந்த வகுப்பிலுள்ள இந்த இரண்டு பேரே அதற்குச் சாக்ஷி" என்று இருவரையும் சுட்டிக்காட்டினார்.

வகுப்பில் பிள்ளைகள் கொல்லென்று சிரித்தார்கள். அது முதல் அவ்விருவரும் ஒருவர் மேல் ஒருவர் குறை கூறுவதை நிறுத்திவிட்டனர்.

உ.வே.சா. மாணவர் மனம் புண்படாமல் செய்யுளுக்கு விளக்கம் கொடுக்கும்போது சுட்டிக்காட்டித் திருத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

### 12) இது கும்பகோணமல்ல

சென்னை மாநிலக் கல்லூரியில் வேலை பார்க்கும்போது, மாணவர்கள் ஆசிரியரை அதிலும் குறிப்பாகத் தமிழ் ஆசிரியரை மதிப்பதில்லை. ஒருசமயம் தேர்வு எழுதும் அறையில், ஆசிரியர்கள் வருவதற்குள் பிள்ளைகள் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். பேசாமல் இரும், ஏன் சத்தம் போடுகிறீர்? என்று உ.வே.சா. கண்டித்தார். 'நீங்கள் பேசாமல் போங்கள். இங்கே இப்படித்தான் நடக்கும். இது கும்பகோணமல்ல என்று ஒரு மாணவர் சொன்னான். உ.வே.சா. காலப்போக்கில் தம் அறிவுத்திறனாலும், பண்பாலும் மாணவர்கள் அன்பையும், மதிப்பையும் பெற்றார்.

### 13) சமயத்திற்கு உபகாரம்

சென்னை மாநிலக் கல்லூரியில் வகுப்பில் கம்பராமாயணம் பாடம் சொன்னார், உ.வே.சா. முதல் வரிசையில் இருந்த மாணவர் ஒருவர் வலது காலைத் தூக்கி இடது துடைமேற்போட்டு, காலை அசைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். இந்தத் தோரணையை உ.வே.சா. விரும்பவில்லை. கம்பராமாயணம் பாடம் சொல்லும்போது அனுமான், இராவணனைச் சந்தித்த நிகழ்ச்சியைக் கூறிக்கொண்டிருந்தார். 'இராவணனுடைய சிங்காதனத்தின் அருகில் தம் வாலைச் சுற்றிச்சுற்றி அச்சிங்காதனத்தைவிட உயரமாக ஓர் ஆசனத்தை உண்டாக்கி அதன்மேல் தாவினார். அவர் உட்கார்ந்திருந்த நிலை எப்படி இருந்தது? இதோ இவர் உட்கார்ந்திருக் கிறாரே இப்படித்தான்' என்று அந்த மாணவரைச் சுட்டிக் காட்டினார். பிள்ளைகள் சிரித்தனர். அந்த மாணவர் வெட்கப்பட்டு நேராக அமர்ந்தார். இப்படி அவர்கள் மனம் ஏற்கும் வகையில் கடினமாக அல்லாமல் அதே நேரத்தில் கண்டிப்புடன் பொருத்தமான நேரத்தில் சுட்டிக்காட்டும் பண்பினை உ.வே.சா. மேற்கொண்டிருந்தார்.

### 14) ஒரு கிழவியின் வாழ்த்து

வகுப்பில் உ.வே.சா. ஒவ்வொருவரும் தம் குல ஆசாரங்களைக் கடைப்பிடித்து அனுஷ்டானம் செய்துதர வேண்டும் என்று எடுத்துரைத்தார். பிராமண மாணவர் அவர் கூறியதைக்கேட்டு வீட்டில் தொடர்ந்து சந்தியாவந்தனம் செய்து வந்தார். ஒரு நாள் அந்த மாணவன்

உ.வே.சா.வைத் தன் வீட்டுக்கு அழைத்தான். அங்கே சென்றதும் மாணவர் வீட்டில் விருந்து பேணினர். சமையலறையில் இருந்து ஒரு கிழவியின் தலை மட்டும் வெளியே தெரிந்தது. மாணவரின் தந்தை ஆசிரியரிடம், 'அவள் என்னுடைய தமக்கை. என் மகன் உங்கள் பேச்சைக் கேட்டு ஒழுங்காகச் சந்தியாவந்தனம் செய்வதில் அவளுக்கு மகிழ்ச்சி. உங்களை அழைத்து வர வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள்' என்று கூறினார். கிழவி தட்டு நிறையப் பழமும், தாம்பூலமும் வைத்து ஒரு குழந்தை மூலம் அனுப்பினாள். உ.வே.சா. மனம் மகிழ்ந்தார்.

### 15) துரைராஜா நாற்காலி

புதுக்கோட்டை மன்னருடைய இளைய சகோதரர்களில் ஒருவரான ஸ்ரீ சுப்பிரமணிய துரைராஜா என்பவர் கல்லூரியில் படித்துவந்தார். முதல்வர் ஆணைப்படி அவருக்கு மட்டும் தனி நாற்காலி வகுப்பில் போடப் பட்டிருந்தது. ஒருசமயம் சிலநாட்கள் அவர் கல்லூரிக்கு வரவில்லை. ஒரு மாணவர் நன்றாக உடை அணிந்துகொண்டு, அந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டார். மறுநாள் அந்த நாற்காலி அகற்றப்பட்டது. மாணவர் வேறு எங்கேனும் இருக்கிறதா என்று தேடினார். உ.வே.சா. அவரை நோக்கி, 'அது பத்திரமாக இருக்கிறது. இவ்வளவு பேர் அவரவர் இடத்தில் இருக்கும்போது, இவருக்கு மட்டும் நாற்காலி என்ன? பிறருடைய நாற்காலியில் உட்காருவதில் திருப்தி அடைவது நியாயமாகுமா?' என்று அதட்டினார்.

### 16) மாப்பிள்ளைகள்

அக்காலத்தில் திருமணத்துக்குப் பின் மாணவர்கள் படிக்க வருவது வழக்கம். அவர்களுக்குப் பொருட்செலவு செய்வது மாமனார்கள். மாப்பிள்ளைகளால் ஏற்படும் இடர்ப்பாடுகளை எண்ணி மாமனார்கள் நொந்து போய்ப் புலம்புவர். இதை உ.வே.சா. வகுப்பில் சொல்லித் திருத்த முனைந்தார்.

### 17) பல்லவி ராகம்

உ.வே.சா. இசைக் கலைஞர் செய்யுளை எல்லாம் இராகமாகப் பாடிப் பாடம்சொல்லித் தருவார். மாணவர்களையும் பாடச்சொல்லி ஊக்கப் படுத்துவார். ஒருநாள், மாணவர்களைப் பார்த்து, 'உங்களுக்குத் தெரிந்த ராகங்களைச் சொல்லுங்கள்' என்று கேட்டார். அப்பொழுது ஒரு மாணவன், 'பல்லவி ராகம்' என்றார். மாணவர்கள் சிரித்தனர். உ.வே.சா. அவரது அறியாமையைப் போக்க முயன்றார். 'பல்லவி என்பது ராகமன்று, கீர்த்தனையின் முதல் உறுப்பு பல்லவி' என்று விளக்கினார்.

வகுப்பெடுக்கும்போது நேர்ந்த பல்வேறு நிகழ்வுகளை எல்லாம் நினைவு கூர்ந்து இக்கட்டுரையில் எழுதியுள்ளார். மாணவர்களில் பலவிதமான

பாங்கினர் இருந்தனர். மாணவப் பருவத்திலே தம் பெயர்களோடு சாதிப் பெயரை இணைத்துக்கொள்ளும் வழக்கம் இருந்தது. பிராமணச் சிறுவர்கள் நிறையப் பேர் கல்லூரியில் படிக்கும் வாய்ப்பினை அந்நாளில் பெற்றிருந்தனர். திருமணத்திற்குப் பின்னரும் மாப்பிள்ளைகளை மாமனார்கள் படிக்க வைத்தார்கள். மாணவர்கள் குல ஆச்சாரங்களைப் படித்திருந்தாலும் மறக்காமல் பின்பற்றினர். நகர்ப்புற மாணவர்கள் குறும்புகள் செய்தனர். அன்றும் ஆசிரியர்களை அலட்சியப்படுத்தும் போக்கு மாணவர்களிடையே இருந்தது. வகுப்பில் அரச குடும்பத்தாருக்குத் தனி இருக்கை இடப்பட்டிருந்தது. உ.வே.சா. வருணாசார தர்மங்களை ஏற்பவராகவும், சாதி வேற்றுமைக்கு ஆதரவு காட்டுபவராகவும், சமூக ஏற்றத்தாழ்வுகளைப் பொறுத்துக்கொள்பவராகவும் இருந்தார். ஆனால், தன் ஆசிரியர் பணியில் மட்டும் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். மாணவர்கள் உளவியலை அறிந்து நடந்துகொண்டார். வகுப்பு நடைபெறும்பொழுதே தம் பாடம் கற்பிக்கும் திறனாலும், பொருத்தமுறத் தவறுகளைச் சுட்டிக்காட்டியதாலும் மாணவர்கள் மதிப்பில் உயர்ந்து நின்றார். அந்நாளில் வீட்டுக்கு விருந்தினர் வரும்போது பெண்கள் நேரே வரமாட்டார்கள். பெண்கள் ஒடுக்கப்பட்டு ஒரங்கட்டப்பட்டு வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த உ.வே.சா. அப்புறக்கணிப்புக் குறித்தும் எந்தக் கருத்தும் சொல்லவில்லை.

'மாணாக்கர் விளையாட்டுக்கள்' என்ற கட்டுரை தன்னுணர்வுக் கட்டுரையாக விளங்குகிறது. நாடகப் போக்கில் அமைந்துள்ளது. படிக்கும் பருவத்தில் மாணவர்களின் இயல்புகள் எப்படி இருக்கும் என்பதை இக்கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

### மாணவர் உளவியல்

மாணவர்களை உளவியல் அணுகுமுறையில் அணுகி, அவர்தம் தவறுகளைத் திருத்திக்காட்டினார். 'அவர்களை அடக்கும் முறையில் அடக்கினால் அவர்களும் பெட்டிப் பாம்புபோல் அடங்கிவிடுவார்கள். பின்பு தாம் செய்த குற்றத்திற்கு இரங்குவார்கள். மாணவர்கள் யாரேனும் குற்றம் செய்தால், வெளிப்படையாகக் கேட்பது என் வழக்கம் அன்று. ஒரு சந்தர்ப்பத்தைக் கற்பித்துக்கொண்டு குறிப்பாகச் சொல்வேன். இதனால் குற்றம் செய்த மாணாக்கர் மனம் வருந்தி இரங்கித் தனியே என்னிடம் வந்து மன்னிப்பு கேட்பார். பிறகு திருந்திவிடுவார்' (ப.41). அவர்கள் மனநிலை யையும், நடத்தையையும் அறிந்துகொண்டு மாணவர்களைத் திருத்தியுள்ளார்.

### நாடகப்போக்கு

நிகழ்வுகளைச் சுவையாகச் சொல்வதற்கு, நேரில் காண்பதுபோன்ற அனுபவத்தைத் தர, பாத்திர உரையாடலை அமைத்துள்ளார்.

"அதெல்லாம் சரி, பாடமாகும்படி சொல்வாரா?"
"ஏன் சொல்லமாட்டார்கள்? இவர்கள் சொல்லும்போதே செய்யுட்கள் தாமாக எங்களுக்கும் பாடமாகிவிடுகின்றன. (ப.51)"

இப்படியெல்லாம் இடையிடையே உரையாடல்கள் அமைந்துள்ளன.

உணர்ச்சி நடை

வினாக்களைக் கேட்டு, உணர்ச்சிமிகு நிகழ்வுகளை அமைத்துள்ளார். "நான் என்ன சொல்வேன்? உங்களைப் போலச் சொல்வதற்கு யாரால் முடியும்? நீங்களெங்கே? நானெங்கே?" (ப.50) என்று உ.வே.சா. செட்டியாரிடம் உணர்ச்சி பொங்கப் பேசுகிறார்.

உவமை

பொருத்தமான உவமைகளை ஆங்காங்கே கட்டுரையில் அமைத்துள்ளார். "நம் வீட்டு நெருப்பென்று நமது வஸ்திரத்துக்குள் வைத்துக் கொள்ளலாமா?" என்று ஓரிடத்தில் உவமிக்கிறார்.

"மலர்ந்த தாமரைகளுக்கு நடுவில் இரண்டு வாடிய தாமரைகளைப் போல் அவ்விருவர் முகங்களும் மாறியதைக் கண்டேன்" (ப.81) என்று பிறிதோர் இடத்தில் உவமை கூறுகிறார்.

பிறமொழிச் சொற்கள்

உபாத்தியாயர், உபகாரம், தாத்பரியம், சந்தோஷம், ஆஜானுபாகு, வியாக்கியானம், ஜாகிர்தாரர், ஸ்திதி, பிரகாரம், ஆசமன பாத்திரம், அனுகூலம், பிரதிகூலம், ஆமோதிக்கிறார், காலேஜ், பிரின்ஸிபால், ஸ்மார்த்த மாணாக்கர், சரீரம், அபக்யாதி என்றெல்லாம் இக்கட்டுரையில் வடசொற்களை மிகுதியாக எடுத்தாண்டுள்ளார்.

இக்கட்டுரையில் விளக்க நடையும், உணர்ச்சி நடையும் நாடகப் போக்கும் அமைந்துள்ளன. சிறுசிறு நிகழ்வுகளைக் கூட ஆர்வநிலை குன்றாமல் நாடகம்போல எழுதியுள்ளார்.

## 2. நினைவு மஞ்சரி (இரண்டாம் பாகம்)

உ.வே.சா. பேச்சிலும் உரைநடையிலும் எளிமைத்தன்மையும், கருத்துச் செறிவும், நகைச்சுவை உணர்வும், நாடகப்போக்கும், உணர்வு வெளிப்பாடும், ஆர்வநிலையும் கலந்திருக்கும். தம் நீண்ட வாழ்நாளில் பல்வேறு மனிதர்களின் சந்திப்பும், கண்டும் கேட்டும் பெற்ற அனுபவமும், ஆய்வுத் தேடலும் பல்வேறு கட்டுரைகளை எழுதுவதற்கு ஆதாரமாக அமைந்தன. பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று, தலைமை, வரவேற்புரை, சிறப்புரை போன்ற பொறுப்புகளை ஏற்றுச் சிறப்பாக உரையாற்றி உள்ளார்.

'பேச்சாளர் பேசப்போகும் பொருளின் உண்மையை உண்மையாக அறியவேண்டும். தலைப்பில் அமைந்த சொற்களுக்கு இலக்கணம் தரவேண்டும். பேசப்படும் பொருளைத் தகுந்த முறையில் பகுத்துக்கொள்ள வேண்டும்.' கேட்பவன் மனநிலையை அறிந்து பேச்சினை அமைக்க வேண்டும் என்ற பிளேட்டோவின் பேச்சுக்கலைத் திறனை உ.வே.சா. விடம் காணலாம்.

உ.வே.சா.வின் கட்டுரைகள் சொல்லும் கருத்தால் சுவையாக அமைந்திருக்கும். சொல்லும் முறையில் தன் அனுபவ வெளிப்பாடும், உள்ப்பாட்டுப் பாங்கும் பகுத்துக்கொண்டு கோர்வையாகச் சொல்லும் முறையும், கேட்போரையும் வாசிப்போரையும் ஈர்க்கும் நேர்த்தியும் சிறந்து விளங்கும்.

"வார்த்தைப் பதினாயிரத்தொருவர் என்பது ஒரு தமிழ்ச் செய்யுட் பகுதி. படைகளோடு சென்று போர் புரிந்து சாவார் எளியர். சபையிலே போய்த் தைரியமாகப் பேசுவோர் மிகச் சிலர் என்று திருவள்ளுவரும் கூறினார். அத்தகைய அரிய பிரசங்க வன்மை நாவலரிடத்தில் நன்கு அமைந்திருந்தது," (ப.189) என்று நாவலர் குறித்து உ.வே.சா. கூறியது உ.வே.சா.வுக்கும் பொருந்தும்.

"பொதுவாக ஒரு விஷயத்தை மேற்கொண்டு, முறைப்படுத்தி, காரண காரியங்களைக் காட்டி, ஆக்ஷேப சமாதானங்களோடு பேசும் வழக்கம் தமிழ்நாட்டில் மிகக் குறைவாக இருந்தது. கிறிஸ்துவ சமயப் பாதிரியார் செய்த உபந்நியாசங்களின் முறை தெளிவாகவும் எளிதில் யாவரும் அறிந்து சுவைப்பதற்குரியதாகவும் இருந்தது" (ப.190) என்று உ.வே,சா. புலப்பாட்டு நெறி குறித்துக் கூறியுள்ளார். மேலைநாட்டிலிருந்து வந்த கிறித்துவப் பாதிரியார்கள் மக்கள் மனத்தை மனமாற்றம் செய்யப் பேச்சுக்கலையைப் பயன்படுத்தினர். அப்பேச்சின் தாக்கத்தை உணர்ந்த கிறித்துவர்கள் தம்

பேச்சை முறைப்படுத்திக் காரணகாரியங்களை எடுத்துரைத்து, ஆர்வ நிலையைத் தூண்டி, எளிமையாகப் பேசி மக்களைக் கவர்ந்துள்ளனர்.

நினைவுமஞ்சரி இரண்டாம் பாகம் நூலில் இருபத்தைந்து கட்டுரைகள் உள்ளன. அவற்றுள் ஏழு கட்டுரைகள் வெவ்வேறு இடங்களில் ஆற்றிய சொற்பொழிவுகள். பிற பதினெட்டுக் கட்டுரைகள் இதழ்களில் வெளிவந்தவை. ஆனந்த விகடன் தீபாவளி மலரில் இரண்டு கட்டுரைகள் வெளிவந்துள்ளன. பிற கலைமகளில் வெளிவந்தவை.

## I. சொற்பொழிவுக் கட்டுரைகள்

ஏழு கட்டுரைகள் உ.வே.சா.வெவ்வேறு இடங்களில் ஆற்றிய சொற்பொழிவுகள் ஆகும். அவற்றை ஐந்து பிரிவுகளில் அமைத்துக் காணலாம்.

### 1) ஊர்பற்றிய சொற்பொழிவுகள்

#### கும்பகோணம்

கும்பகோணம் கல்லூரியில் 1932 ஆம் ஆண்டு செய்த சொற்பொழிவு இக்கட்டுரையாகும். கும்பகோணத்தின் சிறப்பு, கோயில்கள், மண்டபங்கள், மடங்கள், வாழ்ந்த அடியார்கள், புலவர்கள், சங்கீத வித்துவான்கள், செல்வர்கள் என்றெல்லாம் பல்வேறு தகவல்களைத் தம் சொற்பொழிவில் சுவையாக உ.வே.சா. தந்துள்ளார்.

#### கும்பகோணம் சிறப்பு

சோழநாட்டில் சிறப்புப் பெற்ற நகரம் கும்பகோணம் ஆகும். கும்பகோணம் என்பதற்குக் குடமூக்கு என்ற தமிழ்ப் பெயரும் வழங்குவதுண்டு. குடந்தை, திரு குடந்தை எனவும் மருவி வழங்கப்படுகிறது. ஒரு பிரளய காலத்தில் அமிர்தகும்பம் மிதந்து வந்தபோது, இவ்விடத்தில் சிவபிரான் அதனை விழச்செய்து திருக்கோயிலில் எழுந்தருளினார் என்பது புராணம்.

#### திருக்கோயில்கள்

கும்பேஸ்வரர் கோயில் இவ்வூர்ச் சிவன் கோயில்களில் தலைமை பெற்றது. அம்பிகையின் திருநாமம் மங்களாம்பிகை என்பதாகும். தேவாரம் பெற்ற தலம். நாகேஸ்வரசுவாமி கோயிலும் தேவாரம் பெற்றதே. இக்கோயிலிலுள்ள சபாபதிக்கு ஆடல்வல்லாரென்பது திருநாமம். ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் 11,12,13 ஆகிய தேதிகளில் கதிரவனொளி காலையில் நாகேஸ்வரசுவாமி திருமேனியில் படிவதுண்டு.

விசுவநாத சுவாமி கோயிலும் தேவாரம் பெற்றதே. இக் கோயிலில் நவதீர்த்தங்களும் கன்னிகையர் வடிவமாக அமைக்கப்பட்டிருப்பது சிறப்பு. சாரங்கபாணி பெருமாள் பேரில் நொண்டி நாடகம் உள்ளது. போர்க்களத்தில் குதிரை திருடச் சென்ற ஒருவன் கால் வெட்டுண்டு நொண்டியாகிப் பெருமாள் திருவருளால் நலம்பெற்ற வரலாற்றைச் சொல்வது அது.

இவை தவிரப் பிற கோயில்களும் கும்பகோணத்தில் உள்ளன. அபிமுக்தேசுவரர் கோயில், கௌதமேஸ்வரர் கோயில், சோமநாத சுவாமி கோயில், சக்ரபாணிப் பெருமாள் கோயில், இராமஸ்வாமி கோயில் முதலிய கோயில்கள் உண்டு. பிரமதேவருக்கு இந்நகரத்தில் தென் பாகத்தில் ஒரு கோயில் உண்டு. அக்கோயில் அமைந்த தெருவுக்குப் பிரமன் கோயில் தெரு என்ற பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

### தீர்த்தங்கள், மண்டபங்கள்

இந்த ஊரில் மகாமகதீர்த்தம் மிக்க சிறப்புடையது. பன்னிரு ஆண்டுகளுக்கு ஒரு முறை இங்கு மகாமகம் நடைபெறும். மகாமகக் குளத்தின் வடகரையில் துலாபார மண்டபம் என்ற ஒன்றுள்ளது. இந்நகரத்தில் சில மடங்கள் இருக்கின்றன. மகாமகக் குளத்தின் வடகரையில் ஒரு பழைய சைவமடம் உள்ளது. மத்வமடம் ஒன்றும் இருக்கிறது.

### அடியார்கள்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய மூர்க்க நாயனார் இங்கிருந்தவர். பகவர் என்னும் முனிவர் இவ்வூரில் தவம் செய்து வாழ்ந்து முத்தி பெற்றார்.

### புலவர்கள்

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இவ்வூரைப் பற்றித் திருக்குடந்தைப் புராணம், மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், குடந்தைத் திரிபந்தாதி என்ற மூன்று நூல்களை இயற்றியுள்ளார்.

வித்துவான் தியாகராச செட்டியார் இவ்வூர்க் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தவர்.

### சங்கீத வித்வான்கள்

பாபநாச முதலியார் என்பவர் சிவத்தலங்கள் குறித்துப் பல கீர்த்தனைகள் பாடியுள்ளார். கோபாலகிருஷ்ண பாரதியாரின் ஆசிரியர் ராமதாஸ் இவ்வூரினரே. பல்லவி கோபாலையர் என்ற சங்கீத வித்துவான் ஒருவர் இங்கே இருந்து புகழ் பெற்றார். சங்கராபரணம் நரசய்யர் என்ற சங்கீத வித்துவான் இங்கு வசித்து வந்தார். இவர் சங்கராபரணம் என்னும் இராகத்தை அடகு வைத்தார் என்று சொல்வர்.

குப்புசாமி சாஸ்திரிகள் வடமொழியில் வல்லவர். வியாகரணம் வராகக்குளம் சடகோபாச்சாரியார், குமரகிருஷ்ண சாஸ்திரி போன்றோரும் இவ்வூரைச் சேர்ந்தோரே.

கல்லூரி

கும்பகோணம் கல்லூரி கல்விப்பணியில் சிறந்து விளங்குவதாகும். இக்கல்லூரி முதல்வர் போர்ட்டர் துரை ஆற்றல் மிக்கவர். தண்டலம் கோபாலராவ், சாது சேஷையா, ஆர்.வி. ஸ்ரீநிவாசையர், பி. ஹனுமந்தராவ் முதலிய ஆசிரியர்கள் இக்கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர்கள். பூண்டி அரங்கநாத முதலியார் சில காலம் இங்கே கணித ஆசிரியராக இருந்தார். கச்சிக்கலம்பகம் என்ற நூலை எழுதியவர் இவரே. தியாகராச செட்டியார் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவர் பரிந்துரையால் உ.வே.சா. தமிழாசிரியராக இவருக்குப்பின் பணிபுரிந்தார்.

செல்வர்கள்

வியாசராயர் என்ற ஒரு தாசில்தார் தம் சம்பளத்தில் செலவு போக மிகுதிப் பணத்தைக் கொண்டு ஓர் அக்கிரகாரம் கட்டினார். திவான் பு.மாதவராயரும், புதுக்கோட்டைத் திவானாக இருந்த ஏ. சேஷையா சாஸ்திரிகளும் இந்நகரத்தினரே.

பெரும்பாண்டிச்சாம்பான்

உ.வே.சா. வாழ்ந்த காலம் தீண்டாமை மிக்கிருந்த காலம். தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்த பெரும்பாண்டிச் சாம்பான் என்பார் அவ்வூர்க் குளத்தைச் சுத்தம் செய்தார். சிவகோலம் பூண்டு, இடுப்பில் பல மணிகளைக் கோர்த்துக் கட்டிக்கொண்டு தெருவின் நடுவில் செல்வார். இவன் கோயில் திருப்பணிக்காக நிதி திரட்டினார்.

2. சில ஊர்களைப் பற்றிய குறிப்புகள்

1) திருப்பனந்தாள்

கும்பகோணம் போர்ட்டர் டவுண் ஹாலில் 1929 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி நடைபெற்ற திருப்பனந்தாள் ஆயிரம் ரூபாய் பரிசளிப்புக் கூட்டத்தில் தலைமை வகித்தபோது செய்த சொற்பொழிவில் திருப்பனந்தாள் ஊரின் சிறப்பை எடுத்து மொழிந்தார்.

திருப்பனந்தாள் பனந்தாளின் பெயர் கொண்டது. தாடகை என்னும் பெண்ணிற்கு வளைந்தும், குங்குலியக் கலய நாயனாருக்கு நிமிர்ந்தும் சிவபெருமான் அடியார்களுக்கு எளியராய் இரங்கிய தலம் இது.

இவ்வூர்ப்பக்கத்தில் ஓடும் நதியின் பெயர் சுப்பிரமணிய நதி என்பதாகும். பழைய தமிழ்ப் பாட்டொன்றில்,

"தண்ணீரும் சோறும் அளித்தான் திருப்பனந்தாள் பட்டனே", என்று கூறப்பட்டிருத்தலால், இத்தலத்தில் ஒருவர் முன்பு பஞ்ச காலத்தில் அன்னதானம் செய்துவந்தாரென்று தெரிகிறது. பஞ்சமர்களில் அளவிறந்த பேர்களுக்கு அன்னதானம் அளிப்பது இவ்வூர்ச் செல்வந்தர்கள் வழக்கம்.

2. திருவேட்டீசுவரன் பேட்டை

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் 20.11.32 இல் காலையில் திருவேட்டீஸ்வரன் பேட்டையில் உள்ள அவர்கள் மடத்துக்கு வந்தபோது, உ.வே.சா. திருவேட்டீசுவரன் பேட்டைத் தலம் குறித்துப் பேசினார்.

இத்தலத்தில் உள்ள லிங்கம் ஸ்வயம்பு லிங்கம். பாறையின் மீதுதான் சுவாமி இருக்கிறார். வேட்டீசுவரன் என்றால் வேடரூபமாக வந்த ஈசுவரன் என்பது பொருள். அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெறுவதற்காகத் தவம் செய்தபொழுது, வேட வடிவம் எடுத்துக்கொண்டு சிவபெருமான் அவன்முன் எழுந்தருளி அவனோடு சண்டையிட்டு, அவனுடைய கையால் அடியுண்டார். அந்த அடியானது சர்வலோகங்களிலும் பட்டது. அந்த அடியின் சின்னம் உடைய சிவ லிங்கங்கள் பார்த்தப்பிரசுர லிங்கம் என்று சொல்லப்படும். இந்தச் சிவலிங்கப் பெருமான் முடியில் ஒரு பிளவு இருக்கிறது. இந்த இடம் மும்மூர்த்திகளும் இருக்கும் இடம். இங்கே ஆஞ்சனேயர் கோயில் இருக்கிறது.

3. வேலூர்

30.11.35இல் வேலூரில் திருப்பனந்தாள் ஆயிரம் ரூபாய் பரிசளிப்பு விழாவில் ஐயரவர்கள் செய்த சொற்பொழிவு. அந்நாளில் விஜயநகரத்து அரசருடைய பிரதிநிதியாகிய விருபாக்ஷிராயர் என்ற ஒருவர் அரசு செலுத்தி வந்தார். இங்கு நான்கு வீரசைவமடங்கள் உள்ளன. இவ்வூரில் தான், இரத்தினவேலு ஐயர் மூலமாக உ.வே.சா. வுக்குத் தொல்காப்பியம் பொருளதிகாரம் முழுவதுமுள்ள ஏடு கிடைத்தது.

4. திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளியில் அகில இந்திய வானொலி நிலையத்தில் திறப்புவிழாவன்று 21.5.39 இல் படிக்கப் பெற்றது.

"அகில இந்திய வானொலி நிலையம் பல தொண்டுகளை ஆற்றி வருகிறது". ஓர் உயிருள்ள ரேடியோவாக இங்குப் பணியாற்றியவர் திரிசிரபுரம்

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. அவர்களுடைய கவிமயமான உரைகளும், மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லும் முகமாக வந்த உரைகளும் அக்காலத்தில் தமிழுலகை நிரப்பி நின்றன. இந்த ஊரின் அருகில்தான் உறையூர் இருக்கிறது. கரிகாலன் காலத்தில் உறையூர் பெரிய நகரமாக விரிவுபெற அமைக்கப் பெற்றது.

தமிழ்நாட்டின் மத்தியில் திருச்சிராப்பள்ளி இருக்கின்றது. இந்த நகரத்தில் உள்ள குன்றில் 104 செய்யுட்கள் கல்வெட்டில் எழுதப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி சிவன் தலம். இதற்கு அருகில் ஸ்ரீரங்கம் இருக்கின்றது. இந்த வானொலி நிலையம் தமிழ்நாட்டினர்க்குத் தெய்வ நம்பிக்கையையும் உலகியலறிவையும், தமிழன்பையும், கலைச்சுவையையும் உண்டாக்கும் நல்லுரைகளைப் பரப்பி, நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று உ.வே.சா. வாழ்த்தினார்.

## 2. இசை பற்றிய சொற்பொழிவு

### சங்கீதப் பயிற்சி

இச் சொற்பொழிவு 1937 ஜனவரி முதல் தேதி சென்னை சங்கீதக் கழகத்தின் பரிசளிப்பு விழாவில் தலைமை வகித்தபோது ஆற்றியது.

"சங்கீதத்தை இளமையிலே கற்றுக்கொண்டு சாதகம் பண்ண வேண்டும். சங்கீதம் குழந்தைகளுடைய நிர்மலமான மனத்தை வசீகரிக்கின்றது. ஆனாய நாயனாரும், கண்ணபிரானும் பசுக்களைச் சங்கீதத்தால் வசப்படுத்தினார்கள். அழகர் கலம்பகத்தில் கண்ணன் வேய்ங்குழலூதிய சிறப்பைக் கவிஞர் வருணித்துள்ளார். வண்டிக் காளைகள் வண்டிக்காரர்கள் பாடும் தெம்மாங்கு ராகத்தில் ஈடுபட்டு எவ்வளவு பாரமாக இருந்தாலும் இழுத்துச் செல்கின்றன. சங்கீதப் பயிற்சிக்கு ஆகார நியமம் அவசியம். மகா வைத்யநாதையர் மிகவும் பயிற்சியும், ஒழுக்கமும், உணவுக் கட்டுப்பாடும் மேற்கொண்டு சங்கீதத்துக்குத் தொண்டு செய்தார்.

### சங்கீத மருந்து

சங்கீதத்தால் மனவருத்தமும் நோய் வருத்தமும் போய்விடும். பண்டைய காலத்தில் போர்க்களத்தில் புண்பட்டு வீழ்ந்த வீரர்களை அவர்களுடைய மனைவியர் இனிய பாடலைப் பாடி வீரர்கள் துயரை மாற்றுவார்கள்.

### சிவபெருமானே இசைக் கலைஞர்

சிவபெருமான் சங்கீதத்துக்கு மூலமான சாமகானத்தை எப்பொழுதும் செய்து கொண்டிருக்கிறார். கம்பளர், அசுவதரர் என்ற இரண்டு கந்தவர்களை

அவர் இரண்டு தோடுகளாகத் தம் திருச்செவியில் அணிந்து கொண்டு எப்பொழுதும் அவர்களுடைய கானத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். வீணை வாசித்துக்கொண்டே இருப்பவர் வீணா தக்ஷிணாமூர்த்தி.

தமிழ்ப்பண்

"ஒவ்வொரு காலத்துக்கும் தனித்தனியே ராகம் இருப்பதைப்போல ஒவ்வொரு ரசத்துக்கும் தனித்தனி ராகம் உண்டு. இன்ன இன்ன வகையான பாட்டுக்களை இன்ன இன்ன ராகத்தில் பாட வேண்டும் என்ற நியதியும் உண்டு. வெண்பாவைச் சங்கராபரணத்தில் பாடவேண்டும். கலித்துறையைப் பைரவியில் பாட வேண்டும். அகவலை ஆரபியிற் பாட வேண்டும்'' என்றெல்லாம் இசை குறித்த அரிய தகவல்களைத் தம் தலைமை உரையில் உ.வே.சா. தந்துள்ளார்.

3. மகாகவி பாரதியார் பற்றியது

1936-இல் அகில இந்தியக் காங்கிரசின் பொன்விழாவில் சென்னைக் காங்கிரஸ் மண்டபத்தில் பாரதியாருடைய படம் திறக்கப்பட்டபோது ஆற்றிய சொற்பொழிவு 'சுப்பிரமணிய பாரதியார்'.

''சுப்பிரமணிய பாரதியார் எட்டயபுரத்தில் பிறந்தார். இவர் இளமையில் ஆங்கிலக் கல்வி கற்றார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் சேர்ந்து சில காலம் படித்தார்.

சிலகாலம் சேதுபதி பள்ளியில் பண்டிதராக இருந்தார். சுதேசமித்திரன் இதழாசிரியர் குழுவில் பணியாற்றினார். சென்னையில் பாரதியார் இருந்த காலத்தில், உ.வே.சா. பலமுறை பழகியிருக்கிறார். கிருஷ்ணசாமி ஐயர், என்பார் கேட்டுக்கொண்டதற்கிணங்கத் தேசத்தின் பெருமையை வெளிப்படுத்திப் பாடினார். பாரதியார் தேசியப் பாடல்களைப் பாடியதோடு பிற துறைகளிலும் பாடியிருக்கிறார். பாரதியாருடைய கவிதைகள் க்ஷீரபாகத்தைச் சார்ந்தவை . சிலவற்றைத் திராக்ஷா பாகமாகக் கொள்ளலாம்.

இவருடைய வசனமும் எளிய நடையுடையது. கடல் கடந்த தேசங்களிலும் இவருடைய பாடல்கள் பரவியுள்ளன. 'மணவைமன் கூத்தன் வகுத்த தவி, தளைபட்ட காலுடனே கடலேழையும் தாண்டியதே', என்று ஒரு புலவருடைய, கவியைப் பற்றி ஒரு புலவர் பாடியுள்ளார். இராமபிரானின் கவியாகிய அனுமன் ஒரு கடலைத் தாண்டினார்; கூத்தன் கவியோ தளையோடு கூடிய காலோடு ஏழுகடலைத் தாண்டியது, என்கிறார். தளை என்பதற்கு விலங்கென்றும், கவிதைக்குரிய உறுப்புகளுள் ஒன்றென்றும் பொருள். பாரதியாருடைய கவிதைகளும், இந்தப் பாட்டுக்கு இலக்கியமாகத் திகழ்பவை'' என்று பாரதியார் சிறப்புகளை உ.வே.சா. செப்பியுள்ளார்.

4. எது தமிழ்?

தமிழ்மொழி பற்றிய பெருமைகளைத் தம் சொற்பொழிவில் வருணித்துச் சொல்கிறார். 'எது தமிழ்?' என்ற தலைப்பில் அமைந்த இச்சிற்றுரை திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலி நிலையத்தில் 29.9.41இல் நடைபெற்றது.

சங்கீதத்தின் பலவிதமான அமைப்புகளுக்கும் ஆதார பீடமாகச் சுருதி இருப்பது போலவே, ஒவ்வொரு மொழிக்கும் அந்தந்த மொழிக்குரிய தனிமரபு ஒன்று இருக்கிறது.

ஒரு முட்டாளைப் பார்த்து, 'மரமே, குட்டிச்சுவரே,' என்று வையலாம். இங்கிலீஷில், 'கூஸ்' என்று வைகிறார்கள். தமிழில் அதை மொழிபெயர்த்து, 'வாத்தே,' என்றால் பொருத்தமாக அமையாது.

பிரான்சு தேசத்தில் ஜூலியன் வின்ஸோன் என்ற ஓர் அறிஞர் இருந்தார். அவருக்கு உ.வே.சா. தாம் பதிப்பித்த தமிழ் நூல்களை அனுப்பியிருந்தார். அதைப் படித்த அவர், ஒரு கடிதம் எழுதினார்.

> "அன்புள்ள ஐயாவே,
>
> நீரனுப்பிய 2 புத்தங்களும் எழுதின கார்டும் என்கிட்ட சேர்ந்தன. ஆதலால் மிகவும் சந்தோஷம் பெற்றிருக்கிறேன். நீர் பெரிய வேலைக்காரன் என்றும், மகாகனம் பொருந்திய வித்துவானாய் இருக்க வேணுமென்றும் நினைத்து வருகிறேன்."…..

தமிழ் மரபு அறியாமல் இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது. பெரிய வேலைக்காரன் என்பதைச், "செயற்கரிய செய்யும் பெரியோன்" என்று சொன்னால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். தமிழ் வாக்கிய அமைப்பை அறிந்து மொழிபெயர்ப்பில் கையாள வேண்டும்.

ஓர் ஏழை வேலைக்காரனைப் பார்த்துச் 'சோறு தின்றாயா?' என்று கேட்கலாம். ஒரு கனவானைப் பார்த்து அப்படிக் கேட்கக்கூடாது. 'சாப்பிட்டீர்களா?' என்று கேட்க வேண்டும்.

ஒருசமயம் ஆங்கிலேய அதிகாரியின் சொற்களை மொழிபெயர்த்துச் சொன்ன துவிபாஷி, உ.வே.சா. கையில் உள்ள ஏட்டு சுவடிகளைச் சுட்டிக் காட்டி 'இந்தச் சருகுகளில் பிழை ஒன்றும் இராதா? என்று துரை கேட்கிறார்' என்றார். 'சருகு' என்று மொழிபெயர்த்தது தவறு. அதே சமயம் எள்ளல் குறிப்பில் 'சருகு' என்று ஓலைச்சுவடியைக் கவிஞன் தமிழ்க் கவிதையில் எழுதியிருப்பது இன்பம் தருகிறது.

'தூதன் மறவன் வீட்டுக்குப்போய் விஷயத்தைச் சொல்லி ஓலையை நீட்டுகிறான். அந்த மறவன் படிக்காதவன். அது திருமுக ஓலை என்பதும் அறிந்தானில்லை. 'என்னடா இது?' பனஞ் சருகை வாரிச் செதுக்கிக் கொண்டு வந்திருக்கிறாய்? என்று கோபத்தோடு கேட்கிறான்'. படித்தறிந்த ஒரு செல்வந்தர் பேச்சில் சருகு என்றால் அது தமிழாகாது.

தொல்காப்பியர், 'மொழிபெயர்ப்பை அதர்ப்பட யாத்தல்' என்று இயம்புவார். இங்கு அதர் என்பது வழி அல்லது மரபு. "தமிழின் போக்கிலே மொழிபெயர்ப்பு அமையவேண்டும்" என்று தமிழ்மொழியின் தனிப்பட்ட மரபை அறிந்து மொழிபெயர்த்தலின் தேவையை உ.வே.சா. தம்முரையில் குறிப்பிட்டுள்ளார்.

5. சைவமும் தமிழும்

17.9.1936 இல் புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியில் 'சைவமும் தமிழும்' குறித்து உ.வே.சா. பேசியுள்ளார்.

சிவம் என்பது மங்களம் எனப்பொருள்படும். வேதத்தில் யஜுர் வேதம் ஏழு காண்டங்களை உடையது. அதில் நான்காவது காண்டம் நடு ஸம்ஹிதை, 'நம சிவாய' என்னும் மகா மந்திரத்தைப் பேசுகிறது. திருவாசகம் 'நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க' என்று தொடங்குகிறது.

சைவத்துக்கும் தமிழுக்கும் மிகுதியான தொடர்பு உண்டு. சிவபெருமானின் திருமணத்தின்போது, கூட்டத்தின் பாரத்தால் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது, அகத்தியரைச் சிவபெருமான் அழைத்துத் தென்னாட்டிற்குச் சென்று பொதிகை மலையில் இருக்கும்படிப் பணித்தார். தமிழறிவும் நல்கினார். கம்பராமாயணத்தில், இராமன் சீதையைத் தேடிச் செல்லும் வீரர்களை வாழ்த்தி அனுப்பும்போது, பொதிகை மலையில் அகத்தியர் தமிழ்ச் சங்கத்தைக் கூட்டி நடத்தி வருகிறார். அங்குப் போனால் அதில் ஈடுபட்டுக் காரியத்தை மறந்துவிடுவீர்கள். ஆகையால், அம்மலையை விரைவாகக் கடந்து செல்லுங்கள்! என்று சொல்லுகிறார்.

சிவபெருமான் தமிழோடு தொடர்புகொண்டவர். மதுரையில் பாண்டிய மன்னன், இடைக்காடர் என்னும் புலவரை மதிக்கவில்லை. மனம் நொந்த புலவன் திருவாலவாய் அண்ணலின் திருக்கோயில் அடைந்து, 'தமிழறியும் பெருமானே பாண்டியன் என் பாட்டுக்குப் பரிசு வழங்கவில்லை. அஃறிணையைப்போல இருந்தான். உன் பெருமை எங்கே போயிற்று?' என்று புலம்பினார். மறுநாள் கோயிலுக்குள் உள்ள சிவனைக் காணவில்லை. அவன் கனவில் சென்று 'இடைக்காடரைப் புறக்கணித்ததால், நானும் கோயிலை விட்டுப் போனேன்,' என்றார்.

திருவிளையாடற் புராணத்தில் தருமிக்குப் பொற்கிழி அளித்தது என்ற திருவிளையாடல் ஒன்று உண்டு. நாயன்மார்கள் தமிழ், சைவம் இரண்டையும் இருகண்களாகக் கருதினர். திருநாவுக்கரசருக்காகச் சிவபெருமான் கோவையை எழுதிவைத்தார். இறைவன் எழுதிய இலக்கண நூல், இறையனார் அகப்பொருள். சிவபெருமான் திரிபுரத்தை எரித்தபோது, திருமால் அம்பாக இருந்தார்.

'தமிழுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு அளவிடற்கரியது' என்பதைக் காரணம் காட்டி உ.வே.சா. விளக்கியுள்ளார்.

6. மகளிர் குறித்த பேச்சு

புதுக்கோட்டை ஸமஸ்தானம் கொப்பனாம்பட்டி கலைமகள் திருக்கோயில் திறப்பு விழாவில் தலைமையேற்றபோது உ.வே.சா. பேசியது: 'மகளிர் கல்வியும் கலைமகள் பெருமையும்' என்ற தலைப்பில் பேசினார்.

"மகளிர்க்குக் கல்வி இன்றியமையாதது. மாதர்களின் கற்பு நிலையைப் பண்டைய இலக்கியங்கள் பெரிதும் உயர்வாகக் கூறியுள்ளன. 'கற்பு' என்ற சொல், கல்வியோடு தொடர்புடையது. இரண்டு சொற்களுக்கும் 'கல்' என்பதே பகுதியாகும். மகளிர் தமக்கெனச் சிறப்பாக வகுக்கப்பெற்ற சில ஒழுக்கங்களைக் கற்றுக்கொள்வது இன்றியமையாதது. கற்பித்தல் என்பது மணஞ்செய்து கொடுத்தலைக் குறிக்கச் சென்னையில் வழங்குகிறது.

'கல்வியே கற்புடைப் பெண்டிர்'

என்று குமரகுருபரர் கல்வியைக் கற்புடைய மகளாக உருவகம் செய்கிறார்.

தமிழ்நாட்டில் கல்வித்துறையில் இருபாலரும் தலை சிறந்து விளங்கினர். மனைக்குத் தலைவியாக இருந்த பெண், தன் தலைவன் ஈட்டிய பொருளை வரவுக்கேற்பச் செலவு செய்து வந்தாள். அவளால் மனை நலம் நிரம்பியது.

பல வருஷங்களாகியும் தமக்கு நரையில்லாததன் காரணத்தைக் கூற வந்த புலவர் ஒருவர், பல காரணங்களைக் கூறி அவற்றுள் ஒன்றாக மாட்சிமைப்பட்ட அவர் மனைவி அறிவு மிக்கவளாக இருந்ததும் கருதத்தக்கது என்கிறார்.

செல்வத்தோடு கல்வியையும் பெறுவதனால் மகளிர் சிறப்புறுவர் என்பது கம்பர் கருத்து. சங்ககாலத்தில் பல பெண்பால் புலவர்கள் வாழ்ந்து வந்தனர்.

இப்பொழுதுள்ள கல்விமுறை நம்நாட்டு நாகரிகத்துக்குத் தக்கபடி அமையவில்லை. நாட்டுமுறைக்கும் பெண்தன்மைக்கும் ஏற்ற வண்ணம் அமையும் கல்வியே மகளிர்க்கு மிகவும் நன்மை பயப்பதாகும்.

கம்பர் சரசுவதி அந்தாதி பாடியுள்ளார். குமரகுருபரர் சகலகலாவல்லி மாலை இயற்றியுள்ளார். சீவகசிந்தாமணியில் இடம்பெறும் சிந்தாதேவி என்பவள் கலைமகளே. திருத்தக்கதேவர், நாமகள் இலம்பகத்தில் கலைமகளைச் சிறப்பித்துள்ளார்.

சரஸ்வதி, பாரதி என்றும் பெயர்கள் ஆடவர்களுடைய இயற்பெயரோடு சேர்ந்து வழங்கின்றன என்றெல்லாம் மகளிர்கல்வி, கற்புநிலை, மகளிர்மாண்பு குறித்த கருத்துகளை உ.வே.சா. வழங்கியுள்ளார்.

## சொற்பொழிவுகளில் புலப்பாட்டுநெறி

உ.வே.சா. வின் பேச்சு, மிக எளிமையாக இருக்கும். இவர் கையாளும் எளிய தொடர்கள், பழஞ்சொற்கள், பிறமொழிச் சொற்கள், உவமைகள், காரணகாரிய விளக்கம் ஆகியன இவர் சொற்கோப்புக் கலையில் அடங்கும். நிகழ்ச்சிகள் சங்கிலித் தொடர்போல அமையும். விவரிப்பு நடையும், உணர்ச்சிப் போக்கும், உரையாடல் போக்கும் கலந்த நாடக நடையும் உ.வே.சா.விடம் உண்டு. கருத்துகளைச் சிறிய சிறிய வாக்கியங்களில் அமைப்பார். வடமொழிக் கலப்பு உண்டு. வடமொழி எழுத்துகளை அப்படியே கையாள்வார். இது அவர் காலச் சூழலைக் காட்டும்.

## செவிவழிச் செய்தியை எடுத்துக்காட்டல்

உ.வே.சா. தம் பேச்சின் இடையே தாம் கேள்வியுற்ற நிகழ்ச்சிகளைச் சேர்த்துச் சுவைபடப் பேசுவதில் வல்லவர்.

"அக்காலத்தில் இருந்த ராமபத்ர மூப்பனார் என்பவரிடத்தில் தமக்குப் பணம் கடனாக வேண்டுமென்று சொல்லி அதற்கு ஈடாக ஓர் ஆபரணத்தைக் காட்டும்படிச் சொல்லியபோது, 'சங்கராபரண ராகத்தைத் தான் அடகுவைக்கிறேன். இந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்கும்வரையில் நான் சங்கராபரணம் பாட மாட்டேன்' என்று கூறிப் பணம் வாங்கிக்கொண்டார்.

சில தினங்களுக்குப் பின் பலர் கூடிய மகாசபை ஒன்றில் 'சங்கராபரண ராகம் பாடவேண்டும்' என்று பலர் கேட்டுக்கொண்டனர். அவர் தாம் அதனை அடகு வைத்திருப்பதாகச் சொன்னார். பெரிய செல்வர் அப்புராயர், பொருளுதவி செய்து அந்தக் கடனிலிருந்து அவரை மீட்டுச் சங்கராபரண ராகத்தைப் பாடச் சொல்லிக் கேட்டு ஆனந்தமடைந்தார்"(ப.24) என்று தாம் கேட்ட செய்தியை இடையே சேர்த்துக் கொண்டார்.

உறையூரினைப் பற்றிச் சொல்ல வரும்போது, உறையூர் உருவான செவிவழிக் கதையையும் உ.வே.சா. விளக்குகிறார்.

"உறையூருக்கு அருகில் வருகையில் ஒரு கோழி யானையை எதிர்த்துப் பொருததாம். அதைப் பார்த்த கரிகாலன் இந்த இடமே நமக்கு ஏற்ற ராஜதானி, என்று கருதி அங்கே நகரத்தை உண்டாக்கினான்" (ப.158) என்று தாம் கேள்வியுற்ற செய்தியை இணைத்துக்கொள்கிறார் உ.வே.சா.

**மேற்கோள் காட்டல்**

கும்பகோணத்தின் சிறப்பைக் கூறும்போது, திருத்தங்கி என்ற செல்வனும், மருத்தன் என்ற கொடையாளியும் வாழ்ந்து வந்தனர் என்று கூறி அவர்களைப் பற்றி ஔவையார் பாடிய தனிப்பாடல் ஒன்றை உ.வே.சா. மேற்கோள் காட்டுகிறார்.

'சுப்பிரமணிய பாரதியார்' பற்றிய பேச்சில், அகத்தியர்க்குரிய சங்கம் பற்றிக் கம்பர் கூறியுள்ளதைச் சான்று காட்டியுள்ளார்.

தென்றமிழ் நாட்டகன் பொதியிற் திருமுனிவன்
தமிழ்ச்சங்கம் சேர்கிற் பீரேல்
என்று மவன்உறை விடமாம்

என்ற பாடல் வரியைக் கூறுகிறார்.

'சங்கீதப் பயிற்சி,' என்ற பேச்சில் அழகர் கலம்பகத்துப் பாடல் ஒன்றை மேற்கோள்காட்டுகிறார்.

தீண்டிய மடற்பனையின் சருகை வாரிச்
சிற்றிரும் பாற் சுற்றிவார் செருக்கிக் கூட்டி
தீண்டதும் சுருண்டதுமா வரைந்து சுற்றி
நிருபமெனக் கொடுத்தெதிரே நிற்கும் தூதா,

என்ற தமிழ் இலக்கியத் தூது பாடலொன்றைத் 'எது தமிழ்?' என்ற தலைப்பில் ஆற்றிய பேச்சில் மேற்கோள் காட்டியுள்ளார். மகளிர் சிறப்புக் குறித்த பேச்சில்

உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று

என்று தொல்காப்பியர் நூற்பாவினை எடுத்துக்காட்டியுள்ளார்.

ஆடிக்கறக்கும் மாட்டை ஆடிக் கறக்க வேண்டும்
பாடிக்கறக்கும் பாட்டைப் பாடிக் கறக்க வேண்டும் (ப.139)

என்ற பழமொழியை ஓரிடத்தில் சான்று காட்டியுள்ளார்.

### சொல்லுக்கு விளக்கம்

"பாட்டுகளின் பாகம் ஐந்து வகைப்படும். அவை நாளிகேர பாகம், இக்ஷாபாகம், கதலிபாகம், திராக்ஷா பாகம், க்ஷீரா பாகம் என்பனவாம். நாளிகேர பாகம் என்பது தேங்காயைப் போன்றது. தேங்காயில் முதலில் மட்டையை உரிக்க வேண்டும். பிறகு ஓட்டை நீக்க வேண்டும். அதன் பிறகு துருவிப் பிழிந்து வெல்லம் சேர்த்துச் சாப்பிட வேண்டும். இந்த வகையிலுள்ள பாட்டுக்கள் சில உண்டு. அதைப் பாடுபவர்கள் தம்முடன் அகராதியையும் எடுத்துக்கொண்டு போக வேண்டும். சில சமங்களில் அவர்களுக்கே தாங்கள் செய்த பாட்டுகளுக்கு அர்த்தம் விளங்காமல் போய்விடும்.

இக்ஷாபாகம் என்பது கரும்பைப் போன்றது. கரும்பைக் கஷ்டப்பட்டுப் பிழிந்து ரஸத்தை உண்ண வேண்டும். கதலி பாகம் வாழைப் பழத்தைத் தோலுரித்து விழுங்குவதுபோலச் சிறிது சிரமப்பட்டால் இச்சுவையை வெளிப்படுத்துவது. திராக்ஷாபாகம் முந்திரிப் பழத்தைப்போல எளிதில் விளங்குவது. க்ஷீரபாகம் அதனிலும் எளிதில் விளங்குவது. குழந்தை முதல் யாவரும் உண்பதற்குரியதாகவும், இனிமை தருவதாகவும், உடலுக்கும் அறிவுக்கும் பயன் தருவதாகவும் இருக்கும் பாலைப் போல இருப்பது'' (ப.49) என்று மிக விரிவாகக் கவிதைகளின் வகைகளை எடுத்துரைக்கிறார் உ.வே.சா.

### உவமைகள் வழி விளக்கம்

இனிய மெல்லிய தம்புரு சுருதியை வைத்துக்கொண்டு மீட்டுகிறார். இந்த இனிமையான சந்தர்ப்பத்தில் தம்புராவின் தந்தி அறுந்து விடுகிறது. சுருதி நிற்கிறது.

வேறொரு சந்தர்ப்பத்தில், தம்முடைய நண்பர் ஒருவர் வீட்டுக்குப் போயிருந்தபோது, அவர் தம்முடைய பெண்ணைப் பாடச் சொல்கிறார். அபஸ்வரமில்லாமல் பாடுகிறாள். 'சுருதி சுத்தமாக இருக்கிறது. இது போதும் குடித்தனம் செய்யும் பெண்களுக்கு' என்று சொல்லி நாம் பாராட்டுகிறோம்.

"சங்கீதத்தின் பலவிதமான அமைப்புகளுக்கும் ஆதார பீடமாகச் சுருதி இருப்பது போலவே, ஒவ்வொரு மொழிக்கும் அந்த அந்த மொழிக்குரிய தனிமரபு ஒன்று இருக்கிறது'' (ப.93) என்று உவமையை விவரித்துச் சொல்ல வந்த கருத்தை உ.வே.சா. உணர்த்துகிறார்.

### பிறமொழிச் சொற்கள்

ஐதிஹ்யம், பாஷை, ஹைஸ்கூல், காலேஜ், பூர்த்தி, ஜனம், வினிகை, சம்பாஷணை, விஷயம், பிக்ஷை, ஸ்திரி, என்பன போன்ற பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

லக்ஷ்மி, ஸ்ரீ வைஷ்ணவர், க்ஷீரபாகம், ஸ்ரீராமன் என்றெல்லாம் வடமொழி எழுத்துக்களை அப்படியே உச்சரித்தும் எழுதியும் வந்துள்ளார். "வசனம் எளிய நடையுடையது. வருத்தமின்றிப் பொருளைப் புலப்படுத்தும் நடைதான் சிறந்தது. பாரதியாருடைய வசனம் சிறு வாக்கியங்களால் அமைந்தது. அர்த்தபுஷ்டியுடையது" என்று பாரதியார் நடைகுறித்து உ.வே.சா. கூறியுள்ளார். அக்கூற்று உ.வே.சா. நடைக்கும் பொருந்தும்.

## II. செவிவழிச் செய்திகள் குறித்த கட்டுரைகள்

உ.வே.சா. பல்வேறு ஊர்களுக்குக் களப்பணி மேற்கொண்டவர். படித்தவர் முதல் பாமரர் வரை எல்லாத் தரப்பு மக்களுடனும் அன்பாக அவர்களுக்கும் ஏற்ற வண்ணம் பழகி, பல கருத்துகளை அறிந்து கொண்டவர். அவர், தன்னை இன்னாரென்று வெளிப்படுத்திக்கொள்ளாமல், போகும் ஊர்களில் கல்விச் செருக்கு இன்றி, அங்குக் கிடைக்கும் எளிய உணவை உண்டு, வசதி வாய்ப்புகள் இல்லாத இடங்களில் தங்கிக்கொண்டு, எந்தவித வருத்தமும் இன்றித் தகவல்களைத் தேடி அலைந்தவர். தீண்டத்தகாத இனத்தைச் சேர்ந்தவர்களோடு அந்நாளில் உயர்குலத்தார் கலந்து பழக மாட்டார்கள். உ.வே.சா. அத்தகு இனத்துப் பணியாள் ஒருவரிடம் இருந்து, 'கள்ளா வா, புலியைக் குத்து,' என்ற சொற்றொடர்களுக்கு விளக்கம் பெற்றார். இடையன் ஒருவரிடமிருந்து சீவகசிந்தாமணி தொடர்பான உவமைக்கு விளக்கம் பெற்றார். வயதான மூதாட்டியோடு பேச்சுக்கொடுத்துப் பொறுமையாக அவள் சொன்னதை எல்லாம் காதுகொடுத்துக் கேட்டு, 'அன்னம் படைத்த வயல்' என்பதற்குரிய செய்திகளை அறிந்தார்.

தாம் அறிந்த பழைய வரலாற்றுச் செய்திகளையும், செவிவழிச் செய்திகளையும் விடாது குறித்துக்கொண்டு அவற்றை விரித்துச் சுவையான கட்டுரைகள் ஆக்கி, பல்வேறு இதழ்களுக்கு அனுப்பினார்.

செவிவழிச் செய்தி குறித்த ஏழு கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அவை அம்பலப்புளி, குதிரையை அடக்கிய குப்பச்சி, திருமலைராயன் பட்டினம், இளவரசன் துறவு, பாவலர் மானங்காத்த பாவை, புலவர் தைரியம், கள்ளனும் புலியும் ஆகியன.

### அம்பலப் புளி

இக்கட்டுரை 1940இல் ஆனந்த விகடன் தீபாவளி மலரில் வெளிவந்தது. சிலகாலங்களில் அயல்நாட்டு மன்னரது படையெடுப்பால் இடையூறுகள் நேர்வதும் உண்டு. ஒரு சமயம் சிதம்பரம் நடராசர் கோயிலில் அந்நியர் படையெடுப்புக்கு அஞ்சி, பொன்னாலாகிய நடராசர் திருமேனியைப் பாதுகாத்து வைக்கத் தீட்சிதர்கள் எண்ணினர். புளியந்தோப்புக்குச் சென்று,

அங்கே உள்ள ஒரு புளிய மரப் பொந்தில் அச்சிலையை வைத்துப் பொந்தை மூடிச் சென்றனர்.

ஆபத்து நீங்கிப் பல்லாண்டு கழித்துத் தீட்சிதர்கள் நடராசரைத் தேடிப் புளியந்தோப்பில் அலைந்தனர். அடையாளம் காண இயலாது தவித்தனர். அப்போது உழவர்கள் சிலர் தங்களுக்குள் பேசியபோது, 'அந்த அம்பலப் புளியடியிலே கொண்டுபோய் மாடுகளை விடு' என்றனர். அதைக் கேட்டு, 'அம்பலப்புளியா? அது என்ன மரம்?' என்று அவர்களிடம் தீட்சிதர்கள் உசாவினர். அவர்கள், அவர்களைத் தங்கள் எசமானிடம் கொண்டு விட்டனர். அவர், "நடராசர் திருமேனியைப் பல்லாண்டுகளுக்கு முன்பே கண்டு, அதை வெளிப்படுத்தாமல் பாதுகாத்து வந்தேன். அம்மரத்தில் தெய்வம் உறைகிறது என்று சொல்லி வழிபாட்டுக்கும் ஏற்பாடு செய்தேன்," என்று கூறி அம்மரத்தை அடையாளம் காட்டினார். நடராசர் மீண்டும் திருக்கோயில் கொண்டார்.

கதைபோலத் தாம் கேட்ட நிகழ்ச்சியை ஆர்வநிலை வளர்த்து உணர்ச்சிப் பொங்கக் கட்டுரையை அமைப்பதில் வல்லவர், உ.வே.சா.

பாத்திர உரையாடலை அமைத்துச் சுவைபடச் சொல்கிறார். "தம்பீ, இந்த மரத்துக்கு, 'அம்பலப்புளி,' என்று ஏன் பெயர் வந்தது?" என்று ஒரு தீக்ஷிதர் கேட்டார்.

"எனக்குத் தெரியாது சாமி. எங்கள் எசமான் அடிக்கடி இந்த மரத்திற்குப் பூசை போடச் செய்வார். அவர் வைத்த பேர் அது" என்று அவன் பதில் சொன்னான் (ப.9).

குதிரையை அடக்கிய குப்பிச்சி

குப்பிச்சி என்ற மல்யுத்த வீரன் ஒருவன் குதிரையை அடக்கிய வீரதீரச் செயலை உ.வே.சா. எழுதியுள்ளார்.

"குப்பிச்சி அரசாங்கத்து மல்வீரனோடு போர் செய்தான். அதில் வென்றான். அதன் பின்னர் அடங்காத குதிரையை அடக்கும்படி அவனை ஏவினர். குதிரையை அவனால் அடக்க இயலவில்லை. இறுதியில் குதிரை குளத்தில் மூழ்கியது. ஏற்கெனவே குப்பிச்சி சுண்ணாம்புக் கற்களை அதன் வயிற்றில் வைத்துக் கட்டியிருந்தான். சுண்ணாம்புக் கல் பொங்கிக் குதிரையின் வயிற்றில் பட்டுப் புண்ணானது. குப்பிச்சிக்கு அடங்கியது. மன்னன் குப்பிச்சியின் வீரத்தைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கினான்."

இக்கட்டுரை விளக்க நடையில் அமைந்துள்ளது. வினா நடையும் உணர்ச்சி நடையும் விரவிவர, பாத்திர உரையாடல் அமைத்து நாடகம் போலவும், கதைபோலவும் எடுத்துக் கூறுகிறார்.

'என்ன ஆச்சரியம்! குதிரை மேலே நகரவில்லை. அது கரையை நோக்கித் திரும்பத் தொடங்கியது' என்று உணர்ச்சி நடை அமைத்துள்ளார்.

'குதிரை காற்றாடி போலவும், சக்கரம் போலவும் சுழன்று சுழன்று அலைந்தது,' என்று உவமிக்கிறார்.

திருமலைராயன் பட்டினம்

ஐயரவர்கள் கும்பகோணத்தில் இருந்தபோது, ஏட்டுச் சுவடிகளைத் தொகுப்பதற்காக வெளியூர்களுக்குச் சென்று வருவதுண்டு. அவ்வாறு சென்றபோது, அங்கங்கே கண்டும் கேட்டும் அறிந்தவற்றைச் சிலகாலம் சுதேசமித்திரன் பத்திரிகையில் எழுத வைத்தனர். 19.5.1901 இல் சுதேசமித்திரனில் திருமலைராயன் பட்டினம் சென்ற அனுபவத்தை எழுதியுள்ளார்.

திருமலைராயன் பட்டினம் என்பது நாகபட்டினத்திற்கு அருகில் உள்ள ஓரூர். இதில் ஐந்து சிவாலயங்களும், ஐந்து விஷ்ணு ஆலயங்களும், வேறு ஆலயங்களும் உள்ளன.

இந்த நகரம் திருமலைராயன் என்னும் அரசன் ஆண்ட ஊர். காளமேகத்தின் வசை கவியால் மண்மாரி பெய்ய அழிந்து போயிற்று. இவ்வூரின் தென்பாகத்தில் போலகம் என்னும் பெயருள்ள ஊர் இருக்கிறது. அங்குள்ள ஆலயம் புகலீசுவரர் கோயில் என்றழைக்கப்படுகிறது.

இந்நகருக்கு அருகில் உள்ள கடல்துறையின் ஓரிடத்தில் பழங்காலத்தில் முத்து எடுத்தார்களாம். காளமேகம் அரசனிடம் வந்து முத்துக்கச்சு ஒன்றைப் பெறுவதற்கு யமகண்டம் பாடினார். சுற்றிலும் இருந்து பல கேள்விகளைக் கேட்க, அவர் சிறிதும் வருத்தமின்றி அவற்றை எல்லாம் ஒழுங்காகப் பாடி முடித்தார். பின்னும் அவர்கள் புறக்கணிக்கவே, 'கோளரிருக்குமூர்,' என்னும் வெண்பாவைப் பாடி, மண்மாரி பெய்வித்து அழியச் செய்தார்.

இந்நகருக்கு அருகில் நாகபட்டினம் அமைந்திருக்கிறது. இங்குச் சில ஏடுகள் கிடைக்கப் பெற்றன.

திருமலைராயன் பட்டினத்தில் கண்ட செய்தியையும், ஏடு தேடிய அனுபவத்தையும், செவிவழிக் கேட்ட கதையையும் உ.வே.சா. எழுதியுள்ளார்.

இளவரசர் துறவு

"சேர அரசர்களுள் ஒருவனாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வஞ்சி மாநகரில் சிங்காசனத்தில் வீற்றிருந்தான். தன் மூத்த மகன் செங்குட்டுவனுக்கு இளவரசுப் பட்டம் ஈந்து தனக்குப் பின் பட்டத்துக்கு ஏற்றவனாகப் பயிற்சி கொடுத்தான். செங்குட்டுவனுக்கு இளையவனான அரசகுமாரன் இளங்கோ இருந்தான். ஒரு நாள் சோதிடன் ஒருவன் வந்தான். 'மன்னர் பிரானுடைய அங்க அடையாளங்கள் இறைவன் திருவருளைப் பெறுவதற்கு நெடுங்காலம் காத்திருக்க வேண்டாம் என்பதைத் தெரிவிக்கின்றன' என்று அவன் கூறினான். பின்னர் இளையகுமாரனைப் பார்த்து, அரசர்க்கரசே இவ்விளங்குமரன் அந்தமில்லாத இன்பத்தை உடைய அரசை ஆளும் உரிமை பெறுவான் என்றும் கூறினான் எல்லோரும் நிலை கலங்கினர்.

இளையகுமரன் எழுந்து, 'இதோ இந்த நிமிஷத்திலே எல்லோர் கவலையையும் போக்கி விடுகிறேன். ஆம். நான் சபதம் செய்கிறேன். தெய்வத்தின்மேல் ஆணையாக நான் இன்றே இப்பொழுதே துறவு பூண்கிறேன்' என்றான். இளங்கோவாக இருந்த அப்பெருமான் இளங்கோ அடிகள் ஆனார்".

இந்நிகழ்ச்சி செவிவழிச் செய்தியேயாகும். இதை விவரிப்பு நடையில் உ.வே.சா. எழுதியுள்ளார். 'ஒருநாள் பொன்னும் மணியும் இழைத்த திருவோலக்க மண்டபத்தில் சிங்கம் சுமந்த பொங்கணை மீமிசை, இருபக்கமும் மகளிர் கவரி வீச அரசன் வீற்றிருந்தபோது, அவ்வரச சபைக்கு ஒரு சோதிடன் வந்தான்' (ப.62) என்று காட்சியைச் செந்தமிழால் வர்ணிக்கிறார்.

வினாவிடை

"இந்த விஷயம் உண்மையாகுமா? அரசனுடைய மூத்த குமரன் அல்லவா அரசாட்சிக்கு உரியவன்? இளைய குமாரனுக்கு எப்படி அவ்வரசுரிமை கிடைக்கும்? ஒருகால் செங்குட்டுவனுக்கு ஆயுட்பலம் போதாதோ?" என்றெல்லாம் சபையிலிருந்த சான்றோர்கள் எண்ணலாயினர். (ப.64) என்று அவையோர் ஐயுற்றுக் கவலையுற்று இருந்ததை வினா நடையில் விவரிக்கிறார்.

வீறுநடை

இக்கட்டுரை முழுவதுமே செம்மாந்த செந்தமிழ் நடையே நிரம்பியிருக்கிறது. "அப்பெருமலை மிசையே தனது விற்கொடியை ஏற்றிக்

குமரி முதல் இமயம் வரையில் தன் பெயர் வழங்கச் செய்ததுமாகிய பெருஞ் செயல்களை வந்தியர் வாழ்த்திக் கொண்டிருந்தனர்" (ப.60) என அழகிய தமிழ் நடையை அமைத்துள்ளார்.

பிறசொற்கள்

யுவராஜன், தர்மசங்கடம், விஷயம், பூரிப்பு, பக்ஷபாதம், சாஸ்திரம் என்பன போன்ற வடசொற்கள் இடைஇடையே விரவி வந்துள்ளன.

பாவலர் மானம் காத்த பாவை

இக்கட்டுரை ஆனந்தவிகடன் தீபாவளி மலரில் 1941இல் வெளிவந்தது. சோழ நாட்டை இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆண்டு வந்த காலத்தில் ஒட்டக்கூத்தர் அவன் குருவாக விளங்கினார்.

அவன் ஆட்சிக்குட்பட்ட நெற்குன்றத்தில் நெற்குன்றவாண முதலியார் என்னும் வேளாளச் செல்வர் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஒரு சமயம் பஞ்சம் நாட்டில் உண்டாயிற்று. அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரிப் பணத்தைச் செலுத்த இயலவில்லை. புகலூர்ச் சிவபெருமான்மீது அன்பு பூண்டவர். ஒரு சமயம் புகலூர்ச் சிவன் கோயிலில் அவர் இருந்தபோது வரி கொடுக்காததால், அவரைக் கைது செய்ய அரண்மனைக் காவலர்கள் அங்கு வந்தனர். மனம் வாடிய முதலியார் இறைவனிடம் தம் துயரை வெளிப்படுத்திப் பாடினார்.

உரைசெய் மறைக்கும் தலைதெரியும்
யாவொரு கொம்பை யென்றே
பரசும வர்க்கும் பெருநிழ
லாக்கும் பழன மெல்லாம்
நீரை செய்க டற்றுரைச்
சங்க முலாவுந் திருப்புகலூர்
அரச னிடத்து மகிழ்வஞ்சி
யீன்றவோ ரத்தி நின்றே.

"வயல்களிலெல்லாம் அலையைச் செய்யும் கடல்துறையிலுள்ள சங்குகள் உலவும் திருப்புகலூர் இறைவனது இடப்பாகத்தில் எழுந்தருளிய உமாதேவியார் ஈன்ற யானை முகப்பிரானாகிய விநாயகரை ஒற்றைக் கொம்பன் என்று துதி செய்பவருக்கு மிகுந்த அருளைச் செய்வார்" என்ற பொருளில் பாடினார். இப்பாடலில் அரசு, வஞ்சி, அத்தி என்னும் மூன்று மரப் பெயர்கள் வந்துள்ளன. இந்தப் பாடலைக் கேட்டு அக்கோயிலில் இருந்த ருத்திர கணிகை ஒருத்தி, 'இந்தப் பாட்டை ஓர் அந்தாதிக்குக் காப்பாக்கலாமே,' என்று மெல்லச் சொன்னாள்.

இக்கட்டுரை மிகவும் சுவையாக விளக்க நடையால் எழுதப் பட்டுள்ளது. சுவையான உரையாடல் நாடகப் போக்கை உருவாக்குகிறது.

சோழர் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளைச் சோழ மன்னர்கள் மண்டலங்களாகப் பிரித்து நிர்வாகம் செய்து வந்தனர். உ.வே.சா. இது குறித்து நீண்ட விளக்கம் தருகிறார். 'தொண்டைமண்டலமும் சோழர்களுக்கு அடங்கியதாக இருந்தது. அதனால் அம்மண்டலத்துக்கு ஜயங்கொண்ட சோழ மண்டலம் என்ற பெயர் வழங்கி வந்தது. தொண்டை நாடு இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப் பெற்றிருந்தது. அவற்றுள்ளே 'புலியூர்க் கோட்டம்,' என்பது ஒன்று. சென்னையைச் சார்ந்த கோடம்பாக்கம் முதலிய ஊர்களை உள்ளடக்கியது அது. சேக்கிழார் இருந்த குன்றத்தூரென்பது அக்கோட்டத்தில் இருப்பதே' (ப.103) என்று விவரித்துச் செல்கிறார்.

திருப்புகலூர் அந்தாதியின் காப்புச் செய்யுளின் சிறப்பையும் இக்கட்டுரையில் உ.வே.சா. எழுதியுள்ளார்.

கள்ளனும் புலியும்

இக்கட்டுரை கலைமகளில் வெளிவந்தது. சீவகசிந்தாமணியைப் படித்து வரும்போது, அதில் வரும் ஓர் உவமைத் தொடருக்குப் பொருள் விளங்காமல் உ.வே.சா. குழம்பினார்.

சீவகனுடைய தந்தையைக் கொன்று நாட்டைக் கைப்பற்றிய கட்டியங்காரன் என்பவன் சீவகனை அரசன் மகன் என்று அறியாவிடினும் அவன் புகழ் பெருகி வருதலைக் கண்டு பொறாமையால் புழுங்கினான். சீவகன் காந்தருவதத்தையை யாழ் வாசித்துப் போட்டியில் வென்று அவளுக்கு மாலையிட்டான். கட்டியங்காரன் மனம் ஆற்றாது, வந்திருந்த அரசர்களிடம், 'உங்களுள் யார் இந்தச் சீவகனை வெல்கிறானோ', 'அவனே காந்தருவதத்தையை மணப்பதற்குரியவன்' என்றான். அது கேட்டு அவர்கள் சீவகனோடு மோதித் தோல்வியுற்றனர்.

கட்டியங்காரன் கூற்றாக அமைந்த சீவகசிந்தாமணிச் செய்யுளில் "சீவகன் தத்தையை யாழிலும் பாட்டிலும் வென்றான், நல்லன்" என்று மாந்தர் ஆர்ப்ப, அது பொறாதே கட்டியங்காரன், கள்வர்களால் புலியை வேறாகக் காணச் செய்ததுபோல, அரசர்களைத் தூண்டிவிட்டுத் தீய சொற்களைப் பேசினான்" என்ற கருத்துப்பட எழுதியுள்ளார், திருத்தக்க தேவர். இந்தப் பாட்டில் வரும், 'கள்ளராற் புலியை வேறு காணிய காவல் மன்னன்' என்ற தொடர், உ.வே.சாவு.க்குப் பொருள் காண்பதில் இடர் தந்தது.

அவர் வீட்டுக்கு அடுத்த வீட்டில் இருந்த கிழவர் கோபத்தோடு பேசிக்கொண்டிருந்தார். அவருக்கு வேண்டாதவராகிய ஒருவர் மற்றொருவரிடம் கிழவரைப் பற்றிக் குறைகூறி இருவருக்கும் சண்டை மூட்டி விட்டாராம். 'எப்படியாவது நாங்கள் முட்டி மோதிக்கொண்டு சாகட்டுமே என்பது அவன் அபிப்பராயம். நாங்கள் இரண்டு பேரும் அவனுக்கு வேண்டாதவர்களே. அதற்குத்தான், 'கள்ளா வா, புலியைக் குத்து,' என்கிறான். நானா ஏமாந்து போவேன்?'' என்று (ப.125) உரக்கப் பேசினார்.'

உ.வே.சா. அது கேட்டு, அவரைச் சந்தித்து, 'என்ன அது கள்ளன் புலி என்று சொல்கிறீர்களே ?' என்றார். ஒரு மனுஷ்யன் பண மூட்டையோடு ஒரு காட்டு வழியாகப் போய்க்கொண்டிருந்தான். அப்போது ஒரு திருடன் அவனைக் கண்டு துரத்தினான். எதிரில் ஒரு புலி உறுமிக்கொண்டு வந்தது. இந்த இரண்டு அபாயங்களிலிருந்தும் தப்புவதற்கு அந்த வழிப்போக்கன் ஒரு தந்திரம் பண்ணினான். திருடனைப் பார்த்து, ''அதோ பார் அந்தப் புலியைக் குத்திக் கொன்றுவிடு. நான் உனக்கே பணமுட்டையைத் தந்துவிடுகிறேன்,'' என்றான். திருடன் அப்படியே புலியை எதிர்த்தான். புலி அவனை அடித்துத் தின்று பசி தீர்ந்தது. வழிப்போக்கன் தப்பிப் பிழைத்து ஓடிப்போய்விட்டான். இந்த விஷயத்தைத்தான் 'கள்ளா வா! புலியைக் குத்து' என்ற பழமொழி உணர்த்துகிறது (ப.127) என்றார். உ.வே.சா. உற்ற மகிழ்வுக்கு எல்லையே இல்லை. 'கள்ளர்களாகிய அரசர்களால், புலியாகிய சீவகனை வெற்றி கொள்ளுதலைக் காணும் பொருட்டு' என்று விளக்கமாகப் பொருள் எழுதினார்.

> வெள்ளிலை வேற்க ணாளைச்
> சீவ கன்வினை வென்றான்
> ஒள்ளிய னென்று மாந்தர்
> உரைகடல் மெலிய வார்ப்பக்
> கள்ளரால் புலியை வேறு
> காணிய காவல் மன்னன்
> உள்ளகம் புழுங்கி மாதோ
> உரைத்தனன் மன்னர்க் கெல்லாம்
>
> (சீவகசிந்தாமணி 741)

என்பது அச்செய்யுள். உ.வே.சா. தற்செயலாக ஒரு முதியவர்பால் கேட்டறிந்த செய்தியைக் 'கள்ளனும் புலியும்' என்ற கட்டுரையில் சுவைபட எழுதியுள்ளார்.

உரையாசிரியர் விளக்கமும் சரியாக இல்லாதபோது, உ.வே.சா. சோர்ந்து போனார். 'நான் சென்றுகொண்டிருந்த ஆராய்ச்சிப் பாதையிலே அந்தக் கள்ளனையும் புலியையும் கண்டு அஞ்சி, என் அறிவுத் தேர் ஓடாமல் நின்றுவிட்டது' (123) என்று சோகத்தை மறைத்து நகைச்சுவையாக அதனை மாற்றி எழுதியுள்ளார்.

திருத்தக்க தேவரே அந்தக் கிழவராக வந்ததுபோலக் கொண்டாடினார் உ.வே.சா. 'நீங்கள் இன்று செய்த பெரிய உபகாரத்தை நான் என்றும் மறக்கமாட்டேன். இந்த வீட்டில் எப்போது வந்தாலும் நீங்கள் போஜனம் செய்யலாம், என்று சொல்லி விடை கொடுத்து அனுப்பினேன்,' (ப.128) என்று அவரிடம் நெகிழ்ந்து மனம் மகிழ்ந்து பேசினார். முழுவதும் விளக்க நடையாகத் தன்னுணர்வு வெளிப்பாடாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## III. பாட்டு விளக்கக்கட்டுரை

புலவர் தைரியம்

சங்க இலக்கியமான புறநானூற்றுச் செய்யுளுக்கு விளக்கமாக உ.வே.சா. புலவர் தைரியம், என்ற கட்டுரை எழுதியுள்ளார்.

பெருஞ்சித்திரனார் தகடூர் அதியமானைக் காண ஒரு சமயம் வந்திருந்தார். மன்னன் மந்திரச் சுற்றத்தாரோடு இருந்து அந்தரங்கமான ஆலோசனை செய்து கொண்டிருந்தார். அதிகாரி புலவரை வரவேற்றுக் காத்திருக்கக் கேட்டுக்கொண்டான். அதியமான், 'வேண்டியபடி உபசாரம் செய்து, மணியும் பொன்னும், வழங்கி அனுப்பிவிடு; பின் ஒரு முறை பார்த்துக் கொள்ளலாம்' என்று கூறிவிட்டான். அவ்வாறே அதிகாரியும் செய்தான். புலவர் ஏற்க மறுத்தார். கோபம்கொண்டு பாடல் பாடிவிட்டு, பரிசை ஏற்க மறுத்து, வந்த வழியே திரும்பிச் சென்றார். அப்பாடல்,

குன்றும் மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசல் கொண்டனென் செலற்கென
நின்ற என்னயந் தருளி யீதுகொள்
டீங்கனம் செல்க தானென என்னை
யாங்கறிந் தனனோ தாங்கரும் காவலன்
காணாதீத்த இப்பொருட்கு கியானோர்
வாணிகப் பரிசிலன் அல்லேன் பேணித்
தினையனைத் தாயினும் இனிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே

உ.வே.சா. தமிழாசிரியர். வகுப்பில் பாட்டுக்கேற்ற சூழலைத் தாமே கற்பித்து, ஆர்வநிலையை ஏற்படுத்தி இலகுவாக மாணவர் மனத்தில் கருத்துகளைப் பதியவைக்கும் உத்தியை அறிந்தவர். அவ்வாறே புறநானூற்றுப் பாடலுக்கு விளக்கமாகத் தாமே காட்சிகளை உருவாக்கி விளக்கி இக்கட்டுரையை எழுதியுள்ளார்.

## IV. அறிஞர்கள் பற்றிய கட்டுரைகள்

ராஜா கனபாடிகள், ஸர். பொன்னம்பல இராமநாததுரை, ஹரதத்தர் சிவபக்தி, நான்கேட்டபடி, பாபநாச முதலியார் முதலிய ஐந்து கட்டுரைகள், உ.வே.சா. மனம் கவர்ந்த கலைஞர்கள், அறிஞர்கள் குறித்த கருத்து விளக்கக் கட்டுரைகள் ஆகும்.

### ராஜா கனபாடிகள்

ராஜா கனபாடிகள், திருவிடைமருதூரில் இருந்த காலத்தில் ஆதீன வித்துவானாக விளங்கினார். ஆதீனகர்த்தராக இருந்தவர் மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர். ராஜா கனபாடிகள் வடமொழியில் தேர்ந்தவர். அவருடைய புகழ் எங்கும் பரவியது. ஒரு சமயம் தேரோட்டம் முடிந்த பிறகு, சுப்பிரமணிய தேசிகர் தேர்முட்டி மண்டபத்தில் வீற்றிருந்தார். எல்லோரும் தேசிகரைப் பாராட்டிப் புகழ்ந்தனர். ராஜா கனபாடிகள், "என்ன இருந்தாலும் ஒரு விஷயத்தில் இவர்களுக்கு முன்பு இருந்த பண்டார ஸந்நிதிகளுடைய பெருமை இவர்களுக்கு இல்லை" (ப.89) என்றார். எல்லோரும் திகைத்தனர். "இவர்களுக்கு முன் இருந்தவர் இவர்களைத் தேர்ந்து நியமித்தார்கள். இவர்களுக்கு அந்தமாதிரியான பெருமை வரவேண்டுமானால், இவர்களைப் போல ஒருவரைத் தேடி எடுக்க வேண்டும்" அது யாரால் சாத்தியம்? என்று விளக்கம் கொடுத்தார்.

ராஜா கனபாடிகள் வீட்டுக்குத் திருவாவடுதுறையில் நெல் அறுபது கலம் வந்தது. உடனே ராஜா கனபாடிகள் மடத்துக்கு வந்து 'இந்த வருஷம் பகுதான்ய வருஷம் (தான்யமழை) ஏற்பட்டது, இந்த வருஷத்தை இப்படி அழைப்பது பொருத்தமே,' என்றார். 'தான்ய வருஷத்தைக் காட்டிலும், உங்கள் சொல்மழை நம் உள்ளத்தைக் குளிர்விக்கிறது,' என்றார் தேசிகர்.

இக்கட்டுரை திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரின் கொடைத்தன்மையையும், ராஜா கனபாடிகள் புலமைத்திறனையயும் விளக்குகிறது.

இதில், 'பகுவ்ரீஹி' என்ற வடசொல்லுக்கு அன்மொழித்தொகை என்ற விளக்கத்தை உ.வே.சா. தந்துள்ளார்.

### ஸர். பொன்னம்பல இராமநாததுரை

சிதம்பரத்தில் பரம்பரையாகச் செல்வம் நிரம்பிய குடும்பத்தில் பிறந்த ஸர். பொன்னம்பல இராமநாததுரையும், அவருடைய சகோதரர் இருவரும் மும்மணிகளாகவே விளங்குவார். உ.வே.சா. சீவகசிந்தாமணியைப் பதிப்பித்து வெளியிடப் பொருளுதவி இராமநாததுரை புரிந்துள்ளார்.

இராமாநாததுரை அடிக்கடி உ.வே.சா.வுக்குக் கடிதம் எழுதுவது வழக்கம். இராமாநாததுரை சிதம்பரம் கோவிலைச் சுற்றிப் பார்த்து அங்கிருந்தவர் களின் பல ஐயப்பாடுகளைக் கேட்டுத் தெரிந்துகொண்டார். தில்லைமரம் ஸ்தல விருட்சம் என்று அறிந்து, தம் வீட்டுத் தோட்டத்தில் அம்மரத்தை வளர்த்தார். செல்வம், கல்வி இரண்டும் அவர்பால் இருந்தன. செல்வத்தைக் கல்வித்துறையில் செலவழித்துப் புகழைப் பூண்டார்.

இராமநாததுரை பற்றிய இக்கட்டுரை உ.வே.சா.வின் செய்ந் நன்றியறிதலைப் புலப்படுத்தும் கட்டுரையாகும். இக்கட்டுரை கருத்துவிளக்கக் கட்டுரையாகும். சின்னச் சின்னத் தொடர்களை அமைத்து மிக எளிதாக எழுதியுள்ளார்.

"அவர் செல்வத்தைப் படைத்திருந்தார். மேன்மேலும் ஈட்டினார். அறம் புரிந்தார். இன்பம் துய்த்தார். அறிவுத்துறையில் பொருளைப் பயன்படுத்தித் தம் உழைப்பை இறவாமல் செய்துவிட்டார்" (ப.132) என்ற பகுதியை இதற்குச் சான்றாகச் சுட்டலாம்.

ஹரதத்தரின் சிவபக்தி

இக்கட்டுரை 3.8.1941 இல் கல்கியில் வெளிவந்தது. ஹரதத்தர் சிறந்த சிவபக்தர். அவர் சுருதி சூக்தமாலை, சுலோக பஞ்சகம் முதலிய நூல்களை எழுதியவர். வேதாகமங்களிலும் சாஸ்திரங்களிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர்.

ஒருநாள் திருவிடைமருதூர் கோயிலில் ஜபம் செய்யும்போது ஒரு நாய் உள்ளே வந்து, அவர் அருகிலுள்ள அபிஷேக தீர்த்தத்தை நக்கியது. ஹரதத்தர், நாய் உண்டு எஞ்சிய தீர்த்தத்தைச் சிவனுக்கு அபிஷேகம் செய்தார். அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்டனர். "ஸ்ரீ ருத்ரத்தில் நாயாகவும் நாய்க்குத் தலைவனாகவும் இருப்பவன் பரமசிவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவேதான் நாயுண்டு எஞ்சிய தீர்த்தத்தை அபிஷேகத்துக்குப் பயன்படுத்தினேன்" என்றார். கேட்டோர் மகிழ்ந்தனர்.

பிறிதொரு சமயம், கோயிலில், கணிகையர் சிலருக்கு அரசு அதிகாரிகள் கடுந்தண்டனை கொடுத்துக் கொண்டிருந்தனர். அண்ணாந்தாள் பூட்டிக் கணிகை முதுகில் கல்லை ஏற்றிக் கையில் பிரம்பு கொண்டு அடித்துத் துன்புறுத்தினர். ஹரதத்தர் காரணம் கேட்டார். இவர்கள் ஆலயத்துக்கு ஒரு வாரமாக வரவில்லை. சரியாகப் பணியாற்றவும் இல்லை என்றனர். உடனே ஹரதத்தர் அழுது புரண்டார். காரணம் கேட்டபோது, நீங்கள் அவரைத் தண்டித்தது பற்றி நான் துக்கப்படவில்லை. 'பரமேசுவரனது கைங்கரியத்தைச் சரியாகச் செய்யவில்லை என்று நம்மையும் தண்டித்துத் தூண்டுபவர் இல்லையே என்றுதான் அழுகிறேன்,' என்றார். ஹரதத்தரின்

சிவபக்தியைக் கேள்வியுற்று உ.வே.சா. இக்கட்டுரையில் எழுதியுள்ளார். அந்நாளில் வேந்தர்கள் பெண்களில் சிலரைக் கோயிலுக்குக் கணிகையர்களாக நியமித்துப் பணியாற்றாதபோது கடுமையாகத் தண்டித்தும் வந்த செய்தியையும் இக்கட்டுரை இயம்புகிறது. பெண்ணுரிமை சற்றும் இல்லாத காலமாக அன்றைய முடியாட்சிக் காலம் இருந்ததை அறியலாம். பெண்களில் சிலரைக் கலையென்ற பெயரால் அவர்களை ஒதுக்கியும், போகப் பொருளாக்கியும், விருப்பம்போலத் தண்டனை கொடுத்தும் ஒடுக்கிய நிகழ்வுகள் வெறுக்கத் தக்கன.

நான் கேட்டபடி

ஆறுமுகநாவலரைப் பற்றி நான் கேட்டபடி என்ற கட்டுரையில் எழுதியுள்ளார். 'நான் கேட்டபடி' என்ற எச்சத் தொடரைத் தலைப்பாக்கி ஆர்வநிலையைத் தூண்டியுள்ளார்.

'யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலர் தூய்மையான வாழ்க்கை உடையவர். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் அப்பர் திருவாக்குக்கு இலக்கியமாக அவரைக் கூறலாம். சிறந்த பேச்சாளர்.

நன்னூலுக்கு ஒரு காண்டிகை உரை எழுதியுள்ளார். சில இலக்கிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இவருடைய சமகாலத்தவர்.

ஆறுமுக நாவலரின் தமிழ்ப்பணி குறித்த இக்கட்டுரையில் பேச்சுக்கலை குறித்த கருத்துகளை உ.வே.சா. வெளியிட்டுள்ளார். வேறு சில தகவல்களையும் தந்துள்ளார். "தமிழ்ப் புலவர்களில் கவி, கமகன், வாதி, வாக்கியமென நான்கு வகையினர் உண்டு. எந்தச் சமயத்திலும் கொடுத்த விஷயத்தைக் குறித்துத் தெளிவாகப் பேசும் ஆற்றல் உடையர் என்று சொல்வார்கள். அதனையே, 'நாவலர்' என்று தமிழில் கூறலாம்" (ப.187) என்று விளக்கம் தருகிறார்.

பாபநாச முதலியார்

இக்கட்டுரை 28.12.1941 இல் ஆனந்த விகடனில் வெளிவந்தது. நந்தன் சரித்திரக் கீர்த்தனை பாடிய கோபாலகிருஷ்ண பாரதியார் வாயிலாகக் கேட்டு எழுதிய கட்டுரை இது.

பாபநாச முதலியார் கீர்த்தனங்கள் இயற்றியுள்ளார். சங்கீதம் தெரிந்தவர் அவர்களுடைய சாகித்தியம் என்றால் அதற்குத் தனிக் கௌரவம் உண்டு. உ.வே.சா.வின் தந்தையார் வேங்கடசுப்பையரும் பாபநாச முதலியாரின் நூற்றாண்டில் வசித்தவர். தஞ்சையை ஆண்ட மகாராஷ்டிர

மன்னராகிய ஏகோஜி என்பவர் இவரை ஆதரித்தார். கும்பேசர் குறவஞ்சி நாடகத்தையும் இவர் இயற்றியுள்ளார். இவருடைய கீர்த்தனங்களைப் பல இசை வித்தகர்கள் பாடியுள்ளனர்.

இக்கட்டுரையில் கும்பேசர் குறவஞ்சியிலிருந்து மேற்கோள் காட்டிக் குறவஞ்சி நூலின் சிறப்பை உ.வே.சா. கூறியுள்ளார். கருத்து விளக்கக் கட்டுரையாக இருக்கிறது. "அவர் இயற்றிய குறவஞ்சி மறைவில் இருக்கிறது. அந்த வாடகம் உலக அரங்கில் ஏறுங்காலம் எப்போது வருமோ?" என்ற ஆதங்கத்தோடு கட்டுரையை முடித்துள்ளார்.

உ.வே.சா. சங்கீதம் அறிந்தவர். இசைக்கலைஞர்களோடு பழகியவர். எனவே சங்கீதம் குறித்த பல செய்திகளை இக்கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளார்.

நாடகக்கலை குறித்த கட்டுரை

நாடக இலக்கியத்தின் சிறப்பு, நாடக இலக்கணங்கள் நாடக வகைகள், பிற்காலத்து நாடகங்கள் என்று பிரித்துக் கொண்டு கருத்துகளைச் சங்கிலித் தொடர்போலக் கோர்த்து நிரல்பட அமைத்துச் சுவைபட உ.வே.சா. எழுதியுள்ளார்.

"தமிழை இலக்கணம், இலக்கியம், கலையென்னும் மூன்று பிரிவாகப் பிரிக்கின்றார் ஒரு புலவர்.

பஞ்சிபடா நூலே பலர்நெருடாப் பாவேகண்
டெஞ்சியழுக் கேறா வியற்ற கலையே

என்று தமிழ் விடுதூதில் ஒரு கண்ணி இடம்பெறுகிறது. இது இதில் நூல் என்பது இலக்கணத்தையும், பா என்பது இலக்கியத்தையும், கலை என்பது இசை நாடகம் முதலிய கலைகளையும் குறிப்பதாகும்.

இசையும் நாடகமும் கலைகளில் சிறந்தன. அவ்விரண்டனுள் நாடகம் தலைமை பெறுவது. அதன்கண் இயலும் இசையும் இசைந்து நிற்கும். சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதை இசை, நாடகம் பற்றி எடுத்துரைக்கிறது.

பரதம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், பஞ்சமரபு, பரதசேனாபதீயம், மதிவாணர் நாடகத் தமிழ் முதலியன நாடகத்தின் இலக்கணம் நவிலும் நூல்கள்.

தொல்காப்பியத்தில், 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்,' என்று வரும் நூற்பாவில் புலவர்கள் நாடக இலக்கியங்களைப் பெரும்பாலும்

கலிப்பாவினாலும் பரிபாடலினாலும் இயற்றுவர் என்ற மரபு பின்பற்றப் படுகிறது. பழங்காலத்தில், 'விளக்கத்தார் கூத்து,' என்ற நாடகநூல் இருந்ததாகத் தெரிகிறது.

இந்த நாடகங்கள் அக நாடகம் என்றும் புற நாடகம் என்றும் இரு வகைப்படும். சத்துவ, ராஜஸ, தமோ, குணங்களினால் விளைந்த விளைவுகளைக் கூற்றினாலும் உடற்குறிப்பினாலும் தெரிவிக்கும் இயல்பை உடையது அக நாடகம். அகக்கூத்தில் பல்வேறு வகைகளும் உண்டு. வசைக்கூத்து, புகழ்க்கூத்து என்பன ஒரு வகை. வேத்தியல் பொதுவியல் என்பன ஒரு திறம். சாந்திக்கூத்து, வினோதக்கூத்து என்பன ஒரு பிரிவு. ஆரியம், தமிழ் என்பன ஒரு வகுப்பு. இயல்புக் கூத்து, தேசிக்கூத்து என்பன ஒரு வரிசை. இவ்வாறு இரண்டிரண்டாக அமைந்த பிரிவுகள் தம்முள் வேறுபட்ட அமைப்பை உடையன. இவற்றுள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு பிரிவுகள் உண்டு.

சான்றாக, சாந்திக்கூத்து என்பது நான்கு வகைப்படும். சொக்க நிருத்தம், மெய்க்கூத்து, அவிநயக்கூத்து, நாடகமென்பன அவை. இப்படியே வினோதக்கூத்து என்பது குரவை, கலிங்கம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை எனப் பலவாகும்.

இப்படியே புறக்கூத்து அல்லது புறநாடகம் என்பதும் வென்றிக் கூத்து முதலிய பல்வேறு வகைகளை உடையது.

நாடகம் பலவகைப்படும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு வகைப் பொருள்களை உள்ளுறையாக உடையது நாடகம். அறம் பொருளாகத் தெய்வமும் மானிடரும் தலைவராக வரும் நாடகத்தைச் சாத்துவதி என்பர். பொருள் பற்றிய வரலாறுகளைக் கூறுவதால் வீரராகிய மானிடர் தலைவராக வருவது ஆரபடி என்னும் நாடகம். காமம் பொருளாக இன்பச் சுவை தலைமை பெற வரும் அமைப்பை உடையதும், காமுகராகிய மக்கள் தலைவருமாக வருவதுமாகிய நாடகத்தைக் கைசிகி என்றும் வகைப்படுத்துவார். கூத்துத் தலைவனாக நடனும், நடியும் சேர்ந்து அபிநயங்களோடும் கூற்றுக்களோடும் நடத்துவது பாரதி என்னும் நாடகமாகும்.

ஒரு பழங்கதையை நாடகத்திற்கு ஏற்ப மாற்றி அமைத்துக் கொள்வதும் உண்டு. அதைச் சேதம் என்று சொல்வர். அஃது ஆரியமென்றும் தமிழென்றும் இருவகைப்படும்.

திருக்குறளிலுள்ள காமத்துப்பால் முழுதும் கூற்றுவகையாக அமைந்ததாதலின் அப்பகுதியை நாடக இலக்கியத்தின்பால் பகுக்கலாம்.

கோவை நூல்கள் பிற்காலத்து நாடகப் பிரபந்தமாகும். குறவஞ்சி, பள்ளு, நொண்டி என்பவற்றையும் நாடக வகைகளுள் சேர்த்தல் பொருந்தும். இச்சிற்றிலக்கியங்கள் பெரிதும் புனைந்துரை வகையைச் சேர்ந்தன.

சரித்திரத்தை நாடகமாக்கியுள்ளனர். இராஜராஜ நாடகம் என்பது அவற்றுள் ஒன்று. பிற்காலத்தில் கீர்த்தனங்கள் நாடகப் போக்கினைத் தழுவி வெளிவந்தன. அரிச்சந்திரன் கதை, இராமாயணக் கதை கீர்த்தனை வடிவில் வெளிவந்தன. பெரும்பாலான படிப்பதற்கு மாத்திரம் பயன்படுவனவாக உள்ளன. பல நாடகங்கள் இக்காலத்தில் வசனத்தில் எழுதப்பட்டு வருகின்றன.

நாடகம் குறித்துப் பல்வேறு தகவல்களைத் திரட்டிக் கருத்து விளக்கக் கட்டுரையாக இதனை உ.வே.சா. அமைத்துள்ளார்.

### தன்னுணர்வுக் கட்டுரைகள்

உ.வே.சா. கல்லூரி வாழ்வில் நேர்ந்த அனுபவங்களையும், ஒரு தடைப்பட்டுப்போன திருமணத்தைத் தாமே முன்னின்று நடத்திய அனுபவத்தையும் கொண்டு நான்கு கட்டுரைகள் எழுதியுள்ளார்.

### என்னுடைய ஞாபகங்கள்

சென்னை மாநிலக் கல்லூரி நூற்றாண்டு விழா மலரில் 1940 இல் எழுதிய கட்டுரை இது.

உ.வே.சா. முப்பத்தொன்பது வருடங்கள் தமிழ் பயிற்றுவித்த அனுபவம் பெற்றவர். மாநிலக் கல்லூரியிலும் சிலகாலம் தமிழாசிரியராக வேலை பார்த்தார். இக்கல்லூரி முதலில் பள்ளிக்கூடமாக இருந்து கல்லூரியாக வளர்ச்சி பெற்றது. இ.பி. பவல்துரை என்பவர் கல்லூரியின் முதல்வராக இருந்தார். கும்பகோணம் கல்லூரியில் இருந்த பலர் சென்னைக் கல்லூரிக்கு வந்து முதல்வராகவும் ஆசிரியராகவும் விளங்கினார்கள். தண்டலம் கோபாலராவ், பூண்டி அரங்கநாத முதலியார், ஆர்.வி. சீனிவாச ஐயர், போன்றோர் கும்பகோணத்திலும் சென்னையிலும் பணியாற்றிய பெருமக்கள்.

எஸ்.டி. ஸ்வாமிக்கண்ணு, எம். சேஷகிரி சாஸ்திரியார், போன்றோர் கல்லூரியில் அறிவியல்துறையில் பணியாற்றியவர்கள்.

உ.வே.சா. 1903ஆம் ஆண்டின் முடிவில் இந்தக் கல்லூரியில் பணியாற்றினார். 1919ஆம் ஆண்டு வரை பதினாறு ஆண்டுகள் இங்கிருந்தார். பெர்க் துரை, ஸ்டுவர்ட் துரை, ஜே.எச். ஸ்டோன் போன்ற ஆங்கிலேயர்கள் இக்கல்லூரியின் முதல்வர்களாக இருந்துள்ளனர்.

வ.உ.சி. சிறையிலிருந்தபோது, உ.வே.சா. அவருக்கு எழுதிய கடிதத்தைக் கல்லூரி முதல்வர் ஜே.எச்.ஸ்டோன் அவர் சார்பில் சிறைக்கு அனுப்பிவைத்தார்.

உ.வே.சா. இக்கல்லூரியிலிருந்து வெளியேறியபோது, தம் வேலையை அ.வை. அனந்தராமையருக்குத் தரும்படி கேட்டுக்கொண்டார். அதே ஆண்டில் உ.வே.சா.வின் படத்தைக் கல்லூரியில் வைக்க ஏற்பாடு செய்தார்கள்.

வேதியியல் துறைப் பேராசிரியராக இருந்த வில்ஸன் துரை என்பவர் அறிவியல் ஆராய்ச்சிக்குரிய அருமையான கருவிகளைச் சேகரித்தார். ஆல்பர்ட்துரை, சமஸ்கிருதப் பேராசிரியராக இருந்தார். மகாலிங்க ஐயர் இங்குத் தமிழாசிரியராக இருந்தார். மழவைச் சிங்கார சதகம் என்னும் நூலை இயற்றியவர். அவர் தமக்குப்பின், விசாகப் பெருமாளையர் என்னும் வித்துவானைத் தம் இடத்தில் இருக்கும்படி செய்தார். தொழுவூர் வேலாயுத முதலியாரும் இங்குத் தமிழாசிரியராக இருந்தவரே.

இந்தக் கல்லூரியில் மாணவர் தமிழ்ச்சங்கம் நடந்து வருகின்றது. பலர் இங்குப் பேசியுள்ளனர். தேசியக் கவிஞர் பாரதியார் இரண்டுமுறை சொற்பொழிவாற்றினார். இந்தக் கல்லூரி தொடங்கி நூறு ஆண்டுகள் ஆகியது ஒரு குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

உ.வே.சா. தம் மலரும் நினைவுகளை இக்கட்டுரையில் பகிர்ந்து கொண்டுள்ளார். விளக்கமுறையே இக்கட்டுரையில் பின்பற்றப்பட்டுள்ளது. அந்நாளில் கல்லூரிகளில் ஆங்கிலேயத் துரைகள் முதல்வர்களாகவும், உயர்குலத்தாரான ஐயர், அய்யங்கார் போன்ற ஒரு சில அடுத்த நிலையில் உள்ள உயர் சாதியினர் போன்றோர் பேராசிரியர்களாகவும் பணியாற்றி யுள்ளனர். தாழ்த்தப்பட்ட மக்கள் கல்லூரிகளில் பயிலவில்லை. மாணவர்களும் ஆசிரியர்களும் சாதிப் பெயர்களைத் தம் இயற்பெயரோடு இணைத்தே வழங்கி வந்தனர். ஓர் ஆசிரியர் பணிமுடியும்போது, அவர் விருப்பிற்கு மதிப்புக் கொடுத்து, அவர் சொல்லும் ஆளுக்கு வேலையை நிர்வாகம் தரும் போக்கினையும் உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார்.

பிரின்ஸிபால், காலேஜ், ஏகச்சந்தக்கிராகி, மாஸ்டர், பாஷை, ஸமஸ்கிருதம், உத்தியோகம், அபிமானம், ஸ்தாபித்தவர், ஜஸ்டிஸ் என்பன போன்ற பிறமொழிச் சொற்களை இக்கட்டுரையில் எடுத்தாண்டுள்ளார்.

வில்லைச் சேவகன்

இக்கட்டுரை 20.7.1941 இல் ஆனந்தவிகடனில் வெளியானது. நகைச்சுவைக் கட்டுரை. வில்லைச் சேவகன் என்பவன் கல்லூரியில்

எல்லோர்க்கும் சேவகம் செய்யும் தொழிலாளி. அவனுக்குக் கொடுக்கும் சம்பளம் போதாது. எனவே தனியாக அவனைக் கவனிக்கும் கல்லூரி ஆசிரியர்களுக்கே அவன் பணிபுரிவான்.

அவனுக்கென்று ஒரு தனிமரியாதை. எல்லா நுணுக்கமும், கல்லூரி அரசியலும், நிர்வாகப் போக்கும் என எல்லாம் அறிந்தவன். எங்கும் இருப்பவன்.

முதலில் உ.வே.சா. வேலை ஏவியதைக் கேட்டும் கேளாமல் போய்விட்டான். பணக்கார மாணவர்களை அவன் தனியாகக் கவனித்துக் கொள்வான். வில்லைச் சேவகர்கள் தனி வகுப்பு. ஜனங்களுடைய ஆவலை அளந்து பார்த்துச் சமயத்தில் 'பிகு' பண்ணுவதும், எந்தச் சமயத்தில் மனிதர்களிடத்தில் இலாபம் பெறலாம் என்பதை அறிந்து நடப்பதும் அவர்களுடைய தொழில் இரகசியங்கள். அவர்களுக்கு அவ்வப்போது காசுகளைத் தந்துவிட்டால், காரியம் சுலபமாக ஆகிவிடும். உ.வே.சா. இந்த உத்தியை அறிந்துகொண்டு, கவனித்தபோது வில்லைச்சேவகன் உ.வே.சா.வை நன்கு கவனித்துக்கொண்டான். கல்லூரியை விட்டு ஓய்வெடுத்த பின்னும், சேவகன் உ.வே.சா. வீட்டுக்கு வந்து செல்வான்.

இக்கட்டுரையை மனித வாழ்வியல் பற்றிய இரசனை உணர்வோடு உ.வே.சா. நகைச்சுவையாக விவரிப்பு நடையில் எழுதியுள்ளார். கட்டுரையின் தொடக்கமே பாத்திர உரையாடலோடு நாடகம்போல் தொடங்குகிறது.

'இந்தா, அப்பா, உன்னைத்தான். 'எனக்குப் பல தபால்கள் வரும். அவைகளை எடுத்துக்கொண்டு வந்து கொடுப்பாயா?' என்று நான் கேட்டேன்' (ப.160).

'என்ன சுறுசுறுப்பு! என்ன பரோபகாரம்! பள்ளிக்கூடம் திறந்த தென்றால் புது வருஷம் பிறந்ததுபோன்ற குதூகலம் உண்டாகும். அப்பொழுது அவன் உடம்பில் ஒரு புதிய முறுக்கு, முகத்தில் புதிய களை, உள்ளத்தில் புதிய சந்தோஷம் ஏற்படுகின்றன' என்று நகைச்சுவையோடு வில்லைச் சேவகன் செயல்பாடுகளை வருணித்துச் செல்கிறார்.

'ஸ்வாமி வரம் கொடுத்தாலும் பூஜாரி வரம் கொடுக்க வேண்டாமா! என்ற பழமொழியை மாற்றி, அதிகாரி வரம் கொடுத்தாலும் வில்லைச் சேவகன் வரம் கொடுக்க வேண்டாமா? என்ற புதுமொழியைச் சொல்லலாம்,' (ப.166) என்று புதுமொழியை உ.வே.சா. உருவாக்கியுள்ளார். 'மலையத்தனை சாமிக்குக் கடுகத்தனை கற்பூரம்,' (ப.166) என்ற சொல்லாடலையும் உ.வே.சா. பயன்படுத்தி உள்ளார்.

## ஆத்திரத்துக்கு ஏற்ற தண்டனை

கும்பகோணம் கல்லூரியில் உ.வே.சா. பணியாற்றியபோது, சுந்தரராவ் என்பார் உடன் பணியாற்றினார். ஒவ்வொரு நாளும் கல்லூரி ஆசிரியர்கள் இடைவேளையில் உண்பதற்குரிய உணவுகள் சுந்தராவ் வீட்டிலிருந்து வரும். தனி அறையில் சுந்தரராவ் சமையற்காரன் சிற்றுண்டியை வைத்துவிட்டுச் செல்வான். ஆசிரியர்கள் சுடச்சுட வைக்கப்பட்டிருந்த உளுந்த வடைகளின் வாசனையால் ஈர்க்கப்பட்டு, சுந்தரராவ் வகுப்பறையிலிருந்து வருவதற்குள் அத்தனை வடைகளையும் உண்டுவிடுவர். இப்படியே ஒவ்வொரு நாளும் நடந்தது. ஒருநாள் வடைகளை உண்ட ஆசிரியர்கள் அவை வேப்பெண்ணெய் நாற்றமடிக்கவே துப்பிவிட்டனர். வேண்டுமென்றே அவ்வாறு வடைகளைக் கொடுத்துவிடச் சொல்லியிருந்தார். பின்னர், வேறொரு பாத்திரத்திலிருந்து நல்ல வடைகளைத் தந்து சாப்பிடச் சொன்னார்.

உடன் பணியாற்றிய ஆசிரியர்களின் அவசரத்திற்கு ஏற்ற தண்டனையைச் சுந்தரராவ் வழங்கிய நிகழ்ச்சியை இக்கட்டுரையில் நகைச்சுவையாக வெளிப்படுத்தியுள்ளார்.

## தடைப்பட்டு நிறைவேறிய கல்யாணம்

உ.வே.சா. மிகுந்த பொறுப்புணர்வுடன் தடைப்பட்டுப்போன திருமணம் ஒன்றை நடத்திவைத்த சொந்த அனுபத்தை இக்கட்டுரையில் எழுதியுள்ளார். அந்நாளில் அந்தணர்கள் வீட்டுக் கல்யாணம் மூன்று நாட்கள் வரை நடைபெறும். ஆடம்பரமான விருந்து, அதிகச் செலவுகள், வீணான சடங்கு சம்பிரதாயங்கள் எல்லாம் நிகழும். பெண்ணைப் பெற்றோர்தான் மிகவும் கலங்கி நிற்பர். இளம்பருவத்தில் திருமணங்கள் நடப்பதால், தாய்மாமன்கள், மணமகளைத் தோளில் வைத்துக்கொண்டு ஆடுவதும், மணமகளை மடியில் வைத்துக்கொண்டு, தாலி கட்டச் செய்வதும் வழக்கமாக இருந்தது.

சென்னைக் கிறிஸ்டியன் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த கா.ஸ்ரீ. கோபாலாசாரியார் தம் பெண்ணுக்குத் திருமணம் நடத்த ஏற்பாடு செய்தார். கல்யாணத்துக்கு முந்தைய நாள் மாப்பிள்ளை அழைப்பு நடைபெற்றது. அவ்வாறு நடந்தபோது, பெண்ணையும் மாப்பிள்ளையையும் அவர்களுடைய அம்மான்மார்கள் தோளில் எடுத்துச் செல்வது வழக்கம். அதுவும் நிகழ்ந்தது. மகிழ்ச்சி எங்கும் நிறைந்தது. யாரோ ஒருவர் ஏதோ கூற, மாப்பிள்ளை வீட்டார் திடீரெனத் தாங்கள் தங்கியிருந்த இடத்திற்குத் திரும்பிவிட்டனர். மறுநாள் திருமணநாளன்று காலை மாப்பிள்ளை வீட்டார் எவரும் வரவில்லை. மாலைவரை திருமணம் நடக்கவில்லை. மாலை உ.வே.சா. வந்தபோது

திருமணம் நடைபெறவில்லை என்பதை அறிந்து கொண்டார். தாமே மாப்பிள்ளை இருக்கும் இடத்துக்குச் சென்றார். யாவரும் உணவில்லாமல் சோர்வாக இருந்தனர். உணவு உண்ணச் செய்தார். அவர்களோடு பேசியபோது, 'நீங்கள் எப்படிச் சொல்லுகிறீர்களோ அப்படி நடக்கிறேன்' என்று மாப்பிள்ளையின் தந்தை சொன்னார்.

உடனே மாலையில் நல்ல நேரம் பார்த்து முகூர்த்தம் நடைபெற்றது. திருமணம் தடைப்பட்டதற்குக் காரணம் சகுனத் தடை என்று அறிந்தார் உ.வே.சா. இருபக்கமும் பேசி நல்லதொரு திருமணத்தை நிறைவேற்றினார். இவரின் மனித நேயத்துக்குச் சான்றாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

வினா நடை

திருமணம் நின்றுபோனதைக் கேட்டுப் பதட்டம் கொண்டு மாப்பிள்ளை வீட்டாரை அணுகிப் பேசினார் உ.வே.சா. அப்பேச்சு வினா நடையில் அமைந்து, இக்கட்டுரைக்கு உணர்ச்சி வேகத்தைத் தருகிறது. "கல்யாணத்துக்காக எவ்வளவு விரிவான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்? எவ்வளவு பந்துக்கள் வந்திருக்கிறார்கள்? எவ்வளவு சிநேகிதர்கள் வந்து வந்து விசாரிக்கிறார்கள்? நீங்கள் திடீரென்று இப்படிச் செய்யலாமா? ஏதாவது தோஷத்தைக் கண்டீர்களா? முன்பே தீர யோசித்துத்தானே இந்தச் சம்பந்தத்துக்கு ஒப்புக்கொண்டிருப்பீர்கள்?" (ப.40)

ஒரு கதைபோல ஆர்வநிலையும், பாத்திர உரையாடலும் உணர்ச்சி வேகமும் கலந்து உ.வே.சா. விவரித்து எழுதியுள்ளார்.

கோயில்கலை குறித்த கட்டுரை

'நகரங்களும் ஆலயங்களும்,' என்ற கட்டுரை கோயில்கள் மக்கள் வாழ்வில் பெற்றுள்ள பங்கினை எடுத்துரைக்கிறது.

"மனிதர் ஒருங்கு கூடி வாழும் இடத்தில் தெய்வத்தைத் தலைமையாகக் கொண்டு வழிபட்டு வந்தனர். பரிபாடல், மதுரையில் கோயில் நகரின் நடுவில் இருப்பதை இயம்புகிறது. ஆலயம் இல்லாத ஊரில் அழகில்லை. கடவுளை மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களாலும் வழிபட வேண்டும்.

சிலப்பதிகாரம் கோயில்கள் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. கோயில்களால் தெய்வபக்தி நாட்டில் வளர்ந்தது. கோயில்கள் கலைகளை வளர்த்தன. பொதுச்சபைகள் ஆலயத்திலே நடந்தன. நியாய சபைகளும் கோயிலைச் சார்ந்து நடைபெற்றன. ஊரினது ஈடுபாடு திருவிழாக் காலத்தில் நன்கு காணப்படும். பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அரசர்கள்

கோயில்களுக்குத் தேவதானங்கள் அளித்தார்கள். கோயிலைச் சார்ந்து தீர்த்தங்களும் நந்தவனங்களும், செங்கழுநீரோடைகளும், பசுமடங்களும், இருக்கும். தலபுராணங்களும், இலக்கியங்களும் தோன்றின. ஆலய வழிபாட்டில் உடல் நலமும், மன அமைதியும் கிடைக்கிறது.

நினைவுமஞ்சரி நூலில் இருபத்தைந்து கட்டுரைகள் பல்வேறு பொருளில் இடம்பெற்றுள்ளன. மஞ்சரி என்பது எல்லாம் கலந்த தொகுப்பைக் குறிக்கும். செவிவழிச் செய்திகள், ஊர் பற்றிய தகவல்கள், அறிஞர்கள், கலைஞர்கள் குறித்தது, கலைகள் குறித்தது, தன்னனுபவம் சார்ந்தது என்று பல நிலைகளில் இக்கட்டுரைகள் அமைந்துள்ளன. கருத்து விளக்க நடையில் எளிமையாகவும் நாடகப் போக்குடனும், உணர்ச்சி மிக இவை எழுதப்பட்டுள்ளன.

பேச்சுக் கலையால் அமையும் நன்மைகளை நான்காகப் பகுத்துக் கூறியுள்ளார், அரிஸ்டாட்டில். நீதிக்குப் புறம்பாக நடைபெறும் தவறுகளைப் போக்கக் கூடியது (Corrective); அறிவூட்டும் தன்மை (Instructive); உடன்பாட்டிலோ எதிர்மறையிலோ குறிப்புப் பொருளைத் தெரிவிப்பது (Suggestive); அற்றம் காக்கும் கருவியாக இருக்கக்கூடியது (Difensive) ஆகிய நான்கு நன்மைகளை நல்கும் கலை பேச்சுக்கலையாகும். இத்தகு நான்கு நன்மைகளையும் உ.வே.சா. கட்டுரைகள் நல்குகின்றன. அத்தனைக்கும் மேலாக உ.வே.சா. வாழ்ந்த காலத்துக்கே வாசகனை இட்டுச் செல்லும் அனுபவ அறிவையும் ஆனந்தத்தையும் இவர் கட்டுரைகள் அள்ளித் தருகின்றன.

# 3. நான் கண்டதும் கேட்டதும்

உ.வே.சா. தம் வாழ்நாளில் கண்டதையும், கேட்டதையும் நினைவு கூர்ந்து கட்டுரைகள் ஆக்கியுள்ளார். உ.வே.சா. வின், 'நான் கண்டதும் கேட்டதும்' என்ற உரைநடை நூலில் பன்னிரு கட்டுரைகள் அமைந்துள்ளன. தனிப்பாடல்கள் சிலவற்றைப் பற்றிய வரலாறுகள் சில, திருநெல்வேலி தொடர்பான கட்டுரைகள் சில, மருதுபாண்டியர் பற்றிய கட்டுரைகள் இரண்டு, புலவர்களை ஆதரிக்கும் செல்வர்களின் பரம்பரைக் குணம் குறித்துக் கட்டுரைகள் மூன்று, நாட்டுப்புறக் கூத்து குறித்த கதை ஒன்று என்று பன்னிரு கட்டுரைகள் அமைந்துள்ளன. இத்தொகுதியில் உள்ளவற்றில் பரிவட்டத் தியானம் சுதேசமித்திரனிலும், பரம்பரைக் குணம், டிங்கினானே என்ற இரண்டும் ஆனந்த விகடன் தீபாவளி மலரிலும், முன்னால் எழுதிய ஓலை என்பது தினமணி, பாரதி மலரிலும் மற்ற கட்டுரைகள் கலைமகளிலும் வெளிவந்தவை. உ.வே.சா.வின் பரந்துபட்ட நூலறிவையும், தமிழுணர்வு வெளிப்பாடும் அனுபவச் செழுமையையும் இவை உணர்த்துவன. தன்னுணர்வு வெளிப்பாடும் உணர்ச்சி வேகமும், நாடகப் போக்கும் கொண்டு, சொல்லவந்த கருத்தைக் கேட்போர் மனத்தில் பதியும் வண்ணம் சுவைபட அமைந்தவை. அறிவூட்டலும், இன்புறுத்தலும் இக்கட்டுரைகளின் பயன்களாக உள்ளன.

## பாட்டுக்கு விளக்கம் தரும் கட்டுரைகள்

தனிப்பாடல்கள் சிலவற்றுக்குத் தாமே நிகழ்ச்சி நிகழும் களத்தைக் கற்பித்துக்கொண்டு, சுவையாக விளக்கநடையில் சில கட்டுரைகளை உ.வே.சா. அமைத்துள்ளார்.

### தமிழ் தந்த வளம்

திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த தம்பிரான்கள் தமிழறிவும், சைவப்பற்றும், மடத்தின்மேல் ஈடுபாடும் கொண்டவர்கள். மடத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அரசர்களையும், குறுநில மன்னர்களையும் சார்ந்து தம் தமிழ்ப்புலமையை வெளிப்படுத்திப் பரிசில்கள் வாங்கி வந்து, மடத்துக்குக் காணிக்கை ஆக்குவார்கள்.

அத்தகு இயல்புடைய ஒரு தம்பிரான் திருவனந்தபுரத்துக்குச் சென்று, அங்குள்ள அரசனைக் கண்டார். கோயிலுக்கு வந்த அரசனை, எதிரே சென்று வணங்கி ஒரு பாடலைக் கூறினார்.

“அரசே! நாம் செந்தமிழ்ப் பெண் முன்பு நம் சேர, சோழ பாண்டியர்களாகிய மூவரும் தம் தலைவணங்க மகிழ்ந்திருந்தோம். அவர்களுள் உன்குலத்து அரசன் சேரமான் பெருமாள் நாயனார் எம்மைச் சிவபெருமான் திருமுன்னர் அழைத்துச் சென்று நம்மை அழகு பெறச் செய்தார். நீயோ, ஆரியமாகிய பொதுமகள் கோபிப்பாள் என்று எண்ணி இங்கே எம்மை அறியாமல் இருக்கிறாய். ஆதலால் நாம், எம்மை வளர்த்த அகத்திய முனிவர்க்குரிய பொதிய மலைக்குப் போய்விடுகிறோம்” என்ற கருத்தமைந்த பாடலைக் கூறினார்.

மன்னன் தம்பிரான் சாதுரியத்தை அறிந்து மகிழ்ந்தார். தமிழைப் புறக்கணித்தது தவறென்று உணர்ந்தார். புலவரை ஆதரித்தார். பட்டுக்களும் பீதாம்பரங்களும் பூஜைக்கு வேண்டிய வெள்ளிப் பாத்திரங்களும் பிறவும் வழங்கினார். அவருக்கு ஒரு பல்லக்கு அளித்து அதனைச் சுமப்பவர் களுக்குரிய அடித்தூண் சம்பளத்துக்கு வேண்டும் பொருளையும் ஈந்தார். அவ்வாறு தமிழ் தந்த வளத்தை எல்லாம், திருவாவடுதுறை ஆதீனத்துக்குத் தம்பிரான் தந்தார். இந்நிகழ்ச்சியை, வித்துவான் தியாகராச செட்டியார் மூலம் உ.வே.சா. கேட்டறிந்தார்.

வறுமைப்புலி

சங்கர சிந்தாமணிப் புலவர் என்ற ஒரு கவிஞர் இருந்தார். வறுமையில் மிக உழன்றார். போடிநாயக்கனூரில் அக்காலத்தில் இருந்த ஜமீன்தார் தமிழ்ப் பயிற்சியும், புலமையும் உடையவர். அவர் ஒரு சமயம் பழனிக்கு வந்த போது புலவர் எதிர் சென்று ‘கூ கூ புலித் துரத்தி வருகிறது’ என்று கூவினார். ஜமீன்தார் அவரிடம், ‘என்ன செய்தி?’ என்று உசாவினார். உடனே பாடலாகத் தம்மை வறுமைப் புலி துரத்துவதாகக் கற்பித்து ஒரு செய்யுளைச் சொன்னார். ஜமீன்தார் அவரைத் தம்மோடு அழைத்துச் சென்றார். அவர்மீது சினம் கொள்வார்போல நடித்தார். அவருடைய அழுக்காடையைக் களைந்து அதைத் துப்பாக்கியில் சுட்டுவிட்டு, ‘தங்கள் வறுமைப் புலியைச் சுட்டு விட்டேன்’ என்று கூறி நகைத்தார். பல மாதங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் தக்க சன்மானங்களும் தந்து அவரை அனுப்பிவைத்தார்.

இந்தச் செய்தியை உ.வே.சா. ஹிருதயாலய மருதப்பத் தேவருடைய ஆஸ்தான வித்துவான் நால்வருள் ஒருவராகிய புளியங்குடி முத்துவீரப் புலவர் சொன்னதாகக் குறிப்பிட்டுள்ளார்.

விதியின் திறம்

உ.வே.சா. ஒரு செய்யுளுக்கு விளக்கமாக இப்புனைவுக் கட்டுரையை விவரித்துள்ளார்.

நாடெலாஞ் செந்நெல் விளையினும் நாட்டின்
நதியெலாம் நவமணி தரினும்
காடெல்லாம் ஆடை காய்க்கினும் மேகம்
கனகமே பொழியினும் மடவாய்
ஆடலே புரியும் அம்பல வாணர்
அவரவர்க்கு அமைத்ததே அல்லால்
வீடெல்லாம் கிடந்து புரண்டுருண்டு அழினும்
விதியலால் வேறுமொன் றுளதோ?"

என்ற செய்யுளுக்கு விளக்கமாகக் கதைபோல நிகழ்ச்சிகளைக் கற்பித்துக் கோர்வையாகக் கதை எழுதியுள்ளார் உ.வே.சா.

ஒரு புலவரும், அவர் மனைவியும் காட்டுவழி சென்றபோது கள்வர்களிடையே அகப்பட்டுக்கொண்டனர். அவர்கள் இவர்களை ஆதரித்துக் காப்பாற்றி வந்தனர். ஒரு சமயம் கள்வர்கள் திருடுவதற்காகப் புலவரை அழைத்துச் சென்றனர். அரண்மனைச் சுவரில் கன்னமிட்டுப் புலவரை முதலில் கள்வர் உள்ளே அனுப்பினர். உள்ளே சென்ற புலவர் கட்டில் அடியில் மறைந்திருந்தார். அரசனும் அவர் மனைவியும் நள்ளிரவில் விழித்துக் கவிதை இயற்றிக்கொண்டு தமிழ் இன்பம் சுவைத்தனர். அரசன் சொன்ன இரண்டு வரிகளுக்குப் பின்னர் மேலும் இரண்டு வரிகளைச் சொல்லி, அக்கவிதையை நிரப்ப முடியாமல் அரசியார் திகைத்தார். புலவரோ தம்மை மறந்து மீதி இரண்டடியைக் கூறிவிட்டார். மன்னர் எழுந்து புலவரைக் கண்டார். அவர் கதை அறிந்து இரக்கம் கொண்டார். தன் கருவூலத்தைக் காட்டி வேண்டியதை எடுத்துக்கொள்ளச் சொன்னார். அவர் அங்கிருந்து ஒரு பெட்டியை எடுத்துச் சென்றார். கள்வர்களோடு இணைந்து பெட்டியைத் திறந்து பார்த்தபோது, அதில் உப்பு அதுவும் உதவாத உப்பு வாண உப்பே நிறைந்திருந்தது. புலவர் மனம் நொந்து, 'விதியின் திறம் என்னே?' என்று வருந்திப் பாடினார்.

லாடு லட்டுச் சுமை

வேம்பத்தூர் சிலேடைப்புலி பிச்சுவையர், தம் சீடர் சுப்பையரோடு ஊற்றுமலையில் ஜமீன்தாராக இருந்த ஹிருதயாலய மருதப்பத்தேவர் என்பவரைக் காணச் சென்றார். ஜமீன்தாரின் குலதெய்வமாகிய நவநீத கிருஷ்ணஸ்வாமியின் ஆலயத்துப் பிரசாதம் லாடு, லட்டு, ஜிலேபி, தேங்குழல் முதலியன புகழ் பெற்றவை. ஒரு லாடு உரித்த தேங்காயளவு இருக்கும். தேங்குழல் பெரிய சந்தனக் கல்லளவு இருக்கும். அந்தப் பிரசாதங்களைப் பிச்சுவையர்க்குத் தந்தார். ஐயரும், சீடரும் அவற்றை முட்டையாகக் கட்டிக் கொண்டு மீண்டனர். முதலில் சென்ற சீடர், சுப்பையர்

லட்டை எடுத்துச் சாப்பிட்டார். பிச்சுவையர் 'என்ன இப்படிச் செய்துவிட்டாய்?' என்று கேட்டார்.

'இச்சுமையைப் பிச்சுவையர் என்றலையில் ஏற்றுவது இயல்பு தானோ?' என்றார். 'நீ செய்யுள் கூடவா செய்வாய்? உன் கையிலிருக்கும் பண்டம் முழுவதும் தின்றுவிட்டுப் பாட்டை நிறைவு செய்,' என்றார்.

எச்சகமும் புகழ்படைத்த என்னூற்று மலைமருதப்
பேந்திரன் போற்றும்
நச்சரவி னடிப்பவர்க்கு நைவேதித்து இட்டதிவ்ய
லாடு லட்டு
வச்சுவச்சுத் தின்றுதின்று வயிறுகுறை யாமன்மிக
வருந்தும் வேளை
இச்சுமையைப் பிச்சுவையா வென்றலையி லேற்றுவதும்
இயல்பு தானரோ?

என்ற பாட்டைப் பாடினார். குருவின் அருகில் இருந்து கற்று, தாமும் பாடும் திறனைச் சீடர் பெற்றார் என்பதை உ.வே.சா. விளக்குகிறார்.

## திருநெல்வேலி குறித்த கட்டுரைகள்

உ.வே.சா. திருநெல்வேலியில் ஏடு தேடி அடிக்கடி வந்து போயிருக்கிறார். திருநெல்வேலி பற்றி நிறைந்த செய்திகளை உ.வே.சா. அறிந்து, இக்கட்டுரையில் இயம்பியுள்ளார். 'இயற்கை வளம், நீர் வளம் மிகுந்த சீமை இது' என்கிறார். தாமிரபரணி நதி திருநெல்வேலிக்கு மட்டும் உரிமையானது. நவகைலாசங்களும், ஒன்பது திருப்பதிகளும் வேறுபல தலங்களும் இங்குண்டு. இங்குக் காந்திமதி சமேத ஸ்ரீ அனவரத நாயகர் கோயில் விளங்குகிறது. தாமிரபரணி ஆற்றின் மேல்கரையிலே குறுக்குத் துறை என்ற ஒரு துறை இருக்கின்றது. இத்துறைக்கு வடபாலுள்ள மற்றொரு துறை சிந்துபூந்துறை. குறுக்குத்துறையில் ஆற்றின் இடையில் திருவுருமாமலை என்ற சுப்பிரமணிய ஸ்தலம் ஒன்று உள்ளது. இக்கோயிலில் நித்தம் பூசைகள் செய்வோர் வந்து நிறைவர். ஆற்றில் நீராடி மண்டபத்தில் அமர்ந்து தியானம், பூசை முடித்துச் செல்வர். ஒரு சமயம் சைவப்பிரபுவாகிய செட்டியார் இங்கு ஆடம்பரமாக வெள்ளிப் பாத்திரங்களும் பட்டுப் பரிவட்டங்களும் வைத்துக் கொண்டு பூசை செய்துகொண்டிருந்தார். அவர் அருகில் சிவகுரு பழைய ஓலைப் பெட்டியில் உள்ள பித்தளைப் பாத்திரங்களையும், கந்தைப் பரிவட்டத்தையும் வைத்துக்கொண்டு அமர்ந்திருந்தார். செட்டியார், தமக்கு ஒரு புதிய பரிவட்டம் தருவார் என்ற எண்ணத்தோடு ஒரு செய்யுளை இயற்றிச் சொன்னார்.

நரிவட்ட மிடுங்களத்தி லந்தகா சுரனைவென்ற
நம்பா செம்பொற்
கிரிவட்டத் தனத்துமையாள் பங்காளா வெளியன்மொழி
கேளா தேனோ?
கிரிவட்டத் துரிபுனைந்த குறையோ? நஞ்செட்டியார்
கையின் மேவும்
பரிவட்டந் தனினைவோ வேண்டுமென்றால் அவரதனைப்
பாலிப் பாரே

என்ற அவரின் பாடலைக் கேட்ட கொடாக்கண்டனான செட்டியார்,

பண்டாரந் தொண்டை கட்டப் பாடிப்பாடிச்
செத்தாலும் எலும்பெலும்பாய்த் தேய்ந்திட்டாலுந்
தேவரீர் உடைமைஒன்றுஞ் செலவி டேனே

என்று பதில் சொல்லி விட்டார். திருநெல்வேலியில் இயற்கைத்தாய் வளம் அள்ளியள்ளித் தந்திருந்தாலும், சில செல்வர்கள் பிறர்க்குக் கொஞ்சமும் கொடுக்காத கஞ்ச உள்ளம் பெற்றிருந்தனர் என்பதை உ.வே.சா. எடுத்துரைத்துள்ளார். மேலும் தாமாக இட்டுக் கட்டிச் செய்யுள் இயற்றிப் பாடுவது அக்காலத்தில் மக்களிடையே வழக்கமாக இருந்திருக்கிறது என்னும்போது மகிழ்ச்சியாகவும் உள்ளது.

மானம் காத்த மைந்தன்

பெருமாளையர் என்னும் வித்துவான் திருநெல்வேலியில் இருந்த சைவ வேளாளப் பிரபுக்களின் பேராதரவால் அந்நகரில் வசித்து வந்தார். அவர் நெல்லை வருக்கக் கோவை என்னும் சிற்றிலக்கியத்தை எழுதி முடித்தார். திருநெல்வேலியில் உள்ள சாலிவாடீசுவரப் பெருமான் சந்நிதியில் அரங்கேற்றினார். அப்போது,

தேரோடும் வீதியெலாஞ் செங்கயலுஞ் சங்கினமும்
நீரோ டுலாவிவரும் நெல்லையே

என்ற காப்புச் செய்யுளைப் பாடியபோது, ஒருவர் எழுந்து, வீதியெல்லாம் செங்கயலும் சங்கும் நீரோடுலாவிவரும் என்று பாடியிருக்கிறீரே. வீதியில் கயலும் சங்கினமும் நீரோடு ஓடுகின்றனவா? என்றார். இதற்குப் பதில் சொல்ல இயலாமல், அந்நூல் அரங்கேற்றத்தை நிறுத்திக்கொண்டார்.

பல்லாண்டுகள் கழித்து அவருடைய குமாரர், அதே நூலைக் கோயிலில் அரங்கேற்றினார். அதே பாட்டுக்கு விளக்கம் தந்தார். "வீதியெல்லாம் தேரோடும், செங்கயலும் சங்கினமும் நீரோடு உலாவிவரும்

இத்தகைய நெல்லை,'' என்று பொருள் கொள்ள வேண்டும் என்று கூறிவிட்டு எல்லாப் பாட்டுக்களையும் பாடி, அரங்கேற்றத்தை முடித்தார். தந்தையின் மானத்தைக் காத்த மகனின் சிறப்பை உ.வே.சா. வுக்குச் சேலத்தைச் சேர்ந்த கதிர்வேற்கவிராயர் எடுத்துச் சொன்னார்.

### மருதுபாண்டியர்

மருதுபாண்டியர் சிவகங்கைச் சமஸ்தானத்திற்குத் தலைவராக இருந்தவர். கொடைத்திறனும், படைபலமும் மிக்கவர். தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தவர். தெய்வபக்தி உடையவர். கள்ளயார்கோவிலுக்கு ஒரு தேர் அமைக்க, பெரிய மரம் கிடைக்கவில்லை. திருப்பூவணத்தில் வையை ஆற்றிற்குத் தென்கரையில் ஆலயத்துக்கு எதிரே உள்ள மருதமரத்தைத் தேர்வு செய்தார். அங்கிருந்த புஷ்பவனக் குருக்கள் என்பவர், மரத்தை வெட்டக்கூடாது என்று தடை செய்தார். மருதுபாண்டியர், அவரை அழைத்துக் காரணம் கேட்டார். வறண்ட காலத்தில் வெய்யிலின் கொடுமையை ஆற்றிக் கொள்வதற்கு இம்மரம் உதவுகிறது. எவ்வளவோ காலம் இருந்து வருகிறது. இந்த அருமையான மரம் மகாராஜாவுடைய பெயரைத் தாங்கிக்கொண்டு நிற்கிறது. இதை வெட்டலாமா? என்று கூறினார். மருதுபாண்டியர் அவர் உணர்வுக்கு மதிப்புக் கொடுத்து மருதமரத்தை வெட்டுவதை விட்டுவிட்டார்.

### முள்ளால் எழுதிய ஓலை

மருதுபாண்டியர் பகைவர்க்கு அஞ்சித் தம் இறுதிக் காலத்தில் இடர்ப்பட்டார். ஒருசமயம் அவருடைய வலது கையில் ஒரு சிலந்தி உண்டாகி வருத்தியது. அதோடு பகைவர்க்கு இடம் கொடுக்காமல் தம் உதவியாளருடன் புறப்பட்டார். துரத்தி வந்த பகைவர்களை வளரி என்ற கருவியால் தாக்கி வீழ்த்தினார். பின், குதிரையைச் செலுத்தி ஒரு கிராமத்தை அடைந்தார். அங்கு ஒரு பாட்டி வீட்டில் அவளுதவியால் தங்கினார். அவள் கொடுத்த பழஞ்சோறும் பழங்கறியும் மருதுபாண்டியருக்கு அமுதமாய், சக்தியைக் கொடுத்தன. அங்குப் படுத்து இளைப்பாறி, மறுநாள் நன்றியோடு அந்தப் பாட்டிக்குப் பனையோலையில் முள்ளைக்கொண்டு அந்தக் கிராமத்தையே தானமாக எழுதிக்கொடுத்தார்.

அந்நியர் ஆட்சியில் மருதுபாண்டியர் தூக்கிலிடப்பட்டபோது, தாம் எவர் எவருக்கு எந்தெந்தக் கிராமத்தை அளித்தாரோ அவர் அவருக்கு அவை உரியனவாகும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பாட்டியும் அவ்வோலையைக் காட்டிப் பயன் பெற்றாள். அதோடு மருது பாண்டியர் முடிவுக்காகக் கண்ணீர் விட்டாள். இச்செய்தியை முத்துராமலிங்கத் தேவரும், சாமிநாத சாஸ்திரிகளும் உ.வே.சா.வுக்கு உரைத்தனர்.

### பரம்பரைக் குணம் போற்றும் கட்டுரைகள்

புலவர் சிலேடைப்புலி பிச்சுவையரின் மூத்த மகன் மகாதேவ பாரதி என்பவர் தம் தந்தையார்போலவே செய்யுள்கள் இயற்றுவதில் வல்லவர்.

பாஸ்கர சேதுபதியின் மாளிகையில் பல வித்துவான்கள் ஒருசமயம் கூடிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்நாளில் மின்சார வசதி இல்லாத காலம். காற்று இல்லாமையால், அதிக வெப்பமாக இருந்தது. பங்கா இழுப்பவன் அன்று எங்கோ போயிருந்தான். கூட்டத்தார் வியர்வையில் நனைந்தனர். மகாதேவ பாரதிக்குப் பங்கா இழுக்கத் தெரியாது. இருந்தாலும் ஆர்வத்தோடு, கயிற்று முடிச்சைக் கையில் பிடித்து இழுத்தார். அது கீழே வந்தது. பின்பு மேலே போயிற்று. கயிறைப் பிடித்துக் கொண்டிருந்த பாரதி மேலும் கீழும் போய்க்கொண்டு பங்கா இழுத்தார். காற்று வந்தது. சிறிது நேரத்தில் பங்கா இழுப்பவர் வந்து இவரை விடுவித்தார். உ.வே.சா. மகாதேவ பாரதியை, ‘இப்படிச் செய்யலாமோ?’ எனக் கேட்டார்.

கொங்கார் பொழில்புடை சூழ்முக வாபுரிக் கொற்றவனாம்
மங்காத கீர்த்தி வளர்பாற் கரமுகின் மாப்பிள்ளையின்
சிங்கார மாளிகை யிற்புலவோர்க்குச் சிரத்தையுடன்
பங்கா இழுப்பதுஎன் முன்னோர்கள் செய்திட்ட பாக்கியமே

எனப் பாட்டால் விடையிறுத்தார். பரம்பரைக் குணத்தால் கவிபாடும் ஆற்றலும், உதவிசெய்யும் மனப்போக்கும் ஒருவர்க்கு வாய்க்கும் என்பதை இக்கட்டுரையால் உ.வே.சா. உணர்த்துகிறார்.

### பரம்பரைக் குணம்

மிதிலைப்பட்டி என்னும் ஊரில் அழகிய சிற்றம்பலக் கவிராயர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவருடைய பரம்பரையானது தமிழ் வித்துவான்களுடைய பரம்பரையாகும். கவிராயர் நல்ல செல்வர். ஒரு திருமணத்துக்குச் செல்ல, ஒரு வண்டிக்காரனிடம் வண்டி பேசி அமர்த்திக் கொண்டார். நிலா வெளிச்சத்தில் வண்டி சென்றது. வண்டியோட்டியிடம் செல்வர், குடும்ப வரலாற்றைச் சொல்லிக்கொண்டு வந்தார். மிதிலைப்பட்டி என்னும் கிராமம் அக்காலத்தில் இந்தப் பக்கம் ஜமீன்தாராக இருந்த வெங்களப்ப நாயக்கரால் தமக்குக் கொடுக்கப்பட்டது. அந்த வெங்களப்ப நாயக்கர் அன்னத்தைத்தான் இப்பொழுதும் தம் பரம்பரை சாப்பிட்டு வருவதாக நன்றியுடன் கூறிக்கொண்டிருந்தார்.

ஊர் வந்தது. வண்டிக்காரன் உண்ண மறுத்தான். கூலி வாங்க மறுத்தான். காரணம் கேட்டபோது, "ஐயா நேற்று இராத்திரி உங்கள் முன்னோர்கள் கதையைச் சொல்லி வந்தீர்களே. அவர்களை ஆதரித்த வெங்களப்ப நாயக்கர் பரம்பரையில் பிறந்தவன் அடியேன். கொடுத்ததை வாங்கக்கூடாது. எங்கள் முன்னோர்களால் கொடுக்கப்பட்டவைகளில் ஒரு துரும்பையாவது உங்களிடமிருந்து வாங்கிக்கொள்ள என் மனம் துணியவில்லை" என்று சொல்லிவிட்டு வண்டியை அவன் ஓட்டிக்கொண்டே போய்விட்டான்.

பரம்பரைக் குணம் என்ற இந்தக் கட்டுரை நல்லோர் பரம்பரையின் நற்குணத்தை நவில்வதாகும்.

**சிற்பியை ஆதரித்த செல்வர்**

வெங்கனூர் கோயிற் சிற்பம் என்ற கட்டுரை சிற்பிக்குச் செல்வர் செய்த தொண்டைக் குறிப்பிடும் கட்டுரையாகும்.

துறைமங்கலத்தில் லிங்கப்பச் செட்டியார் என்பார் வசித்து வந்தார். அவருடைய மூத்தமகன் அண்ணாமலைச் செட்டியார். இவர் திருவெங்கைக் கோயிலைக் கட்டினார்.

கோயில் கட்டுவதற்கு வடதேசத்தில் இருந்து பஞ்சம் பிழைக்க வந்த சிற்பிகளைப் பணியில் அமர்த்தினார். தலைமைச் சிற்பி கோயிலில் சாரம் போட்டுக்கொண்டு, அதன்மேல் படுத்தபடியே அண்ணாந்து பார்த்துச் சிற்றுளியால் நுட்பமான வேலைகளை மன ஒருமையோடு செய்து கொண்டிருந்தான். அங்கு வந்த அண்ணாமலைச் செட்டியாரிடம் தலைமைச் சிற்பி, தம் அடைப்பைக்காரன் என்று எண்ணி அவரைப் பாராமலே கையை நீட்டினார். செட்டியார் தாம்பூல வெற்றிலையை அவர் கையில் திணித்தார். அதில் வாசனை மிகுந்திருந்ததை உணர்ந்து சிற்பி கீழ்நோக்க, அங்குச் செட்டியார் நிற்கக் கண்டு, வேகமாய் இறங்கிக் கீழே வந்தார். தன்னைப் பொறுத்தருளுமாறு கேட்டுக்கொண்டார்.

சிற்பிக்காக வெற்றிலை மடித்துக் கொடுத்த செல்வரின் அன்பைப் பாராட்டினார் சிற்பி.

**நாட்டுப்புறக் கூத்து**

நாட்டில் மேட்டுக்குடியினர் செவ்வியல் இலக்கியத்தையும் கர்நாடக சங்கீதத்தையும, கீர்த்தனைகளையும் அனுபவித்துக்கொண்டிருந்த காலமது.

பண்டிதர்களுக்கும், படிக்காதவர்களுக்கும் நிறைந்த வேற்றுமை இருந்த காலமது. தெருக்கூத்து நாடகங்கள் அந்த நாளிலும் கிராமத்துத் தெருக்களில் நடைபெற்றன. இராமாயண மகாபாரதக் கதைகள் ஊர் நடுவே மேடையில் நடித்துக் காட்டப்பட்டன. இக்கூத்தை விவசாயிகளும், பாமர மக்களும் விடிய விடிய விழித்திருந்து கண்டு மகிழ்வர்.

இத்தகு கூத்து நிகழ்ச்சியை விமர்சனம் செய்து சிரித்த நிகழ்ச்சியை, 'டிங்கினானே,' என்ற கட்டுரையில் உ.வே.சா. எழுதியுள்ளார்.

திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவன் சவேரிநாத பிள்ளை என்ற கிறித்துவர். மகாவித்துவான் சவேரிநாதபிள்ளையை மாயூரத்தில் உள்ள முன்சீப் வேதநாயகம் பிள்ளையைக் கண்டு ஒரு செய்தி சொல்லி வருமாறு அனுப்பினார்.

போனவர் இரவு இரண்டு மணிக்குத்தான் வந்தார். நேரே உறங்கப் போய்விட்டார். மறுநாள் மாயூரத்தில் தமக்கு நேர்ந்த அனுபவத்தை எடுத்துச் சொன்னார்.

'வேதநாயகம் பிள்ளையைச் சந்தித்துவிட்டு வழியிலுள்ள பெரிய மைதானத்துக்கு அருகில் வந்தபோது காலில் ஏதோ தட்டியது. இருட்டு மிகுதியாக இருந்ததால் கூர்ந்து கவனித்தபோது அங்கு மக்கள் அமர்ந்திருந்தது புரிந்தது. சற்று நேரத்தில் தூரத்தில் ஒரு மேடையில் வெளிச்சம் பரவியது. மேடையில் நடிகர்கள் தோன்றினர். ஒருவர் கையில் உடுக்கையும் மற்றொருவர் கையில் பம்பையும் இருந்தன. அவர்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லை. இடையிடையே 'ஆமாமா' என்ற சத்தமும் உடுக்கையின் ஒலியும் பம்பையின் முழக்கமும் கேட்டன. 'பீமசேன மவாராசா மவாராசா மவாராசா' என்றார் முதல்வர். ஆமாமா என்றார் பின்பாட்டுக்காரர். சிறிது நேரத்தில், 'டிங்கினானே, டிங்கினானே டிங்கினானே' என்று சொல்லி ஆலாபனம் செய்யத் தொடங்கிவிட்டனர். சவேரிநாத பிள்ளைக்கு அந்நாடகக் கதை மகாபாரதக் கதை என்று புரிந்தது. ஒரு வழியாக அந்தக் கூட்டத்திலிருந்து தலைவலியோடு வெளியேறினார்.

இந்நிகழ்ச்சியைச் சொல்லி எல்லோரும் சிரித்தனர். கிராமியக்கலை பற்றிய இரசனை உணர்வு, திருவாவடுதுறை மேட்டுக்குடி மக்களுக்குப் புலப்படவில்லை என்பதை இக்கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார், உ.வே.சா.

புலப்பாட்டுநெறி

உ.வே.சா. கண்டதும் கேட்டதும், கேட்போரை ஈர்க்கும் வண்ணம் கட்டுரைகள் ஆகியுள்ளன.

பன்னூல் பயிற்சி

உ.வே.சா. நிறைந்த நூல்பயிற்சி உடையவர். தம் கருத்துக்கு அணி சேர்க்கப் பல நூல்களிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார். வெங்கை உலாவிலிருந்து, சிவப்பிரகாச சுவாமிகளின் பாடல் வரிகளை, வெங்கனூர் சிற்பம் என்ற கட்டுரையில் மேற்கோள் கூறியுள்ளார்.

வெங்கை நகரிருப்பு வேண்டியே - பங்குபடு
பெண்ணாசை நம்பிபசும் பொன்னாசை பெற்றவுளம்
மண்ணாசை தானும் மருவுதலால் - விண்ணாசை
கொள்ளும் சிறப்புக் கொடுப்பத் - திருவுளங்கொண்டு
எள்ளும் குறியவுரு இன்றுபோய்த் - தெள்ளும்
கனவும் நனவுபோல் காட்டியிரந்து

அண்ணாமலை ரெட்டியார், சிவபிரானால் குறிக்கப்பட்ட இடத்தை அடைந்து கண்ட செய்தியை வெங்கை உலா குறித்துள்ளதை இவ்வரிகளால் உணர்த்துகிறார் உ.வே.சா.

'முள்ளால் எழுதிய ஓலை' என்ற கட்டுரையின் தொடக்கத்தில்

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

என்று திருக்குறளைச் சான்று காட்டியுள்ளார். பல தனிப்பாடல்களை அறிந்து அவற்றுக்குக் கட்டுரைகளாகவே விளக்கம் தந்துள்ளார்.

'கருப்பு இல்லிற்கு இணையில்லை என்னும் திருவெங்கை
வல்லகோலுக்கு வல்ல அண்ணாமலையார் கட்டு கோயில்'

என்று திருவெங்கைக் கோவையிலும்,

'மல்லலுறச் சந்தி
பொருந்தித் தகுஞ்சீர் கெடாதடுக்கிப் புந்தி மகிழற்
புதவணித்தா- முந்தையோர்
செய்யுள் போற் செய்த திருக்கோயில்'

என்று திருவெங்கை உலாவிலும் அக்கோயில் பாராட்டப்பட்டுள்ளது (ப.62) என்றெல்லாம் மேற்கோள் காட்டியுள்ளார்.

உவமைகளும் பழமொழிகளும்

மக்களிடையே வழங்கும் பழமொழிகளையே பொருத்தமாக உவமையாக்கியுள்ளார் உ.வே.சா.

> கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலவன்றோ ஆயிற்று

என்று (ப.12) ஜமீன்தாரின் கோபம் கண்டு அஞ்சும் புலவரின் நிலையை இப்பழமொழியின் மூலம் எடுத்துரைக்கிறார் உ.வே.சா.

> நம்முடைய வறுமைக்கு அஞ்சி, இவரிடம் வந்தது தேளுக்குப்
> பயந்து பாம்பின் வளையிற் கைவிட்டது போலாயிற்றே

என்று அவர் நிலையை உவமிக்கிறார்.

> இறங்குதுறையுள் நீத்து ஆனதுபோல ஆட்சேபம்
> உண்டாயிற்றே

என்று அரங்கேற்றத்துக்கு இடையூறு நேர்ந்தபோது பெருமாளையர் கலங்கியதை உவமிக்கிறார் உ.வே.சா. (ப.48).

> குலவிச்சை கல்லாமற் பாகம்படும்

என்ற பழமொழியை எடுத்துக்காட்டியுள்ளார்.

> புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

> முன்னே முளைத்த காதினிலும் பின்னே முளைத்த கொம்பு
> வலிதென்பதற்கு இலக்கியம் போன்றவர் இந்த இளையவித்துவான்

என்று பழமொழிகளால் இளைய புலவரின் பெருமையை உ.வே.சா.(ப.53) பாராட்டுகிறார். 'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே' என்ற அருமையான வாக்கியத்துக்கு இந்த வரலாற்றைவிட வேறு சிறந்த உதாரணம் கிடைக்குமோ? (ப.60) என்ற பழமொழியைச் சான்று காட்டியுள்ளார். 'அருஞ்சுரத்தில் தனிமரம் போல்' ஆதரித்த தங்களுடைய உபகாரம் மிகவும் பெரியது, (ப.69) என்று வெங்களப்ப நாயக்கரைப் புகழ்வதாக உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார். 'மேலைச்சாரம் எங்களப்பன், கீழைச்சாரம் வெங்களப்பன்' என்னும் பழமொழி ஒன்று அந்தப் பக்கத்தில் வழங்கி வருகிறது என்று புதிய பழமொழியை எடுத்துக்காட்டியுள்ளார் (ப.72). 'சிறைச்சாலையிலிருந்து விடுப்பட்டவனைப்போல வேகமாக நடந்து வரலானேன்' என்று மைதானத்திலிருந்து விடுபட்ட நிகழ்ச்சியை உவமிக்கிறார் உ.வே.சா.

சொல்விளக்கம்

'அபயநிரூபம்,' என்ற சொல்லுக்குப் பொருள் விளக்கம் தருகிறார். 'அபயநிரூபம் என்பது, பழைய காலத்தில் குற்றவாளிகளுக்கேனும் அஞ்சி ஓடி ஒளிந்து கொண்ட பகைவர்களுக்கேனும், 'நீங்கள் அஞ்ச வேண்டாம், இங்கே வந்தால் உங்களுக்கு ஒரு துன்பமும் நேராது,' என்று அரசர்களால் அவர்களுக்குள்ள பயத்தைப் போக்குவதற்காக எழுதப்படுவது (ப.75) என்கிறார். அவ்வாறே வளரி என்ற சொல்லுக்கு விளக்கம் தருகிறார். "அவ்வாயுதம் மரத்தாலேனும் இரும்பினாலேனும் வெண்கலத்தினாலேனும் செய்யப்பட்டிருக்கும். அதை வீசுவதன் மூலம் பலரை ஒரே தடவையில் கொன்றுவிடும் ஆற்றல் மருதுபாண்டியருக்கு உண்டு" (ப.82) என்கிறார்.

இக்கட்டுரைகளில் விளக்கநடை, வருணிப்புநடை உணர்ச்சி நடை, நாடகநடை போன்றவற்றைப் பின்பற்றியுள்ளார்.

வருணிப்பு நடை

"புலவர் ஜமீன்தாரின் கருவூலத்தைக் கண்டார், அவ்வறையில் பல வகையான ஆடையாபரணங்கள் நிறைந்திருந்தன. மூலைகளில் முத்து மாலைகளும் ரத்தின மாலைகளும், பொன் மாலைகளும் மாட்டப்பட்டுத் தொங்கின. கொடிகளில் உயர்ந்த பட்டுப் பீதாம்பரங்கள் இருந்தன. அவைகளை அன்றிக் கீழே சில பெட்டிகளும் இருந்தன" (ப.23) என்று வருணித்துக் காட்டுகிறார் உ.வே.சா.

"அவருடைய நெற்றியிலும் மேனியிலும் உள்ள திருநீறும் காதிலிருந்த ஆறுகட்டி சுந்தர வேடமும், மார்பில் விளங்கிய கௌரீ சங்கரத்தோடு கூடிய ருத்ராட்சமாலையும், ஜடாபாரமும் நீண்ட தாடியும், கடுங்காவி உடையும் அவர்களை அஞ்சச் செய்தன" (ப.5) என்று தம்பிரான் தோற்றத்தைத் தமிழ் தந்த வளம் கட்டுரையில் வருணித்துள்ளார்.

விளக்கநடை

இக்கட்டுரைகள் அனைத்தும் விளக்க நடையிலே அமைந்துள்ளன. கருத்துகளை விளக்கிக் காட்டுவதில் உ.வே.சா. தேர்ந்தவர். "செந்தமிழ் நாடாகிய பாண்டிவள நாட்டிற்குரிய பொதியில் மலையும் தாமிரபரணி நதியும் திருநெல்வேலிச் சீமையிலே விளங்குகின்றன. அருவிகளும் சோலைகளும் நிறைந்த மலைகள் அந்நாட்டின் இயற்கை அமைப்பை மிகவும் அழகு படுத்துகின்றன. மற்ற நதிகளைப் போலல்லாமல் தாமிரபரணி நதியானது

அச்சீமையினருக்கு மட்டும் உரிமையாக விளங்குகின்றது" (ப.57) என்று விளக்கிக் காட்டுகிறார்.

பரம்பரைக் குணம் என்ற கட்டுரையில் மிதிலைப்பட்டி என்ற கிராமத்தைக் கூறும்போது, அக் கிராமம் தனது ஆய்வுத் தேடலில் அவ்வூர் உதவிய பாங்கினை நினைவுகூர்ந்து விளக்கிச் சொல்கிறார். "மிதிலைப்பட்டி என்னும் ஊரை நான் எந்தக் காலத்தும் மறக்கமுடியாது. மணிமேகலைப் பதிப்புக்கு உதவியது மிதிலைப்பட்டியில் கிடைத்த பிரதியே" (ப.53) என்கிறார்.

'மிதிலைப்பட்டி சிவகங்கை ஸமஸ்தானத்தைச் சார்ந்தது. புதுக்கோட்டையைச் சார்ந்த திருமெய்யம் என்னும் இடத்திலிருந்து சில மைல் தூரத்தில் உள்ளது. அங்கிருந்து நான் பெற்ற ஏட்டுச் சுவடிகள் சில. அவற்றை எனக்கு உதவியவர் அழகிய சிற்றம்பலக் கவிராயர்' (ப.55) என்று ஊர் குறித்து விளக்கம் தருகிறார்.

உணர்ச்சி நடை

இக்கட்டுரைகளின் இடையே பாத்திர உணர்ச்சியை வெளிப்படுத்தி உள்ளார். "அப்பெட்டி முழுவதும் உப்பு நிறைந்திருந்தது. புலவருக்கு உண்டான வருத்தத்துக்கு எல்லையில்லை. எவ்வளவு சிரமப்பட்டுத் தூக்கி வந்தேன்! வேறு பெட்டியை எடுத்து வந்திருக்கலாகாதா? ஜமீன்தார் நினைத்திருந்தால் அங்கேயே என்னைக் கொன்றிருக்கலாம். அவர் திறந்து காட்டி எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள் என்றாரே... என்னுடைய துரதிர்ஷ்டம் இப்படியா வந்து முடிய வேண்டும்?" (ப.26) என்று புலவரின் உணர்வை உணர்ச்சி பொங்க உ.வே.சா. வெளிப்படுத்தியுள்ளார்.

நாடகப்போக்கு

கட்டுரையைக் கதைபோல நடத்த, நாடகப் போக்கைக் கையாண்டுள்ளார்.

குமார் : அம்மா! அப்பா இயற்றிய நூல் ஏதாவது உண்டா?

தாயார் :ஒரு புஸ்தகம் எழுதினார். அதை எழுதியது முதல்தான் அவருக்குச் சந்தோஷமே இல்லாமற் போயிற்று.

குமார் : அந்தப் புஸ்தகந்தானா இது (ப.50)

என்று உரையாடலை உ.வே.சா. அமைத்துள்ளார்.

பிறமொழிச் சொற்கள்

மணிபிரவாள நடை நிலவிய காலத்தில் உ.வே.சா. கூடிய மட்டும் வடமொழி கலவாது எழுதி வந்தார். இருப்பினும், வடசொற்கள் காலச் சூழலுக்கேற்பக் கட்டுரையில் இடம்பெற்றுள்ளன. ஸௌலப்யம், ஸமஸ்தானம், அனுகூலம், சுரோத்திரியம், பிரயாசை, பூஜா துரந்தரர், பிரார்த்தனை, ஜீவனம், பிரசங்கம் என்றெல்லாம் வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

நான் கண்டதும் கேட்டதும் என்ற நூலில் உ.வே.சா. எளிய இனிய தமிழ் நடையைக் கையாண்டுள்ளார். தன்னுணர்வு வெளிப்பாடும், நாடகப் போக்கும் இக்கட்டுரைகளில் வெளிப்பட்டுள்ளன. பாத்திர வருணனை, சொல் விளக்கம், சொந்த அனுபவம், உரையாடல், தகவல்கள், இலக்கியங்கள், புராணங்கள் போன்ற சொற்கோப்புக்கலை உத்திகளைக் கையாண்டு வாசகர்களை மகிழ்வித்தும், அறிவூட்டியும் தாம் வாழ்ந்த காலத்துக்கே உ.வே.சா. அழைத்துச் செல்கிறார்.

# தொகுப்புரை

உ.வே.சா.வின் அறுபது ஆண்டுகாலப் பேருழைப்பு தமிழுக்கு ஏற்றமும், எழுச்சியும் வழங்கியது. உ.வே.சா. பல்துறை வித்தகர். செவ்வியல் மரபுக்கவிஞர். இசைக்கலைஞர், உரையாசிரியர், உரைநடை நூல்களின் ஆசிரியர், பதிப்பாசிரியர், பேச்சுக்கலை வல்லுநர். 1878 ஆம் ஆண்டில் தொடங்கிய இலக்கியப்பணி 1942 வரை தொடர்ந்தது.

உ.வே.சா. எழுதிய உரைநடை நூல்களில் நல்லுரைக் கோவை (மூன்றாம் பாகம்), நினைவு மஞ்சரி (இரண்டாம் பாகம்), நான் கண்டதும் கேட்டதும் ஆகிய மூன்று நூல்களின் வாயிலாக அவர்தம் புலப்பாட்டு நெறியை அறியலாம்.

புலப்பாட்டு நெறி என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் கேட்போரின் மனத்தில் பேசுவோன் தன் கருத்தைப் பதிய வைக்கும் முயற்சியைக் கண்டறியும் நெறியாகும். கிரேக்க நாட்டில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வழக்குமன்றங்களில் முதன்முதலாகப் புலப்பாட்டு நெறி பின்பற்றப்பட்டது. ஹிரோடோடஸ், தியூசிடைடஸ், திதியாஸ், கார்கியஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில், டெமாஸ்தனீஸ், சிசரோ போன்றோர் கிரேக்கத்தில் புலப்பாட்டு நெறியை வளர்த்தெடுத்தனர். உரோமன், பிரான்சு, இங்கிலாந்து நாடுகளிலும் இந்நெறி வளர்ந்தோங்கியது. தமிழிலும் இச்சொற்கோப்புக் கலை குறித்த சிந்தனை தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. பேச்சுக்கலை குறித்துத் திருவள்ளுவரும் அவை அஞ்சாமை அதிகாரத்தில் வெளியிட்டுள்ளார். விடுதலைப் போராட்டக் காலத்தில் பேச்சுக்கலையால் மக்களுக்கு விடுதலை உணர்ச்சியைப் பேச்சாளர்கள் தூண்டினர். ஆட்சியைத் தம் பேச்சு வன்மையால் அரசியலார் தம் வசப்படுத்திக் கொண்டனர். பேச்சுக் கலைக்கு உதவும் புலப்பாட்டு நெறி, எழுத்திலும் தொடர்ந்தது.

உ.வே.சா. அவர்கள் சொல்லாற்றல் மிக்கவர். பேச்சுக்கலையில் தேர்ந்தவர். உரைநடைத்திறனும் வாய்க்கப் பெற்றவர். அவர் தம் பேச்சும், அவ்வப்போது இதழ்களில் வெளியான கட்டுரைகளும் நூல்வடிவம் பெற்றுள்ளன. மணிப்பிரவாள நடை மிகுந்திருந்த காலத்தில் கூடியவரை நல்ல தமிழில் எழுதியவர். நல்லுரைக்கோவையில் பதினைந்து கட்டுரைகளும், நினைவு மஞ்சரியில் இருபத்தைந்து கட்டுரைகளும், நான்

கண்டதும் கேட்டதும் நூலில் பன்னிரு கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. மொத்தம் ஐம்பத்திரண்டு கட்டுரைகள் இந்நூல்களில் அடங்கியுள்ளன. பழங்கால நிகழ்வுகள், சைவத்திருமடங்கள் குறித்த நினைவுகள், பல்வேறு ஊர்கள் குறித்த தகவல்கள், பழங்காலப் பாடல்களுக்கு விளக்கங்கள், ஏடு தேடிய அனுபவங்கள், கல்லூரியில் பாடம்சொன்ன காலங்கள், இசைக் கலைஞர்கள், ஆசான்கள், ஆதீனத்தலைவர்கள், புரவலர்கள் குறித்த செய்திகள், இசைக்கலை, நாடகக்கலை, மகளிர் கல்வி குறித்த நுட்பமான விவரிப்புகள் போன்றவற்றைக் கட்டுரைகள் ஆக்கியுள்ளார். உ.வே.சா. அவர்களின் காலச்சூழலையும் வரலாற்றுப் பின்புலத்தையும் அவர் நூல்கள் வழி அறியலாம்.

நல்ல தமிழ்ச்சொற்களை இயன்ற மட்டும் பயன்படுத்தி உள்ளார். சிறுசிறு தொடர்களாக அமைத்துக் கொண்டார். நாடகப்போக்கில் கட்டுரைகளின் இடையே உரையாடல்களைக் கையாண்டுள்ளார். தன்னுணர்வுக் கட்டுரைகளாக அவை உள்ளன. உளப்பாட்டுப் பன்மையில், வாசகனையும் தன்னுடன் பங்கேற்கச் செய்துள்ளார். இதழ்களில் வெளிவந்தன ஆதலின் இவர் கட்டுரைகள் ஆர்வநிலையைத் தூண்டும் முறையில் அமைந்துள்ளன.

கதை சொல்லி விளக்குதல், காரணகாரியம் காட்டிக் கருத்தினை நிறுவுதல், மேற்கோள் காட்டுதல், பேச்சுவழக்கு ஆகிய புலப்பாட்டு உத்திகளை உ.வே.சா. பின்பற்றி உள்ளார். நகைச்சுவை உணர்வு இழையோட எழுதுவதிலும் உ.வே.சா. தேர்ந்தவர். பழகுதமிழில் பத்திரிகை நடையில் அவர் எழுத்து அமைந்திருக்கிறது.

'பேச்சாளன் பேசப்போகும் பொருளின் உண்மையை உண்மையாக அறிய வேண்டும். தலைப்பில் அமைந்த சொற்களுக்கு இலக்கணம் தர வேண்டும். பேசப்படும் பொருளைத் தகுந்த முறையில் பகுத்துக்கொள்ள வேண்டும். கேட்பவன் மனநிலையை அறிந்து பேச்சினை அமைக்க வேண்டும்,' என்ற பிளேட்டோவின் பேச்சுக் கலைத் திறனை உ.வே.சா.விடம் காணலாம்.

பேச்சுக்கலையால் அமையும் நன்மைகளை நான்காகப் பகுத்துக் கூறியுள்ளார் அரிஸ்டாட்டில். தவறுகளைப் போக்கக் கூடியது, அறிவூட்டும் தன்மையுடையது, குறிப்புப் பொருளைத் தருவது, அற்றம் காக்கும் கருவியாக இருக்கக் கூடியது என்பன அந்நன்மைகள் ஆகும். இத்தகு பயன்களை உ.வே.சா. கட்டுரைகளும் நல்குகின்றன.

பொருத்தமான இடங்களில் அணிகளைப் பயன்படுத்துவது, பொருளைக் கூறுவதில் ஒழுங்கு, நேர்மை, சொற்களை வரிசைப்படுத்தி அமைப்பதில் உள்ள சிறப்பு ஆகியன பேச்சுக்கலைக்குத் தேவை என்பார் லாஞ்ஜீனியஸ். உ.வே.சா.வும் தேர்ந்தெடுத்த கருத்துக்கேற்பத் தலைப்பிடுதல், தலைப்புகட்கு விளக்கம், கருத்துகளைப் பகுத்தும், தொகுத்தும், விரித்தும் கூறும்பாங்கு, ஆற்றொழுக்கான மொழிநடை ஆகியவற்றால் புலப்பாட்டுநெறியில் சிறந்து விளங்குகிறார் உ.வே.சா. தாம் வாழ்ந்த காலத்துக்கே வாசகனை இட்டுச் செல்லும் அனுபவ அறிவையும் ஆனந்தத்தையும் இவர் கட்டுரைகள் அள்ளித் தருகின்றன.

விளக்கநடையும், உணர்ச்சிநடையும், உளப்பாட்டு நடையும் இவர் மொழிநடையில் அமைந்துள்ளன. உ.வே.சா. வின் தனித் தன்மையை வெளிக்காட்டும் வகையில் அவர் மொழிநடை சிறந்து விளங்குகிறது. அறிவூட்டலும், இன்புறுத்தலும் இவர் கட்டுரைகளின் சிறப்பியல்புகளாக உள்ளன. பதிப்பாசிரியர் உ.வே.சா. என்பதோடு, சிறந்த பேச்சுக்கலை வித்தகர் என்பதையும் அவருடைய உரைநடை நூல்கள் உணர்த்துகின்றன.

*பேரா. முனைவர். கரு.அழ. குணசேகரன்*
*இயக்குநர்*

## துணை நூல்கள்


1. சாமிநாதையர், உ.வே., **நல்லுரைக்கோவை** (மூன்றாம் பாகம்), கபீர் அச்சுக்கூடம், திருவல்லிக்கேணி, சென்னை, 1942.
2. மேலது, **நினைவு மஞ்சரி** (இரண்டாம் பாகம்).
3. மேலது, **நான் கண்டதும் கேட்டதும்.**
4. மேலது, **ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்,** 1933.
5. மேலது, **கனம் கிருஷ்ணையர்,** 1936.
6. மேலது, **கோபாலகிருஷ்ண பாரதியார்.**
7. மேலது, **வித்துவான் தியாகராச செட்டியார்,** 1942.
8. சொல்விளங்கும் பெருமாள், பூ., **டாக்டர் உ.வே.சா. பதிப்புப்பணி - ஓர் ஆய்வு.**
9. தெட்சிணாமூர்த்தி, பி., **புலப்பாட்டு நெறி,** இலஞ்சியார் பதிப்பகம், திருநெல்வேலி, 1984.
10. அரவிந்தன், மு.வை., **உரையாசிரியர்கள்,** மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.
11. மீனாட்சிசுந்தரன், தெ.பொ., **நீங்களும் சுவையுங்கள்,** சர்வோதய பண்ணை, மதுரை.
12. Edward P.J. Corlett, Classified Rhetoric - For Modern Student, Oxford University Press, New York, 1971.